127

பாகிஸ்தானின் அவசியம்

JUL 1947

127

ஆக்கியோன்

S. A. அப்துர் ரெஜாக்ஷா காதிரி

இக்பால் பப்ளிஷிங் ஹவுஸ்

அடியக்கமங்கலம், தஞ்சை ஜில்லா

1947 [விலை ரூ. 1—0—0

V4497
N47
108213

சிறந்த முறையில் அரிய விஷயங்களைத் தாங்கி வெளிவரும்

வாரப் பத்திரிகை.

நெல்லை ஜில்லா முஸ்லிம்லீக் ஆதரவில் வெளிவருவது

முன்னேற்றம்

வருட சந்தா ரூ. 6—0—0. 6 மாத சந்தா ரூ. 3-8-0.

தமிழ் முஸ்லிம் உலகில் மறுமலர்ச்சியை உண்டாக்கிவரும்

கதிர்

(மாதம் ஒரு புத்தகம்)

வருட சந்தா ரூ. 6—0—0.

விபரங்களுக்கு: கதிர் காரியாலயம்

59, பிராட்வே, சென்னை.

பாகிஸ்தானின் அவசியம்

ஆக்கியோன்

S. A. அப்துர் ரெஜாக்ஷா காதிரி

இக்பால் பப்ளிஷிங் ஹவுஸ்

அடியக்கமங்கலம்

தஞ்சை ஜில்லா

வெளிநாடு விலை ரூ. 1—4—0

உரிமை பதிவு] 1947. [விலை ரூ. 1—0—0

எனது அறிவு அபிவிருத்திக்கும் அரசியல்

உணர்ச்சிக்கும், காரணஸ்தர்களான

எனது ஞானாசிரியர்

மர்ஹூம் அல்லாமா, செய்யத்

அப்துல்லா அல்ஹாதி மௌலானா அவர்களுக்கும்

எனது மதிப்பிற்குரிய தலைவர்

எம். முஹம்மது இஸ்மாயில் சாஹிப் அவர்களுக்கும்

இந்நூலைச் சமர்ப்பணம் செய்கிறேன்.

Printed at The Madras Law Journal (Branch) Press, Tirubuvanam, T.D.R. Post. For Iqbal Publishing House, Adiyakkamangalam 'B" Section to issue a Temporary Permit: D. Dis. P. Con. A/46 dated 28-1-47—C. 1000.

மதிப்புரை

தஞ்சை ஜில்லா ஜமீயத்துல் உலமாயே இஸ்லாம் தலைவரும் தஞ்சை ஜில்லா முஸ்லிம் லீக் உப-தலைவருமான ஆலி ஜனுப் அல்ஹாஜ் மௌல்வி S. A. முகம்மதுஅலி சாஹிப் (பாக்கவி) அவர்களின் மதிப்புரை.

பாகிஸ்தான் திட்டம் பத்துக்கோடி இந்திய முஸ்லிம்களின் உறுதியான லக்ஷியமாக மாறிவிட்டது. இதை மாற்றிவிடலாமென நினைப்பது முடியாத காரியமாகும். இந்திய முஸ்லிம்களின் இரத்தத்தில் இத்திட்டம் உரைந்து விட்டது. இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் ஏற்பட வேண்டுமானல் பெரும்பான்மையோர் கண்ணியமான முறையில் உடன்படிக்கை செய்துகொண்டு பாகிஸ்தான் திட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். காங்கிரஸ்காரர்களுடையவும் அவர்களின் பத்திரிகைகளுடையவும் கட்டுப்பாடான பொய்ப் பிரசாரத்தினல் முஸ்லிம்கள் ஏமாற்றமடையவில்லை யென்பதைத் தேர்தல் மூலம் நம் சென்னை மாகாண முஸ்லிம்கள் எடுத்துக்காட்டியதோடு சிறுபான்மை மாகாண முஸ்லிம்கள் பாகிஸ்தான் திட்டத்தில் திட நம்பிக்கையுடன் இருக்கிறார்களென்பதை ஸ்பஷ்டமாக மெய்ப்பித்து விட்டனர். பாகிஸ்தானை அடைவதற்கு எல்லா வகையான தியாகத்தையும் செய்ய மைனரிட்டி மாகாண முஸ்லிம்கள் காத்திருக்கிறார்கள்.

பாகிஸ்தான் சம்பந்தப்பட்ட நூல்கள் சரியான வகையில் நம் தமிழ்நாட்டில் வெளிவரவில்லை. அரசியல் எழுச்சியை ஊட்டக்கூடிய வகையில் பல நூல்கள் வெளிவரவேண்டும். ஜனுப் அப்துர் ரெஜாக்ஷா காதிரி அவர்கள் முஸ்லிம் லீகிற்கும் நம் தமிழ் நாட்டிற்கும் பிரசாரம்

மூலம் மிகவும் தொண்டாற்றி வருவது யாவரும் அறிந்ததே. இன்னார் அரசியல் சம்பந்தமான பிரசுரங்கள் வெளியிட முனைந்திருப்பது மிகவும் பாராட்டுவதற்குரியதாகும். இவர் தொகுத்துள்ள "பாகிஸ்தானின் அவசியம்" என்ற சிறிய நூல் பாகிஸ்தானின் அவசியத்தையும், இத்திட்டம் உலகிற்கு புதியதல்லவென்றும் நடைமுறைக்கு உகந்ததே என்பதையும் விளக்கியுள்ளார். நாம் அரசியலில் சரியான முன்னேற்ற மடையாமலிருப்பதற்குக் காரணம், அரசியல் விவகாரங்களில் அசிரத்தையாயிருப்பதேயாகும். எனவே நாம் சரியான கட்டுப்பாட்டுடன் ஒற்றுமையில் கவனம் செலுத்தி நிர்மாணத் திட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஜனாப் காதிரி சாஹிப் அவர்களின் முயற்சியை யான் மிகவும் பாராட்டுகிறேன். இவர்களுக்கு முஸ்லிம்கள் போதிய ஊக்கமளித்து இதைப்போன்ற இன்னும் பல பிரசுரங்கள் வெளிவர உதவியும் ஊக்கமும் அளிப்பார்களென்று நம்புகிறேன்.

கூத்தாநல்லூர்
25—11—46

இங்ஙனம்,
S. A. முகம்மது அலி சாஹிப்.

முன்னுரை

இன்று உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாக வாழவேண்டுமென்று கருதுகின்றான். இதை ஒப்புக்கொண்டு பல நாடுகள் சுதந்திரமாய் வாழ்கின்றன. இதை ஒத்துத்தான் இந்திய மக்களும் தங்களையாளும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் தங்களுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்று கோருகின்றனர். அதற்காக ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனமெனக் கூறப்படும் காங்கிரஸ் சபையின் நடவடிக்கைகள் அதன் தலைவர்களின் செயல் முறைகள் யாவும் பெரும்பான்மை ஹிந்து இயக்கமாக மாறிவிட்டது. அதன் காரணமாகவே இந்திய முஸ்லிம்கள் தங்கள் கலை நாகரிக வளர்ச்சியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டக் கருதி தனி ஸ்தாபனமாக, முஸ்லிம் லீகை அமைத்துக் கொண்டனர். பின்பு காங்கிரஸின் இந்து ராஜ்ஜிய ஸ்தாபித நோக்கத்தைத் தெரிந்து கொண்ட முஸ்லிம்கள் இந்தியாவில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகளில் முஸ்லிம் கலா ஞானத்தைப் பாதுகாக்கும் முறையுடன் கூடிய பாகிஸ்தான் அரசியலை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்கின்றனர். இது உலகில் ஒரு புதிய திட்டமல்ல. அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலும், ரஷ்யாவிலும், ஐரோப்பாவின் மற்றப் பகுதிகளிலும் இத்தகையதான ஆட்சி முறைகள் நடைபெற்று வருகின்றன. இந்தியாவில் பல்வேறு சமஸ்தானங்கள் தனியாட்சி செலுத்தி வருகையில், காங்கிரஸ்காரர்களே பாஷாவாரியாக மாகாணங்களைப் பிரித்து விடவேண்டும் என்று தீர்மானித்திருக்கும்போது முஸ்லிம்கள் கோரும் பாகிஸ்தான் திட்டம் மிக மிக நியாயமானதாகும். இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று கருதும் பெரும்பான்மையோர், இந்தியாவின் நான்கிலொரு பகுதியினர் கோரும் சுதந்திர சுய நிர்ணய உரிமையான

பாகிஸ்தான் திட்டத்தை ஏற்றுக் கொள்வதே சரியான வழியாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உண்மையாக இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்துவிட்டுத் தாங்கள் வெளியேறிவிட வேண்டுமென்று அவர்கள் கருதினால் முஸ்லிம்கள் கேட்கும் பாகிஸ்தான் திட்டம் சிறந்த வகையில் எல்லா வகுப்பார்க்கும் பொருத்தமான பாதுகாப்புகள் வழங்கப்பட்டு ஒழுங்காக நிர்மாணம் செய்திருப்பதைக் கண்டு சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டு இந்திய விவகாரத்தைப் பைசல் செய்திருக்கலாம். ஆனால், அவர்கள் அடிக்கடி கொண்டுவரும் திட்டங்கள் இந்திய மக்களிடத்தில் குழப்பத்தையும் கலகத்தையும் உண்டாக்கிவிடக் கூடியதா யிருக்கிறன. இதிலிருந்து நல்லெண்ணத்துடன் இந்தியாவை விட்டு வெளியேறாமல் பிந்தான இரு சமுதாயங்களிடையில் பிரித்தாளும் சூட்சியைக் கையாள்வதே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நடைமுறையாயிருந்து கொண்டிருக்கிறது. இங்கிலையைப் பெரும்பான்மையோர் அறிந்து சிறுபான்மையோருக்குச் சரியான பாதுகாப்புகளுடன்கூடிய சுயநிர்ணய உரிமையை என்று வழங்குகின்றார்களோ, அன்றே இந்தியாவின் நன்னாளாகும். சோதரீர்! "பாகிஸ்தானின் அவசியம்" என்ற இச்சிறிய நூலை யான் என் அறிவின் திறனால் இயற்றிவிடவில்லை. என்னிடம் எழுந்துள்ள உணர்ச்சியின் வேகத்தால் எழுதலானேன். பாகிஸ்தான் சம்பந்தப்பட்ட வகையில் நம் தமிழ் நாட்டில் போதிய நூல்கள் வெளிவரவில்லை யென்றே சொல்லவேண்டும். வடநாட்டில் ஆங்கிலத்திலும் உருதுவிலும் பலநூல்கள் வெளிவந்துள்ளன. எனவே இன்னும் பல நூல்கள் வெளிவரவேண்டிய தவசியமாகும். இச்சிறியேன் எமது ஆராய்ச்சிக்கு எட்டியவரையில், மார்க்க, அரசியல் சம்பந்தமான சில நூல்கள் தொடர்ந்து வெளியிடலா மென்று நினைந்துள்ளேன். என் உணர்ச்சியைத் தடுக்கா வண்ணம் அன்பர்கள் ஆக்கமளித்து உற்சாகப்படுத்துவார்களென்று நம்புகிறேன்.

இச்சிறிய நூல் எழுதுவதற்காகப் பாகிஸ்தான் சம்பந்தமான இதர நூல்களை ஆராய்ச்சி செய்ய எமக்கு உதவியளித்த எமதூர் S.M. முகம்மது அபுபக்கர், B.A. அவர்களுக்கு யான் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன். நெல்லை முன்னேற்றம் ஆசிரியர் அவர்கள் சில குறிப்புகள் தந்து உதவியதற்கு எமது நன்றி உரித்தாகுக. சீக்கிரமாய் அச்சியற்றிக் கொடுத்த, திருபுவனம் மதராஸ் லா ஜர்னல் அச்சுக்கூடத்தாருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இதை அன்புடன் ஆதரித்து இன்னும் பல புத்தகங்கள் வெளிவர அன்பர்கள் ஆதரவுகாட்டும் படியும் அன்பாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இக்பால் பப்ளிஷிங் ஹவுஸ்
அடியக்கமங்கலம்
22—5—47.

இங்ஙனம்,
S. A. அப்துர்ரெஜாக்ஷா
காதிரி.

இக்பால் பதிப்பக

இலக்கிய ஆலோசகர்கள்

ஜனுப் K. T. M. அஹமது இபுருஹீம் சாஹிப்
B. A., B. L., M. L. C.,
அட்வொகேட்,
காரியதரிசி, சென்னை மாகாண முஸ்லிம்லீக்,
2. செந்தோம் ஹைரோடு :: மயிலாப்பூர், சென்னை

ஜனுப் M. N. அப்துர்ரஹ்மான் சாஹிப்
தலைவர், திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம்லீக்,
தென்காசி.

ஜனுப் M. A. முஹம்மது இபுருஹீம் சாஹிப்
B. A., B. L., M. L. A.,
அட்வொகேட்.
தலைவர், தஞ்சை ஜில்லா முஸ்லிம்லீக்
தஞ்சாவூர்.

ஜனுப் அல்ஹாஜ், மௌல்வி S. A. முஹம்மதலிசாஹிப்
பிரின்ஸிபால்
மதரஸா—மன்பவுல்—உலா, :: கூத்தாநல்லூர்

ஜனுப். T. அப்துஷஹீது சாஹிப்
தலைவர்
தென்னாற்காடு ஜில்லா முஸ்லிம்லீக்,
நெல்லிக்குப்பம்.

பாகிஸ்தானின் அவசியம்

பாகிஸ்தானின் லக்ஷியம்

இம் மாபெரிய உபகண்டத்தில் இருந்துவரும் 40 கோடி மக்களின் எதிர்காலத் தலைவிதி என்னவென்றால் அவர்களுடைய விமோசனத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டிருக்கும் சக்திகள் நான்காக இருக்கின்றன. அவை யாவை எனில், பிரிட்டிஷ் மக்கள், இந்திய சமஸ்தானங்களின் மன்னர்கள், ஹிந்துக்கள், முஸ்லிம்கள், என்பவர்களாகவும் இருந்து வருகின்றனர். இந்த மகா விஸ்தீரணமுள்ள பெரிய உப கண்டத்தில் ஒரே ஜாதி, ஒரே ஐக்கிய இந்தியா என்ற அஸ்திவாரத்தின்கீழ் ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்தி விடலாமென்று எண்ணத் துணிவது மிகவும் நிதானமற்ற தன்மையாகும். இந்த பிரச்னை எவ்வளவுக்கெவ்வளவு நல்லெண்ணத்துடனே அதிகமாய் அலசிப் பார்க்கப்படுகிறதோ அத்துணைக்கத்துணை இந்தியாவின் எதிர்கால சுபீட்சத்திற்குரிய ஒரே பைஸல் இந்தியாவை பிரித்து விடுவதுதான் சாலச் சிறந்ததென எவரும் கூற முன்வருவார். அக்காரணத்தினாலேதான் பத்துகோடி இந்திய முஸ்லிம்களும் தங்களின் நிகரற்ற ஏகப் பிரதிநிதி ஸ்தாபனமாம் முஸ்லிம் லீக்கின் வாயிலாக சர்வ ஜாக்கிரதையுடனே யோசித்து அடியில் கண்டபடி இந்திய முஸ்லிம்களின் கொள்கையாகவும், லக்ஷியமாகவும் தீர்மானம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம்தான், மேற் சொல்லப்பட்ட நான்கு வகையினர்களும் தங்களுக்குள் சரியானபடி இந்திய பிரச்னையைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

அகில இந்தியா முஸ்லிம்லீக் அரசியல் திட்டத்தில் விளக்கியபடி அதனின் குறிக் கோள்:—

(1) பூகோள அமைப்பிற் கிசைந்து இயங்கும் எல்லைக்குட்பட்ட தேசத்தின் சில பாகங்களை ஒன்றுகூட்டி அதாவது, இந்தியாவின் வடமேற்கு, கிழக்கு பாகங்களில் முஸ்லிம்கள் எண்ணிக்கையில் மிகுதியாய் இருப்பதால், அப் பகுதிகளை முஸ்லிம்களின் சுய தேசீய தாயகமாக்கி, அங்கு மக்கள் செல்வாக்குள்ளதும் மூலாதாரக் கொள்கைகளில் போதிய அதிகாரம் படைத்ததுமான பூர்ண சுய ஆட்சியை நிர்மாணிப்பது.

(2) மேற் சொன்ன தேசப்பிரிவில் வாழும் சிறுபான்மை மக்களுக்கு அரசியல் திட்டத்தில் தெளிவு படுத்தியப்படி போதிய பலமும் அதிகாரமும் உள்ள பாதுகாப்பை அவர்களின் மதம், கலை, பொருளாதாரம், அரசியல், நாட்டு நிர்வாகம், இன்னும் இதர உரிமைகள், பாத்தியதைகள் — இவைகளின் தற்காப்பின் நிமித்தம் அச் சிறுபான்மையோர் ஆலோசனைக்கு இசைந்து அளிப்பது.

(3) இன்னும் முஸ்லிம் சிறுபான்மை பிராந்தியங்களில் அரசியல் திட்டத்திற் கிணங்க அவர்கள் மதம், கலை, பொருளாதாரம், அரசியல், நாட்டு நிர்வாகம் இன்னும் இதர உரிமைகள் பாத்தியதைகள்—இவைகளின் தற்காப்பின் நிமித்தம், போதிய பலமும், அதிகாரமும் படைத்த பாதுகாப்பை அச்சிறுபான்மை முஸ்லிம்களின் ஆலோசனைக்கு இணங்க அளிப்பது.

சுதந்திரக் கோரிக்கை

பாகிஸ்தான் என்பது முஸ்லிம்களின் சுதந்திரக் கோரிக்கை. ஏனெனில் முஸ்லிம்கள், பொதுமக்கள் ஆதரவு படைத்த சொந்த, உண்மையான அரசியலை நிர்மாணிக்க இயலும் என்று அவாவுறுகின்றனர். பாகிஸ்

தான் கவர்மெண்ட் பாகிஸ்தானத்து ஜனக்குழுவின் முடிவைக் கொண்டு ஜாதி வித்தியாசம் பாராட்டாது பொதுமக்கள் ஆதாவையும் பிரீதியையும் கொண்டு இயங்கும். (ஜின்னு, டெய்லி ஒர்க்கர் பேட்டி 5—10—44.)

சுதந்திரம் வேண்டுவோர் செய்ய வேண்டியதென்ன?

மக்கள் அடிமைத்தளையிலிருந்து விடுபடவேண்டுமானல் சுதந்திர நிர்ணயத்தின் அடிப்படையைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு வகுப்பார் மற்ற எந்த வகுப்பாரையும் தங்கள் பெரும்பான்மை பலத்தால் கீழ்ப்படிய வைத்து அதன் மூலம் தாங்கள் அதிபதிகளாய் ஆதிக்கம் செலுத்திவிட முடியாது. ஒரு வகுப்பாருக்கு மற்றொரு வகுப்பார் அரசியல் திட்டத்திலோ அதிகார ஆதிக்கத்திலோ எஜமானர்களாய் இருக்க எவரும் சம்மதிக்க மாட்டார்கள். நாட்டின் விடுதலையை மாத்திரம் காரணமாய்க் கொண்டு தங்கள் உரிமைகளைத் தியாகம் செய்ய எந்தச் சிறு பான்மை சமூகமும் சம்மதியாது. அவரவர்களின் கலாச் சாரம், கல்வி, பொருளாதாரம், பாதுகாப்பு இவைகளை அடிப்படையாகக் கொண்டு சுயநிர்ணய உரிமை வழங்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் தான் பெரும்பான்மையோர் சிறுபான்மையோருடன் அணுக வேண்டும். அதை விடுத்து நியாயமற்ற வகையில் பெரும்பான்மையோர் தங்களுக்குத் துரோகம் செய்ய மாட்டார்களென்ற நல்லெண்ணம் கொள்வதற்கு அரசியல் சரித்திரத்தில் ஆதாரமில்லை.

அமெரிக்கா போன்ற நாகரீக தேசத்தினர் இன்று சிறுபான்மையோர் விஷயத்தில் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை அச்சுயதேச நீக்குரோவர்கள் எப்படி அவமதிக்கப் படுகிறார்கள் என்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இன்று உலகில் அடிமை நாடுகள் விடுதலை அடைந்த வரலாற்றைக் கவனிப்போமாயின் அந் நாட்டு மக்களின் ஒன்றுபட்ட மனப்பான்மையின் மூலமே தான் சுபீட்சம் அடைந்தனர் எனலாம். உதாரணமாய் இன்று

ஈஜிப்ட் (மிசர்) விடுதலையடைந்த வரலாற்றை நோக்குவோமாயின் அந்நாட்டுச் சிறுபான்மை மக்களுக்கு அங்குள்ள முஸ்லிம் அரசியல் தலைவர்களும் பெரும்பான்மை முஸ்லிம் பொது மக்களும் தாராள மனத்தோடு தைரியமாக பல உரிமைகளை சிறுபான்மையோருக்கு விட்டுக் கொடுத்து பரஸ்பர ஒன்றுபட்ட மனத்தினராய் சுமுகமாய் அரசியல் நடத்துகிறார்கள். இந்தியாவை நினைக்குங்கால் வருந்த வேண்டியிருக்கிறது. ஏனெனில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கும்பலின் பிரித்தாளும் சூட்சிக்கு இந்தியாவில் இன்னும் இடமிருக்கிறது. ஒவ்வொரு நாட்டின் விடுதலை இயக்கத்திலும் தங்கள் பிடியிலிருந்து வழுவாவண்ணம் சமுதாயத்திற் கிடையில் பிளவையும், ஒற்றுமை யின்மையையும் உண்டாக்குவது பிரிட்டிஷ் அரசியல் பாரம்பரையாக இருக்கிறது.

இதற்கியைந்தவாறே இன்றைய ஹிந்து பெரும்பான்மை சமூகப் பிரதிநிதிகள் நடந்து கொள்கின்றனர். ஹிந்து காங்கிரஸின் சர்வாதிகாரியான திரு. காந்தியார் வெறும் செக்கில் கையெழுத்திட்டுத் தருகிறேன். இந்திய முஸ்லிம்களின் உரிமைகள் என்னென்ன வென்பதை அவர்களே நிர்ணயித்து எழுதிக் கொண்டுவந்தால் நான் ஒப்புக் கொள்கிறேன் என்று சொன்னார். அப்படிப்பட்ட திரு. காந்தியார்தான் இந்திய முஸ்லிம்களின் சுய நிர்ணய உரிமையான பாகிஸ்தான், நாட்டிற்குப் பாபகரமானது என்கிறார். பெரும்பான்மையோருக்குச் சிறுபான்மையோர் நிரந்தர அடிமைகளாகவும் ஏவலாட்களாகவுமே இருக்க வேண்டு மென்பதுதான் திரு. காந்தியின் அஹிம்சா மந்திரமாகும். இம் மந்திரத்தில் ஏனையோர் மயங்கியது போல தாழ்த்தப்பட்ட சம்மேளனத் தலைவர் அம்பேத்கார் காந்தீய மந்திரத்தில் கட்டுண்டு ஏமாற்றமடைந்தது போல் இந்திய முஸ்லிம்கள் ஏமாற்றம் அடையமாட்டார்கள். ஏனெனில் பத்துக் கோடி இந்திய முஸ்லிம்களின் இணையற்ற தலைவராகிய காயிதே ஆஜம்

ஜின்னாஹ் அவர்களிடத்தில் காந்திய மந்திரத்தை மடக்கும் மந்திரக்கோல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்திய சுதந்திரத்திற்கும் முஸ்லிம் அல்லாத மற்ற வகுப்பினர்களுக்கும் தங்கள் தங்கள் சுய நிர்ணயத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் தகுந்த திட்டம் பாகிஸ்தான் ஒன்றே சிறந்த வழியாகும். பாகிஸ்தான் திட்டத்தினுல் சுதந்திரமடைவது இந்திய முஸ்லிம்கள் மட்டுமே அல்ல. அதன் மூலம் இந்தியா முழுவதுமே விடுதலையடையும். அது மாத்திரமன்று. இந்தியாவை அடிமை நிலையில் வைப்பதை யொட்டி ஆசியா, ஆப்ரிக்கா கண்டங்களில் தங்கள் சுதந்திரங்களை இழந்து நிற்கும் இதர நாடுகளும் விடுதலையடைய ஹேது ஏற்படும். ஆகவே மனித கோடிகளின் நிலையான நன்மையை நாடுபவர் பாகிஸ்தான் திட்டத்தை ஆதரித்தே தீரவேண்டும். அப்படி ஆதரிக்கும் நாளே கீழ் நாடுகளின் நன்னுளாகும். அதை முழு உலகத்தின் நன்னுளெனவும் கொள்ளலாம்.

நாட்டைப் பிரிப்பது குற்றமா?

இன்று உலகத்தின் எந்த பாகத்தைப் பார்த்தாலும் அங்கெல்லாம் மக்கள், குழுவினர்கள், சுதந்திரத்தையும், சுயேச்சையையுமே தான் விரும்புகின்றனர். எப்படிப்பட்ட சுயேச்சை என்ருல் நாட்டின் அடிப்படையிலும், ஜாதிய மூலாதாரத்திலும் தனித்து வாழ அவாவுறுகின்றனர். ஏசுநாதரென்ற ஒரு தீர்க்கதரிசியை பின்பற்றக் கூடியவர்களான ஆங்கிலேய மக்கள் இன்று எந்த நிலைமையில் இருக்கிருர்கள் என்பதை உணர வேண்டும். தேசியத் தன்மையின் அடிப்படையில் நாட்டை ஆளவேண்டுமென்ற எண்ணம் மக்களிடம் மிக்க மலிந்து கிடக்கின்றன. சமீபத்தில் நடைபெற்ற மிகக் கொடுமையானதும் பயங்கரமானதுமான, மகாயுத்தத்தின் மூலகாரணம் என்ன என்று ஆராயும்போது தேசிய அடிப் படையிலும், ஜாதி அடிப்படையிலும் தான் ஹெர் ஹிட்லர் ஜெக்கோஸ்லோ

வேக்கியாவின் காரணத்தைக் கொண்டு ஒருவகுப்பினரை இன்னொரு வகுப்பார் ஆளக்கூடாது, என்ற மூலாதாரத்திலும் ஒருநாட்டான் இன்னொருநாட்டானை சுரண்டக்கூடாதென்ற திட்டத்திலும்யுத்தத்தை ஆரம்பித்தாரென, சிலர் கூறுகின்றனர். இன்று ஐரோப்பாவில் ஜெர்மானியன், பிரான்சுக்காரனை ஆளக்கூடாது; இங்கிலாந்துதேசத்தான், பிரெஞ்சுத் தேசத்தானை ஆளக்கூடாது. ஹங்கேரியனை, ஆஸ்டிரேலியன் ஆளக்கூடாது என்றப்,ஒவ்வொரு இனத்தவரும், தாமே ஆளவேண்டுமென்ற எண்ணம் அதிகரித்தும், அன்னியர்களின் ஆட்சியால் தங்கள் நாகரீகம், கலை, சமுதாய வளர்ச்சி, பொருளாதாரம் முதலியவைகள் சீர்கேடடைந்து வருவதைக் கண் கூடாகக் கண்டும் எவர்தான் வாளாயிருக்கத் துணிவர்? எனவேதான் சிறிய நாடானாலும் அவரவர்களும் தத்தம் கலை, நாகரீகப் பண்பாடுகளைக் கோரி நிற்கின்றனர். சில லக்ஷக்கணக்கானவும்; ஆயிரக் கணக்கானவும் எண்ணிக்கையில் உள்ள நாடுகளெல்லாம் தனி ஆட்சி புரிகின்றன. ஐரோப்பாவிலுள்ள சிறிய நாடுகளான ருமேனியா, ஹங்கேரி, ஸ்வீடன், நார்வே, டென்மார்க்கு, பெல்ஜியம் போன்ற நாடுகள் தனித்திருந்து ஒவ்வொரு இனமும் தனக்கென்று சொந்தமாக ஒரு தனி அரசு இருக்க வேண்டுமென்று விரும்பி ஆட்சிபுரிந்து வருகையில், வகுப்பிலும் கலாச்சார நாகரீகத்திலும் முற்றிலும் வேறுபட்ட இந்திய முஸ்லிம்கள் பத்துக் கோடி எண்ணிக்கையினர், தாங்கள் ஒரு சமுதாயத்தினர் என்றும் தங்களுக்கென்று ஒரு தனி அரசு இருந்தே தீரவேண்டுமென்று கோரும்போது இதில் எதிர்வாதம் செய்வதில் எத்தகைய நியாயமுமில்லை. இந்திய முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பிராந்தியத்தை அவர்கள் ஓர் இனத்தவர்கள் என்ற அடிப்படையின் கீழ் பிரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. அப்படிப் பிரிவினை ஏற்பட்டால் தான் முஸ்லிம்கள் முன்னேற்றமடையவும் இந்தியாவின் சுபீட்சத்தில் அக்கறை காட்டவும் முடியும். தவிர பெரும்பான்மை முஸ்லிம் மாகாணங்

களில் வதியும் முஸ்லிம் மக்களை ஹிந்து முதலாளி வர்க்கம் புரிந்துவரும் அநீதிகளுக்கும் பொருளாதாரச் சுரண்டலின் மூலம் ஏழை முஸ்லிம்கள் படும் அல்லல் நீங்குவதற்கு ஆஸ்பதமாயும் கல்வி, சீர்திருத்தம் முதலியவற்றின் மூலம் முன்னேறவும் தனி அரசு அவசியமானதாகும். பெரும்பான்மை மக்களை அதிகமாகக் கொண்ட பிரதேசங்களை அவரவர்கள் கலா ஞானங்களுக்கு ஹானி வராவண்ணம் பாதுகாப்புகளுடன் கூடிய அரசியல் திட்டம்தான் இந்திய சமுதாயத்தினருக்குச் சரியான அரசியல் அமைப்பாகும். ஒரு சமுதாயத்தை மற்றொரு சமுதாயத்தினர் மதித்து நடக்கவும் ஒருவருக்கொருவர் கண்ணியமாக வாழ்வதற்கு இனவாரியாக நாட்டைப் பிரித்து பாகிஸ்தான் நல்குவது தான் சாலச் சிறந்த வழியாகும்.

முஸ்லிம்கள் தனி சமுதாயத்தினரே

இந்திய முஸ்லிம்கள் தனி சமுதாயத்தினர்கள் அல்லவென்றும் அவர்கள் மதம் மாறினவர்களென்றும் அதனால், ஒரே சமுதாயத்தைச் சார்ந்தவர்களென்றும், திரு. காந்தியாரும், அவரது சீடர்களும் கூறிக்கொண்டிருக்கிறார்கள். திரு. காந்தியார் இப்படிக் கூறுவது உண்மையாகக் கூறுவதல்ல. அவர் ஒரு பக்கா ஹிந்து என்ற வகையில் ஹிந்து வேதங்களைத் தெரிந்தவர். ஹிந்து வேதம், முஸ்லிம்களை "மிலேச்சர்கள்" என்று கூறுகிறது. மிகத் தாழ்ந்தவர்கள் தீண்டத் தகாதவர்களென்பது அதன் கருத்து. இது ஹிந்துக்களின் வேதவாக்கு. ஆனால், முஸ்லிம்களின் வேதம் அப்படிக் கூறவில்லை. ஒருவன் ஹிந்துவாக இருந்து மதம் மாறியவனாயிருப்பினும் உடனே அவன் மதக் கடமைகளைத் தவிர்த்து இதர காரியங்களில் முஸ்லிம் அல்லாதவனைத் தன் சகோதரனைப் பாவிக்கவேண்டும் என்பது கட்டளை. இப்படிப்பட்ட கருத்துடையவர்கள் ஒரே இனம் என்று

கூறுவது எங்ஙனம் சாலும்? சமுதாயமென்பது என்ன வெனில் ஒரு சமுதாயத்தினர் தங்கள் சொந்தக் கூட்டத்தினருடன் ஒன்றித்திருக்க ஆசைப்படுவது, பிற இனத்தாருடன் ஒன்றுபட்டு கலந்து விட ஒத்துக் கொள்ளாமலிருப்பது; தங்களுக் குரிய பழங்கால சரித்திர மகத்துவம் கலா நாகரீக உயர்வு வாழ்க்கையின் உன்னதம், இவைகளை நன்கு உணர்ந்து, ஒரு தேசத்தை ஆட்சி புரியக் கூடியவர்களாகத் தங்களைச் செம்மைப் படுத்திக் கொள்ள வேண்டுமென்ற ஆசை யுடையவர்களாய் இருப்பது ஆகிய இவைகளே ஒவ்வொரு இனத்த வரை சமுதாயத்தினர் என்ற அந்தஸ்து அடையும்படி செய்கின்றன. இதற்கிணங்கதபடி இந்திய முஸ்லிம்கள் மதம் மாறினவர்களாகவோ, மதம்மாறியவர்களின் சந்ததியினராய் இருப்பினும் அவர்கள் ஒரு குழாத்தினராய் இருப்பது உண்மையே. மற்ற சமுதாயத்தியத்தினரோடு சேர்ந்து வாழ்வதற்கான இன அமைப்பு முஸ்லிம்களிடம் இல்லை. முற்றும் ஹிந்து சமயத்தார்களுக்குப் புறம்பான இன அமைப்பும் சட்ட திட்டங்களுடையவைகளாகவே இருக்கின்றன. இதில், தவறென்ன இருக்கிறது. ஆத்மார்த்த வாழ்க்கையிலிருந்து எல்லா வாழ்க்கை வகைகளுக்கும் நடை முறைகள் தனியானதாக முஸ்லிம்களுக்கு இருந்துகொண்டிருக்கிறது. இத்தகைய தனி கலாஞானத்தையுடைய முஸ்லிம்கள் தங்களை மிலேச்சர்கள் என்று கருதக் கூடிய ஹிந்து சமுதாயத்தினரோடு நாங்களும் உங்கள் இனத்தவரே என்று எப்படி ஒப்புக் கொள்ள முடியும். இந் நாடு இந்தியர் என்று கூறிக் கொள்ளும் முறையில் இந்தியாவில் ஓர் இனத்தவராய் இருந்ததில்லை. வெள்ளையரின் ஆட்சியில் ஒன்றாகக் கூறப்படும் இந்நாட்டில் என்றும், ஹிந்து, முஸ்லிம், சீக்கியர், கிறிஸ்தவர், தாழ்த்தப்பட்டவர்கள் என்ற பல இனத்தவர்களாகவே இருந்து வருகின்றனர்.

பெண்கள் மனித முன்னேற்றத்திற்கும் ஆன்ம வளர்ச்சிக்கும் தடையானவர்களென்றும் அவர்களுக்குச்

சம உரிமை கொடுக்கக் கூடாதென்றும் தங்களுக்குள்ளேயே ஜாதியவேறுபாடுகள் மதத்தின் பேரால் சிருஷ்டித்து, மனித வர்க்கத்துள் உயர்வு, தாழ்வு, கற்பித்து மக்கள் கூட்டத்தினரைப் பிளவு படுத்தக் கூடிய வகையில் வேத புராண இதிகாசங்களை வைத்திருப்பவர்களும், மக்களுள் உயர்வு தாழ்வு கூடாதென்றும் நேரிய முறையில் மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதும் ஓத்துக்கொள்ளக் கூடியதுமான திருகுர்ஆனை சட்டமாகக் கொண்ட முஸ்லிம்களும் எங்ஙனம் ஓர் இனத்தவராக முடியும்.

இந்திய முஸ்லிம்களாகிய நாம் ஒரு தனித்த சமுதாயத்தினரே யாவோம். முஸ்லிம்களாகிய நமக்கென்று சொந்தமாகத் தனிச் சரித்திரம் இருக்கிறது. தனியான சட்ட திட்டங்கள் இருக்கின்றன. தனியான கலாச் சாரமும், நாகரிகமும், மொழியும் இருக்கிறது. நாள், மாதம், வருடம் முதலியவற்றின் பெயர்கள் கூட இருக்கின்றன. ஹிந்துக்கள் சூரியனைக் கொண்டு நாட்கள் கணக்கிடுவதென்றால், நாம் சந்திரனைக் கொண்டு கணக்கிடுகின்றோம். வான சாஸ்திரம் கூடத் தனியாக இருக்கிறது. நமது வாழ்க்கைமுறை சமூக அமைப்பு, சிற்பம், காவியம், ஓவியம், இசை, கலை, இவையாவும் பிற சமுதாயத்தாருடன் சம்பந்தமற்றவைகளாகவே இருக்கின்றன. நம் சமூக அமைப்பு பொருளாதாரத் துறையிலும் கூட தனிப்பட்டவையாக இருக்கிறது. ஹிந்துக்களுக்கும் எல்லா வகையான கலாச்சார நாகரிகங்கள் தனித்ததாயும் முஸ்லிம்களுடைய கலை நாகரிகத்திற்கு முரண்பட்டதாயும் இருக்கையில் எந்த வகையில் ஓர் இனத்தவரென்று கூற முடியும்? இவ்வாறிருக்கையில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஓர் இனமென்றும் ஐக்கிய இந்தியாவே இந்தியாவுக்கு உகந்த திட்டமென்றும் எப்படிச் சொல்ல முடியும்? இத்தகைய அடிப்படை வேறுபாடுகளுடைய சமுதாயம் ஒரே அரசியலிலோ அல்லது ஒரே அரசியல் நிர்ணய சபையிலோ அரசாங்க

நிர்ணயம் செய்து கொள்ள ஒன்றுபட்டிருக்க முடியாது. எனவேதான் இந்தியாவில் பிரதான சமூகமான முஸ்லிம்களும் ஹிந்துக்களும் தனித்தனியான அரசியல் நிர்ணய சபை மூலம் தங்கள் தங்கள் இன அமைப்புக்குத் தக்கவாறு சிறுபான்மை பாதுகாப்புக்களுடன் கூடிய அரசியல் திட்டம் வகுக்க வேண்டுமென்று இந்திய முஸ்லிம்கள் விரும்புகிறார்கள். இப்படிப்பட்ட நிர்ண யத்தின் மூலம்தான் இந்திய முஸ்லிம்கள் வடமேற்கிலும், வடகிழக்கிலும், முஸ்லிம்கள் அதிகமாயுள்ள பிரதே சங்களை "பாகிஸ்தான்" முஸ்லிம் இந்தியா வாக்கிவிட வேண்டுமென்கிறார்கள். இத் திட்டப்படி ஒவ்வொரு சிறு பான்மையோர்களுடையவும் உரிமைகளை நன்றாக பாதுகாக்கப்படும். முஸ்லிம் இந்தியாவின் அரசியலில் சிறுபான்மையோர்கள் கண்ணியமாக நடத்தப்படுவார்க ளென்பதற்கு ஆதாரம் நோக்கின் உலக முஸ்லிம்களுடைய ஆட்சியில் பிற சமயத்தார் எவ்வகையில் நடத்தப் பட்டார்களென்பதை நேரிய மனப் பான்மை கொண்ட சரித்திராசிரியர்களால் எழுதப்பட்ட உண்மை இஸ்லாமிய அரசியல் சரித்திரங்களை உற்றுணர்ந்தால் நன்கு விளங்கும்.

சென்னை மாகாண முஸ்லிம்களின் இணையற்ற தலைவரும் முஸ்லிம் லீக் சட்டசபை கட்சி லீடரும் மாகாண முஸ்லிம் லீகின் தலைவரும், சென்னை அசெம்பிளி எதிர்க் கட்சித் தலைவருமான கனம். M. முகம்மது இஸ்மா யில் சாகிப் M.L.A. அவர்கள், இந்திய முஸ்லிம்கள் தனி இனத்தவரே என்பதை ஆராய்ச்சியுடன் நன்றாக விளக்கி யுள்ளார்கள். அவர்களின் ஆராய்ச்சியை எடுத்துக் காட்டுவது மேலெனக் கருதி அதைக் கீழ்க் கண்டவாறு தருகிறேன்:

சென்னை மாகாணத்தில் நடந்த தேர்தலில் முஸ்லிம் கள் நடந்துகொண்டது ஒப்பற்றதாகும். அத் தேர்தலின் முடிவின் மூலம் சென்னை மாகாண முஸ்லிம்கள் பாகிஸ்

தான் கோரிக்கையைப் பலமாக ஆதரித்து நிற்பதாகவும், பாகிஸ்தான் போராட்டத்தில் அவர்கள் முன்னணியில் நிற்பதாகவும் காட்டி விட்டார்கள். மற்ற மாகாணத்தி லுள்ள முஸ்லிம்களும் பாகிஸ்தானே தங்கள் லக்ஷியம் என்பதை தேர்தல் மூலம் உலகிற்கு எடுத்துக் காட்டி விட்டார்கள். முஸ்லிம்கள் முஸ்லிம் லீக்கை தங்களின் ஒரே ஸ்தாபனமாகக் கொண்டிருக்கிறார்கள்.

பாகிஸ்தான் அவர்களது அசைக்க முடியாத லக்ஷியம் என்ற உண்மைகளைப் பற்றி இனியாவது உலகத் தாருக்கு எவ்விதச் சந்தேகமுமிருக்க நியாயமில்லை.

முஸ்லிம்கள் தங்கள் ராஜீய திட்டத்திற்கு மதத்தை அஸ்திவாரமாகக் கொண்டிருப்பதேன்? என்பது ஐரோப்பியர்களுக்கும், அமெரிக்கருக்கும் சாமான்யமாக விளங்காது. இதற்குள்ள காரணங்களில் ஒன்றாவது, கீழ் நாட்டாரின் ஜீவிய முறை மதத்தின் பேரிலேயே அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், மேனாட்டில் அப்படியல்ல. மேனாட்டாரின் வாழ்க்கை முறையை உறுதிப்படுத்தும் காரியங்களில் மதம் ஒன்றுதான் ஆகும். ஆகவே மார்க்கத்தையே ஜீவியத்தின் அஸ்திவாரமாகக் கொண்ட முஸ்லிம்கள் தங்களது வாழ்க்கைத் துறைகளில் ஒன்றாகிய ராஜீய துறையிலும் மார்க்கத்தை அடிப்படையாகக் கொள்வதையே மேனாட்டார் விளங்கிக் கொள்வது எளிதான காரியமல்ல. இரண்டாவது காரணமாவது மேனாட்டாரின் பழக்கவழக்கத்திற்கும் மார்க்கங்களின் தன்மைக்கும் கீழ்நாட்டிலுள்ள மார்க்கங்களிலொன்றாகிய இஸ்லாம் மார்க்கம் சமத்துவம் சகோதரத்துவத்தைப் போதனையிலும் அனுஷ்டானத்திலும் கொண்டது. கீழ் நாட்டின் மற்றொரு மதமான ஹிந்து மதம், வருணாச்சிரம தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. மனிதர்கள் பிறப்பினால் வித்தியாசப்பட்டவர்கள். மாற்ற முடியாத வித்தியாசப் பட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்ற கொள்கையுடையது. இங்ஙனம் கீழ் நாட்டிலுள்ள

இஸ்லாம் மதத்திற்கும் ஹிந்து மதத்திற்குமுள்ள அடிப் படையான வித்தியாசத்தைக் காணலாம். ஆனால், மேல் நாடுகளிலோவென்றால், இவ்வித அடிப்படை வித்தியாசங் களுடையமதங்கள் இல்லை. அங்கிருப்பதெல்லாம் கிறிஸ் துவ மார்க்கத்தின் பல பிரிவுகள்தான். இடை இடையே சில யூதர்களுமிருப்பர். இந்த மதங்களினிடையே இஸ்லா மிற்கும் ஹிந்து மதத்திற்கும் உள்ள வித்தியாசம் இடையாது. ஆகையால் ஹிந்து மதத்தினரும் இஸ்லாம் மதத்தினரும் ஏன் தனித்தனி இனமாகக் கருதுகிறார்கள் என்பது மேல் நாட்டாருக்குப் புரிவதில்லை. சமத்துவம், சகோதரத்துவத்தைப் பெருங் கொள்கையாகக் கொண்ட இஸ்லாம் மதத்தின் மீது வளர்ந்த முஸ்லிம், கலை, நாகரிகம், வாழ்க்கைமுறை ஆகியவை, ஜாதிப் பாகு பாட்டையும் வருணாச்சிரம தர்மத்தையும், அடிப்படை தர்மமாகக் கொண்ட ஹிந்து மதத்தின் மீது வளர்ந்த ஹிந்து கலை, நாகரிகத்தையும், வாழ்க்கை முறையினின்றும் பெரிதும் வேறுபாடுடையதாகும். இது காரணமாக இஸ்லாமியர் ஒரு தனி இனம் என்றும் அவர்களினின்றும் அதிக வேறுபாடுடைய ஹிந்துக்கள் வேறு இனம் என்றும் சொல்லுகிறோம்.

ராஜீய விவகாரங்களில் மத விஷயங்களைக் கொண்டு வருவது பழைய கால அநாகரிகமென்று பண்டித நேரு சொல்கிறார். ஆனால், சரித்திரம் கற்றவரெனச் சொல்லப் படும் பண்டிதர் ஐரோப்பாவின் பழைய மூட பக்தியையும் அநாகரிகத்தையும் போக்கடிப்பதற்கு ஒரு பெருங் காரணமாயிருந்தது, இஸ்லாம் மதமும் அதன் நாகரிகமும்தான் என்பதை அறியாமற்போனார். மதத்தின் பெயரை எடுப்பதற்கு பண்டிதரைப் போன்றவர்களுக்கு கூச்சமேற்பட்டால் மதத்தின் பெயரை விட்டு விடட்டும். ஆனால், வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் உள்ள ஸ்பஷ்ட மான வித்தியாசத்தை எடுத்துக் கொள்ளட்டும்.

இந்த வித்தியாசத்தினுல் இரு சாராரும் தனித்தனி இனமா அல்லவா என்பதை பக்ஷபாதமற்ற முறையில் சொல்லட்டும்.

தனித்தனி இனத்தார் என்று உலகத்தார் ஒத்துக் கொண்ட ரஷ்யருக்கும், ஜெர்மானியருக்கும், அல்லது பெல்ஜியத்தாருக்கும், டச்சுக்காரருக்கும், அல்லது பிரேஜில்காரருக்கும், அர்ஜண்டைன் காரருக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதோ அதைவிட அதிக வித்தியாசம் இருக்கிறது, ஹிந்துக்களுக்கும் முஸ்லிம் களுக்குமிடையே. உண்மை இவ்வாறிருக்க ஹிந்துக் களேயும் முஸ்லிம்களேயும் ஒரே இனத்தவராக வாழும் படிச் சொல்லுவது இயற்கைக்கு மாற்றமானதாகும். ஆனுல் இருவரும் சினேகிதமான முறையில் வாழ வழியுண்டு. அந்த வழிதான் இந்த இந்திய உப கண்டத்தைப் பிரித்து முஸ்லிம்களுக்கு பாகிஸ்தான் கொடுப்பதாகும். இந்தத்தேசத்தின் இராஜீய சிக்கலானப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக முஸ்லிம்களும் சேர்ந்து எத்தனேயோ விதங்களில நீண்ட காலம் முயற்சி செய்து பார்த்தனர். பிரச்னேகள் தீர்க்கப்படவில்லே. இறுதியில் அப் பிரச்னேகளுக்கும் இந்த தேசத்தின் கஷ்டங் களுக்கும் சிறந்த ஔஷதம் பாகிஸ்தானே என்று ஏற்பட்டது.

பாகிஸ்தான் திட்டத்தினுல், சிறு பான்மை மாகாணங்களிலுள்ள முஸ்லிம்களுக்கு என்ன அனுகூலம்? என்ற ஒரு கேள்வியைக் கேட்டு சிறுபான்மை மாகாண முஸ்லிம்களே பயமுறுத்தப் பார்க்கின்றனர் சிலர். அதற்குப் பதிலாவது:இந்தியாவிலுள்ள பத்துக்கோடி முஸ்லிம்களும் ஒரு தனி இனம். அவர்கள் சுயேச்சையாக வாழ வேண்டும். அவர்களது இஸ்லாமியக் கலே, நாகரிகம், ஜீவிய முறை இவைகளே பாதுகாத்து வளர்ப்பதற்கு உரிமை வேண்டும்.

அவ்விதச் சுதந்திரம் பத்துக்கோடி பெயருக்கும் கிடைக்காவிட்டாலும் அவர்களின் பெரும் பாகத்தினரான ஏழு கோடி பெயர்களுக்காவது கிடைக்க வேண்டும். அப்பெரும் பாக சகோதரர்களின் சுதந்திரத்திற்காகவும் இஸ்லாமிய நாகரிக பாதுகாவலுக்காகவும் சிறுபான்மை முஸ்லிம்கள் எவ்விதத் தியாகமும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். இது ஒன்றே மேற்சொன்ன கேள்விகளுக்குப் போதிய பதிலாகும் என்றாலும் சிறுபான்மை முஸ்லிம்களுக்கும் பாகிஸ்தான் திட்டத்தினால் தனியான நன்மைகள் இல்லாமற் போகவில்லை. இப்பொழுது இந்நாடு முழுவதையும் ஒன்றாகக் கருதிக்கொண்டு பத்துக் கோடி முஸ்லிம்களை எப்பொழுதுமே சிறுபான்மை வகுப்பார் என்று பேசுகிறார்கள். ஹிந்துக்களை எப்பொழுதுமே "பெரும்பான்மை வகுப்பார்" என்று கூறிக்கொள்கிறார்கள். ஆனால் பாகிஸ்தான் அரசியல்படி ஹிந்துக்கள் பாகிஸ்தான் நாடுகளிலே சிறுபான்மையினராக இருப்பார்கள். முஸ்லிம்கள் சில மாகாணங்களில் இப்பொழுதிருப்பது போலவே சிறு பான்மையினராக இருப்பார்கள். இவ்வாறு ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சிறு பான்மையினர்களாக இருக்கும்படி ஏற்படும் பொழுது சிறுபான்மை விவகாரம் வெகு சுலபமாகத் தீருவதற்கு ஹேது ஏற்படும். தவிர, சிறு பான்மை மாகாணத்திலுள்ள முஸ்லிம்களும் சுதந்திரம் பெற்ற பாகிஸ்தான் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஏற்படுவதினால் அவர்களுடைய அந்தஸ்து உயரும். தவிர சிறு பான்மையோர்களுக்குப் பாதுகாவல்கள் சட்ட பூர்வமாக ஏற்பட வேண்டுமென்றும் பாகிஸ்தான் திட்டத்தின் முக்கியமானதொரு அம்சமாகும். இவைகளை எல்லாம் நன்கு அறிந்திருக்கும் சிறுபான்மை மாகாணத்து முஸ்லிம்களை எதிரிகள் குழப்பிவிட முடியாது.

1300 ஆண்டுகளுக்கு முன்பே அல்லாஹ்வின் திருதூதுவர் நமது நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு மார்க்கத்தைக்கொண்டுவந்து உபதேசித்தார்கள். ஒரு நாகரிகத்தை

ஸ்தாபித்தார்கள். அதைப் பின்பற்றியவர்கள் ஒரு தனி "உம்மத்" என்றூர்கள். அம் மார்க்கத்தை ஒப்புக் கொள்ளாதவர்கள், விசுவாச மற்றவர்கள், முஸ்லிம்களை தனி உம்மத்தாக இருக்க விடமாட்டோமென்றும் அந்த மார்க்கத்தை விட்டு விட்டு முஸ்லிம்கள் விசுவாசமற்றவர்களுடன் சேர்ந்து ஒரே இனமாக இருக்க வேண்டுமென்றும் சொன்ஞர்கள். இறுதியில் அதற்காக முஸ்லிம்களின் மீது போரும் தொடுத்தனர். முஸ்லிம்கள் தங்களையும் தங்கள் நாகரிகத்தையும் பாதுகாப்பதற்காக தற்காப்பு யுத்தமும் செய்தார்கள். இதுவே "ஜிஹாத்" என்பது. அந்தக் காலத்தில் ஏற்பட்ட அதே நிலைமைதான் இப்பொழுதும் ஒரு விதத்தில் ஏற்பட்டிருக்கிறது. நாம் நமது மதத்தின் தன்மையைக்கொண்டு நமது தனிப்பட்ட கலை, நாகரிகம், வாழ்க்கை முதலியன காரணமாக ஒரு தனி இனம் என்கிறோம். காங்கிரஸ் தலைவர்கள் அந்த நிலையை ஒப்புக்கொள்ள முடியாதென்றும் நாமும் அவர்களுடன் சேர்ந்து ஒரே இனமாக வேண்டுமென்றும் சொல்லுகிறூர்கள். இதை இந்திய முஸ்லிம்கள் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

அவர்கள் எப்பாடு பட்டாவது தாங்கள் ஒரு தனி இனம் என்று உண்மையை ஸ்தாபிக்கவேண்டும். அவ்விதமே ஸ்தாபிப்பதற்காக முஸ்லிம்கள் எந்தத் தியாகமும் வேண்டுமானுலும் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறூர்கள். அங்ஙனமே தியாகம் செய்யவேண்டி வரும் போது "முதல் குண்டை தாங்குவதற்காக தமது நெஞ்சைக் கொடுக்கத் தயார்" என்று காயிதே ஆஜம் அவர்கள் இயம்பினூர்கள். ஆனுல் அந்த முதல் குண்டு காயிதே ஆஜம் அவர்களுடைய நெஞ்சைத் தொடுவதற்கு முன்னல் பத்துக்கோடி முஸ்லிம்களுடைய நெஞ்சுகளையும் ஊடுருவிச் செல்லவேண்டும். அது மட்டுமல்ல, அந்தக் குண்டு சில முஸ்லிம்களின் நெஞ்சுகளினிடையே பிரயாணம் செய்வதற்குள்ளேயே ஆண்டவனருளால் பாகிஸ்தான் பலிதமாகி விடும்:—

காயிதே ஆஜம் பாகிஸ்தானைப்பற்றிக் கூறுவது.

காங்கிரஸ் வாதிகளுடையவும், திரு காந்தியவர்களுடையவும் முன்னுக்குப் பின் முரணான வாதங்களையும் முஸ்லிம்களை அடிமைப் படுத்தி நசுக்கிவிட வேண்டும் என்ற எண்ணம் காரணமாகவுமே முஸ்லிம்கள் தனித்து சுதந்திரத்துடன் வாழவும் தங்கள் கலா, ஞான நாகரிகங்களைப் பாதுகாக்கவுமே பாகிஸ்தான் கோரப்படுகிறதென்றும், அது கோரப்படுவதற்குள்ள காரணங்களையும் நமது இணையற்ற தலைவர் அமீரே மில்லத் காயிதே ஆஜம் அவர்கள் என்ன கூருகிறார்களென்பதை கீழ்க் காணுமாறு கவனிப்போமாக:

பாகிஸ்தான் திட்டப்படி ஏற்படும் ஆட்சி எந்த விதமாய் இருக்கும்? அது பொதுமக்களின் ஆட்சியாகவே இருக்கும். லாகூரில் லீக் மகாநாடு கூடி தீர்மானித்த போது பாகிஸ்தான் என்ற வார்த்தையை அதில் பிரஸ்தாபிக்கவே இல்லை. இந்த பாகிஸ்தான் என்ற சொற்றொடரை நமக்கு ஞாபக மூட்டியது யார்? ஹிந்துக்கள் தான். ஆமாம் அது அவர்களின் தவறுதான். இந்தத் தீர்மானம் பாகிஸ்தான் என்று தவறுதலாகக் கருதினர். அவர்கள் இந்த வார்த்தையை நம்மீது வலுவில் திணித்தனர். இஸ்லாமிய மதபோதனை தான் பாகிஸ்தானின் நோக்கம் என அவர்கள் இயம்பலாயினர். நாம் நீண்ட நாளாக இத் தீர்மானம் பற்றி குறிப்பிடுகையில் பாகிஸ்தான் என்ற இப்பிரபலமான வார்த்தைத் தொடரை லாகூர் தீர்மானம் என்ற வாக்கியத்தையே உபயோகித்து வந்துள்ளோம். எனினும் நாம் எவ்வளவு காலம் இவ்விதமான நீண்ட வார்த்தையை உபயோகித்துக் கொண்டிருப்பது! எனவே இந்த வார்த்தையை நமக்கு அளித்ததற்காக நான் ஹிந்துக்களுக்கும், பிரிட்டிஷாருக்கும் வந்தனம் செலுத்துகிறேன்.

காந்திஜி ஒரு பக்கா ஹிந்து

காங்கிரஸ் அதிகார வர்க்கமும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் குறிப்பாகக் காந்திஜியும் முஸ்லிம்களை மிகவும் கேவலமாக நடத்தியிருக்கின்றனர். இதன் காரணமாக இன்று முஸ்லிம்கள் இந்தியப் பிரிவினையைக் கோருகின்றனர். காலஞ்சென்ற தாதாபாய் நௌரோஜி, கோகலே போன்ற ஹிந்துத் தலைவர்கள் உண்மையை உணர்ந்து நேர்மையான அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர். அவர்களிடம் நீதியும் நேர்மையும் நிரம்பக் காணப்பட்டன. திரு கோகலே போன்றவர்களின் தாராளத் தன்மையின் காரணமாக இந்திய முஸ்லிம்கள் தங்களுக்கு ஹிந்துக்களிடம் கண்ணியமும், நேர்மையும் சரியான நியாயமும் கிடைக்குமென நம்பிக் கொண்டிருந்தனர். ஆனால், இன்று இந்திய மக்களின் ஏகப் பிரதிநிதி என்று தம்மைத் தாமே கூறிக்கொண்டிருக்கும் காந்திஜி இதற்குப்பின் இந்திய அரசியலில் தோன்றினார். 1920-ம் வருஷம் மே மாதத்தில் காந்திஜி தமக்கு மதத்தைத் தவிர அரசியல் என்பதே கிடையாது என்றும் தம் மதத்தில் அரசியல், துணைக்கருவி போன்றதென்றும் கூறினார். அரசியலில் தாம் தமது நண்பர்களுடனும், தம்முடனும் பரீக்ஷை நடத்துவதாகக் காந்திஜி கூறினார். இது ஒரு பழிக்குப் பழி வாங்கும் செயலே என்பதில் சந்தேகமில்லை.

1921-ம் வருஷம் அவர் தமது "யங் இந்தியா" பத்திரிகையில் தமது மத நம்பிக்கையைப் பற்றி பின் கண்டபடி வெளியிட்டிருக்கிறார்: 'நான் என்னை ஒரு சனாதினி ஹிந்துவாகக் கூறிக் கொள்கிறேன். ஏனெனில் நான் வேதங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள், ஹிந்து மத கிரந்தங்கள் முதலியவைகளை நம்புகிறேன். இந்த வகையில் அவதாரங்கள் மறு பிறப்பு முதலியவற்றிலும் நம்பிக்கை கொண்டுள்ளேன். வருணாச்சிரம தர்மத்

லதையும் (ஜாதிப்பிரிவுகள்) அதன் வேதத் தன்மைகளேயும் நம்புகிறேன். பசு பாதுகாப்பை என்றும் மதக் கடமையாக நம்புகிறேன். உருவ வழிபாட்டிலும் எனக்குப் பூரண நம்பிக்கை இருந்து கொண்டிருக்கிறது' என்று கூறி யுள்ளார். பின்னர் 1924-ம் வருஷம் காந்திஜி, கீழ்க்கண்ட படி கூறி இருக்கிறார்: 'முஸ்லிம் நண்டர்களிடம் நான் அதிகமாகப் பழகுவதன் மூலம், நான் ஹிந்துக்களின் மனோபாவத்தைத் தெரிந்து கொள்ளத் தகுதியற்றவனாக ஆகிவிடுகிறேன் என்று இரகசியமாகக் கூறிக்கொள்ளப் படுகிறது. ஹிந்து மனோபாவ மென்பதே நான்தான். என் உடம்பின் ஒவ்வொரு துளி ரத்தமும், நரம்பும் ஹிந்துவாகவே இருக்கிறது.' காங்கிரஸின் ஹிந்து ராஜிய முயற்சி காந்திஜியின் மேற்கண்ட கூற்றுகளிலிருந்து அவர் பக்கா ஹிந்து என்பது நன்றாக விளங்கக் கிடக் கின்றது.

அவ்வாறிருந்தும் அவர் ஒரு ஹிந்து என்ற முறையில் வகுப்புச் சமரசம் பற்றி விவாதிக்க என்னைச் சந்திக்க வேண்டுமெனக் கோரிய சமயம் அவர் மறுத்து விட்டார். 1925-ம் வருஷம் முதற்கொண்டு இதுவரை வகுப்புப் பிரச்னையைத் தீர்க்க அனேக தடவைகளில் முயற்சிகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு சமயத்திலும் முஸ்லிம்களே மனுதாரர்களாய் இருந்து காந்திஜியுடையவும், அவருடைய நண்பர்களுடையவும் வாசற் கதவுகளில் காத்திருந்தனர். ஹிந்துத் தலைவர்கள் பல தடவைகளில் ஹிந்து முஸ்லிம் சமாதானத்திற்கு இணங்குவதாகப் பாசாங்கு செய்து ஒவ்வொரு சமயத்திலும் அவர்களின் பாஸிஸ சர்வாதிகாரத்தினாலும் சமரசம் சாத்தியப் படாமல் போயிற்று. 1927-ம் வருஷம் முஸ்லிம்கள் வகுப்புச் சமரசச் சம்பந்தமாகச் சில ஆலோசனைகளே வெளியிட்டனர். அவைகளைச் சென்னைக் காங்கிரஸ் மகா நாட்டால் போதுமான அளவு ஒப்புக்கொள்ளப்பட்டதும் மேற்கொண்டு விபரங்களே வகுப்பதற்காக இரண்டு கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டன. இந்தக் கமிட்டிகளைச்

சிதறடித்து முஸ்லிம்களை அவைகளிலிருந்து வாபஸாகும்படிச் செய்தவர் காந்திஜியே ஆவார்.

இதற்கப்பால் நெஹ்ரு ரிப்போர்ட்டு வெளியிடப்பட்டது. அது ஒரு சமயம் காங்கிரஸுக்கே தலைவராக இருந்த காலஞ்சென்ற மௌலானா மூஹம்மதலி அவர்களால் கண்டிக்கப்பட்ட அவ்வளவு லட்சணமாக இருந்தது.

இந்த ரிப்போர்ட்டு ஒப்புக்கொள்ளப்பட்டால் ஹிந்துமகா சபையால் இந்தியாவில் ஹிந்து சர்க்கார் நிறுவப்படுமென்று மௌலானா முஹம்மதலி அவர்கள் கூறி அதைப் பலமாகக் கண்டனம் செய்தார்கள். இதற்குப் பின் காந்திஜியும் காங்கிரஸும் நாட்டில் நடந்துகொண்ட சர்வாதிகாரத் தோரணைக்கு எல்லையே இல்லை. இதற்கு ஒரே ஒரு உதாரணம் தருகிறேன். காங்கிரஸ் மகாநாடு திரிபுரியில் நடைபெற்றபோது அம் மகாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர் சேட் கோவிந்ததாஸ் தமது வரவேற்புப் பிரசங்கத்தில் பின்கண்டபடி கூறி இருக்கிறார். எங்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்தை இத்தாலியின் பாஸிஸ்ட்டு கட்சியுடனும் ஜெர்மானியின் நாஜிகட்சியுடனும் ருஷ்யாவின் பொதுஉடைமைக் கட்சியுடனும் ஒப்பிடலாம். பாஸிஸ்ட்டுகளிடையே முஸோலினியும் நாஜிகளிடையே ஹெர் ஹிட்லரும் பொது உடைமையாளர்களிடையே ஸ்டாலினும் பெற்றிருந்த அந்தஸ்தையும் மதிப்பையும் போன்று காந்திஜியும் காங்கிரஸ்காரர்களிடம் பெற்றிருக்கிறார். மேற்கண்டவைகளிலிருந்து, காந்திஜியுடையவும், காங்கிரஸுடையவும் போக்கும் கொள்கைகளும் முஸ்லிம்களின் சுயநிர்ணயத்திற்கு இடமளிக்காமல் ஹிந்துராஜ்பத்தை ஏற்படுத்துவதே இவர்கள் நோக்கமாகும். இவர்கள் நோக்கம் நிறைவேற இந்திய முஸ்லிம்கள் ஒருக்காலும் சம்மதிக்க மாட்டார்கள். அவர்களுடைய தனி சமுதாய ஆட்சியை ஏற்படுத்தியே தீர்வார்கள்.

இந்தியா எப்போதும் ஒரே நாடாகவோ அல்லது ஒரே சமுதாய நாடாகவோ இருந்தது கிடையாதென்பதை உணரப்படவேண்டும். இந்த உபகண்டத்தில் இந்தியப் பிரச்னை ஒரு சர்வதேசப் பிரச்னையாகும். வெவ்வேறு பாகுபாடுகள், கலை, சமூகம், அரசியல், பொருளாதாரம் முதலிய சகல முறைகளிலும் வேறுபாடுகள் இந்நாட்டில் வெகு முக்கியமானது. இவைகள் மறைக்கப்படவோ, மழுப்பப்படவோ முடியாதவை. இவைகளை முக்கியமாகக் காங்கிரஸ்காரர்களும், பிரிட்டிஷாரும் உணரவேண்டும்.

நமது உறுதியான சங்கற்பமும் லக்ஷியமும் ஒன்றே அதுதான் பாகிஸ்தான். இப்போது பாகிஸ்தான் என்பது மற்றவர் கொடுக்க நாம் ஏற்றுக் கொள்ளும் பிரச்சினையல்ல. ஆனால், நாம் அதை எடுத்துக் கொள்வோம். இந்தப் பாகிஸ்தான் கோஷம் இப்போது இந்தியாவின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் ஒவ்வொரு மொழியிலும் முழக்கப்படுகிறது. இந்தியாவின் மாகாணங்களில் ஒவ்வொன்றிலும் அதன் பிரதான பாஷைகளின் எந்த மொழியிலும் எழும் கோஷம் என்னவெனில் “பாகிஸ்தான் ஜிந்தாபாத்” என்ற ஒரே கோஷந்தான். இதுதான் நமது இறுதியான முடிவு. இதில் எவ்வித மாறுதலும் இருப்பதற்கில்லை. இந்திய முஸ்லிம்களின் தேசிய சுயநிர்ணய உரிமைத் திட்டமாக பாகிஸ்தானை அங்கீகரிக்காவிட்டால் முஸ்லிம் இந்தியா ஒருக்காலும் திருப்தியடையாது.

நான் உண்மையில் ஏழை மக்களிடமே ஆழ்ந்த அனுதாபம் செலுத்துகிறேன் என்பதையும், நான் அவர்களுக்குச் சேவை செய்கிறேன் என்பதையும் உறுதி கூறுகிறேன். நான் நம் இலக்ஷிய முன்னேற்றத்தில் செய்யும் வேலைகளின்போது நான் ஏழைகளின் தொண்டன் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வார்கள். நான் நமது இலக்ஷியத்தில் வெற்றியடைந்து விட்டால், நான் ஏழைகளுக்காக வேலை செய்து அவர்களின்

நிலைமையை உயர்த்தினேன் என்ற பரிசும் அதனால் ஏற்படும் புகழும் சந்தோஷமும் எனக்கு உண்டாகும். நாம் பாகிஸ்தானை கோரிக்கொண்டிருக்கிறோம். நாம் நமது சொந்த சர்க்கார் வேண்டுமென்று கோருகிறோம். அந்தச் சர்க்கார் மானிட வர்க்கத்தில் சமத்துவமாயில்லாவிடில் அதனால் என்ன பிரயோஜனம் ஏற்படப்போகிறது?

இது போன்றே ஏழைமக்களுக்குத் தேவையானவற்றை அந்தச் சர்க்கார் பூர்த்தி செய்யவில்லையானால், அத்தகைய சர்க்காரால் என்ன பயன்? நாம் கோரும் சர்க்காரின் அடிப்படையான இலக்ஷியமே ஏழை மக்களுக்குச் சாத்தியமான ஒவ்வொரு உதவியையும் செய்யக்கூடியதாகவே பாகிஸ்தான் சர்க்கார் இருக்கும்.

இந்தியா ஒரு உபகண்டமே

இந்தியா ஒரு நாடல்ல; இது ஒரு உபகண்டமேயாகும். இந்தியாவை எந்தக் காலத்திலும் ஒரே கூட்டுறவாட்சியில் வைத்திருக்க முடியாது. எந்தக் காலத்திலும் ஒரே கூட்டுறவாட்சியில் இந்தியா இருந்ததில்லை. முகலாயர்கள் ஆண்ட காலத்திலும் அதற்குமுன் அசோகர் ஆண்டகாலம், சந்திரகுப்த பரம்பரை ஆண்டகாலம் இவைகளிலெல்லாம் இந்தியா பல பாகமாகச் சிறிய, பெரிய ஆட்சிகளிலும் இருந்து வந்திருக்கிறது. பிரிட்டிஷார் இந்திய ஆதிக்கத்திற்கு வந்ததன் பிறகுதான் இந்தியாவை ஒரே ஆட்சியில் அதாவது துப்பாக்கி முனையின் மூலம் இந்தியா ஒரே ஆட்சிக்குட்பட்டதென்று நிர்த்தாரணம் செய்து வருகிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் இதுவரையில் இல்லாமல் இருக்குமானால் இந்தியா எத்தனையோ வகையான பிரிந்த நாடுகளாய் இருக்கும். ஒரே நாடாகக் கருதும்படி பிரிட்டிஷ் துப்பாக்கிமுனை பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவைத் தவிர அறுநூறுக்கு மேற்பட்ட சமஸ்தானங்கள் இன்றுவரையிலும் கூட பிரிட்டிஷ் நேரடி ஆட்சிக்குப்

புறம்பானதாய் இருக்கிறது. இந்தியப் பிரிவினையை எதிர்க்கும் காங்கிரஸ் அரசியல் வாதிகள் சற்றும் உற்றுணர்ந்து பார்ப்பதில்லை. இன்று முஸ்லிம்களின் பாகிஸ்தான் கோரிக்கைக்கு எதிராக பலவிதப் பொய் பிரசாரம் செய்து மக்களிடத்தில் பீதியை உண்டாக்க முயற்சிக்கிறார்கள். பாகிஸ்தான் திட்டம் பூகோள அமைப்பிற்கு விலக்கானதென்றும் பொருத்தமற்ற தென்றும் பிரசாரம் செய்கிறார்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய மாகாணங்களைப் புதிதாய்ப் பம்பாயி லிருந்து சிந்துவையும், சென்னையிலிருந்து ஓரிஸ்ஸா வையும், எல்லைப்புற மாகாணத்தையும் தனியாகப் பிரித் திருக்கும்போது இந்தியாவிலேயே, பிரஞ்சுக்காரர்களின் புதுச்சேரி, சந்திரநாகூர், மாகி, போன்ற பிரதேசங்கள் தனித்திருக்க வில்லையா? பிரஞ்சிந்திய மக்களுக்கும் பிரிட்டிஷ் இந்திய மக்களுக்கும் இடையில் கொடுக்கல், வாங்கல் வியாபாரம் முதலியன நடைபெறவில்லையா! பாகிஸ்தான் ஏற்பட்டால் ஹிந்து முஸ்லிம் வேற்றுமை அதிகரிக்குமென்றும், வியாபாரம் பாதிக்கும் என்றும் கூறும் காங்கிரஸ் ஹிந்து மகாசபைக்காரர்கள் இதை உணர்ந்து கொள்ளாதிருப்பது ஏனோ! பிரஞ்சு இந்திய மக்களும் பிரிட்டிஷ் இந்திய மக்களும் அரசியலில் தனித் தனி கவர்ன்மெண்டுகளால் ஆளப்படும்போதுகூட ஒற்றுமையாக ஒருவருக் கொருவர் கொடுக்கல், வாங்கல் வியாபாரம் இவைகளில் தொடர்பு வைத்துக்கொள்ளும் போது பாகிஸ்தான் மக்களும், ஹிந்துஸ்தான் மக்களும் ஏன் ஒற்றுமையுடன் அவரவர்கள் பிரதேச ஆட்சிக்குட் பட்டு வாழக் கூடாது. காங்கிரஸிலேயே இன்று இந்திய ஆட்சி பாஷா வாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டு மென்று கோரும்போது, முஸ்லிம்கள் பாகிஸ்தான் கோருவது எப்படி பாபகரமானதாகவும் தாயை வெட்டுவ தாகவும் ஆகுமென்பது விளங்கவில்லை? இதிலிருந்து என்ன புலப்படுகிறதென்றால் முஸ்லிம்களுக்குத் தனி சுதந்திரமாவது, சுயநிர்ணய உரிமையாவது கொடுக்கக்

கூடாது. ஹிந்துக்களுக்கு இந்திய முஸ்லிம்கள் நிரந்தர அடிமைகளாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையைத் தான் இது காட்டுகிறது. இதற்கு ஒருக்காலும் முஸ்லிம்கள் சம்மதிக்கமாட்டார்கள்.

இந்திய உபகண்டம் சமுதாய முறையில் பிரிந்திருக்க வேண்டிய தேசமேயாகும். இன்று மக்கள் நலம் கருதியே அமெரிக்க ஐக்கிய நாடுகளும், சோவியத் ரஷ்யாவும் பல தனியாட்சிப் பிரதேசங்களாக ஐக்கியத்துடன் இருந்து வருகிறது. இதைப் போலத்தான் இந்தியாவிலும் முஸ்லிம் இந்தியா, ஹிந்து இந்தியா என்ற வகையில் பஞ்சாப், சிந்து, பலுஜிஸ்தான், எல்லைப் புறம், வடமேற்கிலும், கல்கத்தா அஸ்ஸாம் வடகிழக்கிலும் பாகிஸ்தானாகவும், மற்ற மாகாணங்கள் ஹிந்துஸ்தானாகவும் பிரிந்து போவதுதான் இந்தியாவின் நிரந்தர சமாதானத்திற்குச் சிறந்த வழியாகும். இரு பிரதேசங்களுக்கும் நல்லெண்ணத்தையும் ஒற்றுமையையும் உண்டாக்கும் வகையில் ஐக்கிய நாட்டைப்போல் ஆட்சி வகை காண வேண்டும்.

அதற்கேற்பவேதான் பாகிஸ்தான் திட்டத்தில் கண்டபடி ஹிந்து இந்தியாவிலிருந்தும் முஸ்லிம் இந்தியாவிலிருந்தும் பிரதிநிதிகளைக் கொண்ட கவுன்ஸில் ஒன்று மத்தியில் இருக்கும். அது அந்நியநாட்டு விவகாரங்கள், போக்கு வரத்து, தேசப் பாதுகாப்பு ஆகிய இவைகளைக் கவனிக்கும். மற்ற விவகாரங்கள் பூராவையும் அந்தந்த ஆட்சி பிரதேசங்கள் கவனித்துக்கொள்ளும். அந்த வகையான ஆட்சி ஏற்படுமானால் இந்தியப் பிரதான சமுதாயத்தினர்கள் சுமுகமாக வாழ்வார்களென்பதில் ஐயமில்லை. இப்படிப் பிரிந்து ஆட்சி செய்தால் இந்தியாவில் பாதுகாப்பு மோசமாகி விடுமென்றும், முஸ்லிம் இந்தியா பாதுகாப்புச் செய்துகொள்வது கஷ்டமாய் இருக்குமென்றும் கூப்பாடு போடப்படுகிறது. இது ஊற்றுக்கு நிற்காத வாதமாகும். ஏனெனில்

நியுஜிலாந்து, ஆஸ்திரேலியா, பெல்ஜியம் போன்ற நாடுகள் தங்களைத் தற்காத்துக் கொள்ளும்போது ஏழு கோடி முஸ்லிம் மக்களுக்கு அதிகமானவர்களைக் கொண்ட பாகிஸ்தான் பிரதேசம் நன்றாகத் தைரியமாய் தற்காப்பு செய்து கொள்ளும் என்பதற்கு அப் பிரதேச மக்கள் சமீப யுத்தத்தில் காட்டிய தீரமே போதிய சான்றாகும். பொருளாதாரத் துறையில் பாகிஸ்தான் மிக மோசமான நிலைமை ஏற்படுமென்றும் அதனால், ஹிந்துஸ்தானத்திற்கும் ஆபத்தாய் முடியுமென்ற வாதம் வீண் விவாதமேயாகும்.

ஹிந்துஸ்தானத்தைவிட பாகிஸ்தானத்தில் இயற்கையிலேயே மின்சார உற்பத்தி, நீர்ப்பாசன வசதிகள் நிறைந்திருக்கின்றன. அங்கு தன்னாட்சி உண்டாகிவிடின், தன்னாட்சியினராலேயே சகல தொழில் முறையும் பண்புற்று விளங்க வகை காண்பதோடு உலகின் மாபெரும் சீர்திருத்தத் தேசமாய்ப் பாகிஸ்தான் விளங்கும்.

முஸ்லிம்கள் இந்நாட்டைத் துண்டுபோட வேண்டுமென்று விரும்பினால் உள்நாட்டுப் போர் ஆரம்பிக்கப்படுமென்றும், ரத்தப் பெருக்கெடுத்தோடுமென்றும், ரத்தம் சிந்தித்தான் பாகிஸ்தான் பெற வேண்டுமென்றும் பட்டேல் கும்பல் பறை சாற்றுவித்திருக்கிறது. ரத்தம் சிந்துவதற்கு ஹிந்துக்கள் விரும்பினால், முஸ்லிம்கள் கோழைகளல்ல. நேர்மையான முறையில் போரிட்டே தீர்வார்கள். சுதந்திரமும், சுயநிர்ணயமும் ஒருவரிடமிருந்து தானம் பெறுவதல்ல! அதையடைவதற்குள்ள சக்தி முஸ்லிம்களிடம் இருக்கிறது. அவர்கள் விரும்பினால் பாகிஸ்தான் போர் நடந்தே தீரும். அவர்கள் பாகிஸ்தான் அடைந்தே தீர்வதென்ற பிரதிக்ஞை செய்து கொண்டு விட்டார்கள். இனி பிரிட்டிஷாரோ, ஹிந்துக்களோ அவர்களின் பிரதிக்ஞையை குலைத்துவிட முடியாது. பாணிப்பட்டு சம்பவங்கள் மறுபடியும் இந்திய

சரித்திரத்தில் நடக்க வேண்டுமென்று ஹிந்துக்கள் கருதுவார்களாயின் முஸ்லிம்கள் ஒருக்காலும் பின்னடைய மாட்டார்கள்.

இனி அரசியல் சூட்சிகள் முஸ்லிம்களிடம் பலியாது. இந்தியா சுதந்திரமடைய வேண்டுமானல் பூகோள அமைப்பிற்கு மாறுபடாத வகையிலுள்ள பாகிஸ்தான் திட்டத்தின் கீழ் ஒரு சரியான உடன்படிக்கைக்கு, ஹிந்து சமுதாயத்தினரும், ஹிந்து காங்கிரஸ் தலைவர்களும் வந்து தீர வேண்டும். இல்லையேல், சரியான வகையில் இந்தியப் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ள முடியாது என்பது திண்ணம்.

ஜனநாயகம் என்ருல் என்ன?

ஜனநாயகமென்ருல் என்ன வென்பதைச் சிந்திக்காமலே ஒரு சாரார் கூச்சலிடுகின்றனர். ஐரோப்பிய நாட்டில் ஜனநாயகமென்பது அவர்கள் சமூக வேறுபாடுகளை அடிப்படையாய்க் கொண்டதல்ல. அங்கு, கட்சிகளின் பேரால் அரசியல் நடத்தப்படுகிறது. மெஜாரிட்டிக் கட்சி, மைனாரிட்டிக் கட்சிகளுக்கிடையில்தான் ஜனநாயகவாதம் நடத்தப்படுகிறது. இதைத் தவிர அந்தநாட்டுக்குத் தக்கவாறு பிரிட்டனின் ஜனநாயகம் வேறு ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி, பிரான்ஸ் ஜனநாயகக் கொள்கைகள் வெவ்வேருக இருந்துகொண்டிருக்கிறது. இதில் எந்த ஜனநாயகக் கொள்கையும் இந்தியாவுக்கு உகந்த கொள்கைகளாகமாட்டா. ஏனெனில் இந்தியாவில் வதியும் மக்கள் ஒரே கொள்கையையோ, ஒரே கலாச்சாரத்தையோ கொண்டவர்களல்ல. தனித் தனி கலாச்சார முடையவர்கள். பல பிரிவுகளுடைய சமயக் கொள்கைகளைக் கொண்ட, வகுப்பார்களாகிய, சீக்கியர், ஆதிவாசிகள், கிறிஸ்துவர், தாழ்த்தப்பட்டவர்கள் இன்னும் பலரும் பல நாகரிக முடையவர்களாகவும், தனி ஜாதியினர்களாகவும்

உள்ள சிறு பான்மை வகுப்புகளாக இருந்து கொண்டிருக்கின்றனர். இவர்களைத் தவிர இந்தியாவின் நான்கிலொரு பகுதியினரான முஸ்லிம்களும் இருக்கிறார்கள். இவர்கள் மதக் கட்டளை என்ன! மதாச்சாரங்கள் என்ன! என்று கவனித்தால் ஒரு முஸ்லிம் உறங்குவது முதற்கொண்டு உலகத்தில் சரியான முறையிலொழுகும் ஒவ்வொரு காரியங்களும், மதக் கடமைகளாகவும், மதப் போதனைகளாகவும் இருந்து கொண்டிருக்கின்றன. இதைத் தவிர அரசியல் நடத்துவது எங்ஙனம்; செங்கோலோச்சுவதின் தன்மைகள் என்ன வென்பதையும் நன்றாக உணர்ந்தவர்கள். மக்களாலாவது அல்லது படித்த மேதாவிகளாலாவது அரசியல் மன்றங்களின் மூலமாவது யோசித்து தீர்மானிக்கப்படும் சட்ட திட்டங்களைக் காட்டிலும் அதிக மேலான கோட்பாடுகளடங்கிய சட்டம் முஸ்லிம்களுக்கு இருக்கிறது. அந்தச் சட்ட திட்டங்கள் மனிதனால் நிர்மாணிக்கப் பட்டதல்ல. மனிதர்களின் சிருஷ்டி கர்த்தாவான அல்லாஹுவினால் அருளப்பட்டது. இத்தகையச் சட்டத்தில் மனிதவர்க்கத்தார் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்றும் ஆண்டான், அடிமை என்ற வித்தியாசத்தை அடியோடு ஒழித்து அரசியலில் இயங்குவது எப்படி என்ற கோட்பாடுகளும் காணக் கிடைக்கின்றது. இத்தகைய கோட்பாடுகளை நிர்ணயமாகக் கொண்டுள்ள முஸ்லிம்கள் மேனாட்டு ஜனநாயக முறையையோ அல்லது இந்தியாவில் ஹிந்துக்களின் பெரும் பான்மை அதிகாரத்தை உண்டு பண்ணக்கூடிய வேறு எந்த ஜனநாயக முறையையோ ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

அரசியல் ஞானமும் சமூகரீதியிலுமுள்ள ஜனநாயகக் கொள்கைகளையும் உடைய முஸ்லிம்கள் பிற சமுதாயத்தாரோடு தனி இனமாக இருந்து எப்படி வாழவேண்டுமென்பதை நன்றாகத் தெரிந்திருக்கிறார்கள். இன்றைக்குச் சற்றேறக் குறைய 1400 வருஷங்களுக்கு முன்பே ஆண்டவனாலும் திருநபி (ஸல்) அவர்களாலும் போதிக்கப்

பட்ட ஜனநாயக முறைகள் இந்திய முஸ்லிம்களின் மனதில் பதிந்தும், இரத்தத்தில் உறைந்துபோயும் இருக்கிறது. இதை நன்ருய் ஓர்ந்து கொண்டுதான் இந்திய அரசியல் அமைப்பு இந்தியாவின் தனித் தனி ஜாதியார்களின் கலா ஞானத்தை அவரவர்களின் மதக் கோட்பாடுகளுக்கு முரணில்லாவண்ணம் இந்திய மக்களே தங்களுக்குள்ளேயே ஒரு சரியான அரசியலை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று கருதி இந்தியாவின் விடுதலை இயக்கத்தில் நிபந்தனையொன்றும் இன்றி ஹிந்து காங்கிரஸ் வாதிகளுடன் தோளோடு தோள் சேர்த்து ஒன்றுபட்டு உழைத்தோம். ஆனல் நாம் கண்ட பலன் என்ன? முஸ்லிம்கள் பெருவாரியாக ஜெயிலுக்குப் போனதும் உயிரிழந்ததும் கஷ்ட நஷ்டம் அடைந்ததும் தான் மீதியாகக் கண்டோம். பெரும்பான்மை சமூக ஹிந்துக்களே இந் நாட்டிற்கு ஒரு சரியான அரசியல் திட்டம் கொண்டுவரட்டும் மென்று எதிர்பார்த்தோம். அதற்காக அவர்களுடன் உடன்படிக்கையும் செய்து கொண்டோம். ஆனல் அவர்கள் கொண்டுவந்த அரசியல் திட்டம் என்ன? அதுதான் நேஹ்ரு ரிப்போர்ட் என்ற ஹிந்து ராமராஜ்யத்தின் திட்டம். அதன் காரணமாகவே முஸ்லிம்கள் பிரிந்து தனி ராஜ்யக் கோரிக்கையை கேட்க ஆரம்பித்தனர். முஸ்லிம்களை ஏமாற்றும் வகையில் ஹிந்து காங்கிரஸ் செய்த முயற்சிகள் வீண் போயின. கடைசியில் காந்தீய திட்டம் ஒன்று வந்தது. அதுதான் அரசியல் நிர்ணய சபை. இதன் மூலம் இந்தியாவின் தலைவிதியை நிர்மாணிப்பது. அந்த நிர்மாண அதிகாரத்தைத் தங்களிடம் ஒப்புக்கொடுக்க வேண்டும். இல்லையேல் அரசியலை விட்டுத் துறவறம் பூண்டு விடுவோம் என்று ஆகஸ்டு இயக்கத்தின் மூலம் பிரிட்டிஷாரையும், முஸ்லிம்களையும் பயமுறுத்தினர். ஆனல் அவர்களின் பயமுறுத்தல் பயனடையவில்லை. அதில் தோற்று விட்டதாகத் திரு காந்தியே ஒப்புக்கொண்டிருக்கிருர். 1927-ம் வருஷத்துக்குப் பிறகு, நேஹ்ரு யாதாஸ்து பயனற்றுப் போன

பின்பு, காங்கிரஸ் வாதிகள் திரு காந்தியாரின் ஹிந்து ராஜ்யஸ்தாபித முயற்சியான அரசியல் நிர்ணயசபைமூலம் இந்திய அரசியலமைப்பை வகுத்துக் கொள்வதற்கு இந்தியாவில் வயது வந்தவர்களுக்கு (21-க்கு மேற்பட்டவர்கள்) ஓட்டுரிமை கொடுத்துத் தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களைக் கொண்ட அந்த அரசியல் நிர்ணயசபைதான் இந்திய அரசியல் விமோசனத்தைக் காண்பதற்குத் தகுதிவாய்ந்த சபை என்ற திரு காந்தியாரின் திட்டத்தைக் கண்டபிறகுதான் இந்திய முஸ்லிம்கள் இனி வாளாயிருக்க முடியாதென்று கருதி, இந்தியாவின் நான்கிலொரு பகுதியினரான முஸ்லிம்கள் தாங்களே இனி இந்திய சமுதாய மக்களுக்கு தகுந்தபடி ஐரோப்பிய ஜனநாயகத்திற்குப் புறம்பானதாகவும் இந்திய சமுதாயத்தினர்களின் ஜாதீய பாகுபாட்டிற்கேற்பவும் ஓர் அரசியல் திட்டம் வகுக்க வேண்டுமென்று கருதி லாகூரில் கூடிய லீக் மஹாநாட்டில் நாட்டுப்பிரிவினை தீர்மானம் செய்தனர். அத்தீர்மானம் பின்பு ஹிந்து காங்கிரஸின் பிந்திய நடைமுறைகளைக்கண்டு முஸ்லிம் லீக் லாகூர் பிரிவினைத் தீர்மானத்தை 10 கோடி இந்திய முஸ்லிம்களின் லக்ஷியமாக மாற்றிக் கொண்டது.

அதுதான் நாம் இதுவரையில் இந்தியாவுக்கு ஒரு சரியான அரசியல் திட்டம் வேண்டும் என்றும் அதை ஹிந்துப் பெரும்பான்மையோர் நிர்மாணிப்பார்கள் என்றும் எதிர்நோக்கிக் கொண்டிருந்த நாமே இந்திய மக்களின் கலா ஞானத்தையும் கொள்கைகளையும் பாதுகாக்கும் வகையிலுள்ள "பாகிஸ்தான்" என்ற உயரிய அரசியல் லக்ஷியத்தை ஹிந்துக்களுக்காகவும் மற்ற சிறுபான்மையோர் ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பு வழங்கும் முறையில் ஹிந்து இந்தியா, முஸ்லிம் இந்தியா, என்று இரண்டாகப் பிரித்து இரு பிரதேசங்களிலுள்ள எல்லா வகுப்பாரும் தங்கள் தங்கள் பிரதேசத்தில் சுமுகமாய் வாழ்வதற்குப் பாகிஸ்தானே இணையற்ற சிறந்த வழியாகும்.

ஜனநாயகத்தைக் குறித்து நமது காயிதே ஆஜம் புகல்வதென்னென்று புரிந்து கொள்வோமாக:

நாம் 1400 ஆண்டுகளுக்கு முன்னரே ஜனநாயகத்தைக்கற்றுக் கொண்டிருக்கிறோம். அது நம்முடைய இரத்தத்தில் வேரூன்றிப் போயிருக்கிறது. இதற்கும், ஹிந்து சமூகத்திற்கும் ஆர்ட்டிக் பிரதேசங்களுக்கிடையேயுள்ள அவ்வளவு தூரம் இருக்கிறது. மனிதனின் சமத்துவத்தையும், மனித சகோதரத்துவத்தையும் கற்றுக் கொண்டவர்கள் நாமே. உங்கள் சமூகத்தில் (ஹிந்து) ஒரு ஜாதியின் கையிலிருந்து மற்றொரு ஜாதியான் தண்ணீர் குடிக்கமாட்டான். நாங்கள் ஜனநாயகத்தையே வேண்டுகிறோம். அது நீங்கள் கூறுவதுபோன்ற இந்தியா முழுமையையும் காந்தி ஆசிரமமாகச்செய்து விடக் கூடிய ஜனநாயகமல்ல. இந்த மனோபாவத்தை விட்டுவிடும்படி நான் உங்களுக்குக் கூறுகிறேன். ஆனால் ஒரு முஸ்லிமின் உடலில் உயிர் தங்கியிருக்கும்வரை இத்தகைய ஜனநாயகத்தை நாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம். மிஸ்டர் கரமண்டுக்கு அல்ஸ்டர் தலைவர் கர்ஸன்பிரபு கூறியது போல், "நான் உங்களால் ஆளப்பட விரும்பவில்லை" என்றே நான் காந்திஜிக்கு கூறிவிடுகிறேன். இந்தியாவிலுள்ள ஹிந்துக்களும் முஸ்லிம்களுமாகிய இரு சமுதாயத்தினர்களும் சுயராஜ்யமடைய துரிதமான வழி பாகிஸ்தான் ஒன்றே. அந்தப் பாகிஸ்தான் என் வாழ்நாளில் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி நான் இதைத் தெளிவான புத்தியுடன்தான் கூறுகிறேன். ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சுதந்திரம் கிட்டாமல் செய்து வருபவர்கள் காங்கிரஸும் ஹிந்துத் தலைவர்களுமே என்று நான் வருத்தத்துடன் கூறிக்கொள்கிறேன். ஆதலால் காந்திஜிக்கு உண்மையில் நாடு விடுதலை அடைய வேண்டுமென்ற ஆர்வமிருந்தால், அவர் ஹிந்துத் தலைவர்களை சுதந்திர பாகிஸ்தான் திட்டத்திற் கிணங்கும்படிச் செய்யட்டும்.

பாகிஸ்தானைப்பற்றி மேனாட்டு அபிப்பிராய மென்ன?

இந்திய முஸ்லிம்களின் பிறப்புரிமையாகக் கருதப் பட்டு வரும் பாகிஸ்தான் லக்ஷியம்பற்றி மேனாட்டினர் என்ன கருதுகிறார்கள் என்பதைப்பற்றி ஆராய்வோமாயின், சமத்துவமனப்பான்மை கொண்ட அறிஞர் பலர் பாகிஸ்தான் திட்டத்தினால்தான் இந்தியா சுதந்திர முறும் என்ற கருத்துக்கொண்டிருக்கின்றனர். ஆனால் காங்கிரஸ் பொய்ப் பிரசாரத்தையும் அவர்களின் படாடோபத்தையும் கண்டு அவைகளை நம்பிக்கொண்டிருக்கும் சிலர், பாகிஸ்தானுக்கு விரோதமான கருத்துக்கொண்டிருக்கலாம். அவர்கள் முஸ்லிம் லீக்குடையவும் இந்திய பாகிஸ்தான் திட்டத்துடையவும் முஸ்லிம்களின் தனிப்பட்ட கலாஞானத்தைப் பற்றியும் சரியானபடி தெரிந்துகொள்ளாமல் அவர்கள் நாட்டிலுள்ள தேசியத் தன்மையை அடிப்படையாகக் கருதிக்கொண்டு அந்த முறையில் இந்திய விவகாரங்களைப் பைசல் செய்யும், முறைகளைப் பலவாறாகக் கூறுகின்றனர். இதற்குக் காரணம் இந்திய முஸ்லிம்கள் தங்கள் கொள்கைகளைச் சரியானபடி மேனாடுகளில் பிரசாரம் செய்யவில்லை என்ற குறைதான். கூடிய சீக்கிரம் நம் லக்ஷியங்களை நன்கு அவர்கள் தெரிந்து கொள்வதற்கு ஹேது ஏற்படும். பலருடைய ஆராய்ச்சியைப் பற்றி நாம் கவனிப்பதைக் காட்டிலும் மேனாட்டின் அறிஞராகவும் பெரும் புலமை வாய்ந்தவராகவும் உள்ள உலகப் பிரசித்திவாய்ந்த ஜியார்ஜ் பெர்னாட்ஷா அவர்களின் கருத்தொன்றே போதுமானதென்று எண்ணுகிறோம். அவர் சமீபத்தில் பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளித்தபோது கீழ்க்காணும்படி கூறினார்: முஸ்லிம்கள் பாகிஸ்தான் கோருவது சரியான கோரிக்கையாகும். அது ஒரு தேசியக் கோரிக்கையாகும். அயர்லாந்துவாசிகள் அல்ஸ்டர் நாடெனப் பிரித்து கொண்டது போலவே பாகிஸ்தான் பிரிவினை

இயற்கை யானதாகும். இதை அவர்கள் கேட்பது போல் கொடுத்துவிடுவதில் கஷ்டமொன்றுமில்லை. மற்றவர்கள் இதற்கு இடைஞ்சலாய்த் தொல்லைப் படுத்திக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. பாகிஸ்தான் அயல் நாடு போன்றதொரு நாடாக ஏற்பட்டுத் தீருமென்று நம்புகிறேன்" என்று கூறியுள்ளார்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் சகோதரர்களாகப் பழகுவதற்கும் புதிய வழியொன்றை காங்கிரஸ்தலைவர்களில் சிலர் சொல்கிறார்கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கலப்பு மணம் செய்து கொண்டால் நாட்டில் வேற்றுமை ஒழிந்துவிடுமென்றும் நாட்டைப் பிரிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படாதென்றும் கூறும் இவர்களின் கூற்று சரியானதா! இவர்களின் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் ஏழுகோடிதாழ்த்தப்பட்ட மக்கள் எந்த நிலையில் அவதி யுறுகிறார்கள்? அவர்களுக்கு கலப்பு மணம் செய்து கொடுக்கச் சம்மதியாதவர்கள். அவர்களைத் தொடவும் கூடாது. அவர்களின் வாழ்க்கை ஸ்தலங்கள்கூட தனியான சேரியில் இருக்கும்படி செய்திருக்கும் இவர்கள் முஸ்லிம்களைக் கலப்புமணத்தின் மூலம் சமாதானப் படுத்திவிடலாம் என்று கூற்றைக்கண்டு நகைக்காதிருக்க முடியாது. ஒருசில முஸ்லீம்கள் தவறுகக் கலப்புமணம் செய்திருப்பார்களாயின் அப்பெண்கள் முஸ்லிம் மதத்தைத் தழுவியிருக்க வேண்டும். அப்படியில்லாமல் அவர்களின் பழைய கொள்கைகளிலேயே இருப்பார்களாயின் அவர்களை இஸ்லாம் மதப்படி மணந்து கொள்வது முடியாத காரியமாகும் அச்செயலை இஸ்லாம் அனுமதிக்காது.

பாகிஸ்தான் பணக்கார நாடல்ல.

சில காங்கிரஸ் கூலி முஸ்லிம்கள் ஹிந்துக்களிடம் கைக்கூலி வாங்குவதற்காக அவர்கள் சொல்லுவதை எல்லாம் குத்தகைக்கு வாங்கிக்கொண்டு பொய்ப் பிரசாரம் செய்கின்றனர். பாகிஸ்தான் பிரதேசத்தால்

பணக்காரர்களின் ஆட்சிதான் நடக்கும் என்றும் ஏழைகள் மிகக்கஷ்டப்படுவார்கள் என்றும் கூறித் திரிகின்றனர். இது முழுவதும் மிகப் பொய்யா? சாரமாகும் முஸ்லிம் லீக்குடைய கொள்கையில் பணக்காரன், ஏழை, தொழிலாளி, முதலாளி, உழவன், மிராசுதார் என்ற வித்தியாசம் கிடையாது. முஸ்லிம் லீக்கில் முஸ்லிம்களாகிய எல்லோரும் சேரலாம். பாகுபாடு என்பது இருக்கமுடியாது. ஏனெனில் இறைவன் முஸ்லிம்களுக்கு 'குர்ஆன்' மூலம் ஏழைகளை எந்தவிதம் நடத்த வேண்டும் என்றும் பணக்காரர்களுக்கு பணம் கொடுத்திருப்பதன் நோக்கம் இன்னதென்பதையும் நன்ருக விளக்கிக் கூறியுள்ளான் அதற்கேற்பவே பாகிஸ்தான் சர்க்கார் இறைவனின் சட்டத்தை நன்ருக அமுல் நடத்தும். எனவே ஏழைகள் பாகிஸ்தான் சர்க்காரில் எந்தவிதக் கஷ்டமும் பட பியாயமில்லை. நமது காயிதே ஆஜம் அவர்களும் தமது உழைப்பு முழுவதும் ஏழைகளின் சுபிக்ஷத்திற்கும் அவர்களின் உயர்வுக்காகவுமே என்றும் பாகிஸ்தான் சர்க்காரில் ஏழைகளின் நலன் நன்ருகக் கவனிக்கப்படும் என்றும் பலதடவைகளில் கூறியிருக்கிருர்கள். அவர்கள் ஏழைகளின்பால் எவ்வளவு அனுதாபமுடையவராக இருக்கிருர் என்பதற்கு ஒரு மகா நாட்டில் கூறியுள்ள கீழ்க்காணும் அவர்களின் அபிப்பிராயமே போதுமானதாகும்:

கொடுமையான முறையில் நாம் கஷ்டப்பட க்ஷேமமுறும் மிலச்சுவன்தார்களுக்கும் முதலாளிகளுக்கும் ஒரு எச்சரிக்கை விடுகிறேன். லக்ஷக்கணக்கான நமது மக்கள் ஒரு வேளை உணவுக்கும் வழியின்றி தவிக்கின்றனர். நான் நேரில் பார்த்திருக்கிறேன். இதுதான் நாகரிகம் இதுதான் பாகிஸ்தானின் நோக்கமா? (இல்லை என்ற கரகோஷம்) இதுதான் பாகிஸ்தானின் நோக்கமென்ருல் அவ்வித பாகிஸ்தான் எனக்குத் தேவையில்லை. மிலச்சுவான்தார்களும் முதலாளிகளும் அறிவாளிகளாயின் நவீன வாழ்க்கை நிலைமைக்குத் தக்கபடி தங்களை நேர்

செய்து கொள்ளவேண்டும். இல்லையேல் ஆண்டவன் அவர்களை ரக்ஷிப்பானாக. நம்மால் நிச்சியமாய் அவர்களுக்கு உதவமுடியாது.

பாகிஸ்தானின் செழிப்பு

ஒவ்வொரு முஸ்லிம் தன்னுடைய சொந்த நலனை அறியும் சிற்பியாய் இலங்க வேண்டியதன் பொருட்டும் காயிதே ஆஜம் அவர்கள் நமக்காக அவரின் சரித்திர சம்பந்தமான பாகிஸ்தான் திட்டத்தில் வெற்றிகாண உதவுவதன் பொருட்டும் முஸ்லிம்கள் அனைவரும் இதனை அறிய வேண்டும். சுதந்திரத்திற்கும், லீகிற்கும் எதிரான சக்திகள் பாகிஸ்தானத்திற்கும், காங்கிரஸ்-லீக் உடன்பாட்டிற்கும் எதிரிடையாய் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் போராடிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு லீகரும் பிரசங்க வன்மை பெற்றவராய்த் திகழவேண்டும். "முஸ்லிம் விவகாரம் ஒரு சிறுபான்மைப் பிரச்னை; பாகிஸ்தான் கோரிக்கை ஒரு வகுப்பு சம்பந்தமான வாதம்"—என்ற மகாசபைக்காரரின் தீவிர பிரசாரத்தை இந்தப் புள்ளி விபரங்களுடன் கூடிய விளக்கம் ஒருமுகமாய் மறுக்கின்றது. அநேக ஐரோப்பிய நாடுகள் போலல்லாது, இந்தியாவில் பிரியாது ஒன்று சேர்ந்து மிளிரும் ஒரு முஸ்லிம் தாயகத்தை இந்தப் புள்ளிகள் தெளிவாக்குகின்றன. முஸ்லிம்கள் அதிகச் சிறுபான்மையாய் வதியும் இடங்களைக் கணக்கிடாது, பெரும்பான்மையாய் வசிக்கும் இடங்களை மட்டும் கணக்கிட்டாலும், வடமேற்கு பாகிஸ்தானம் இரண்டு கோடிக்கு மேற்பட்ட முஸ்லிம்களையும் கிழக்கு பாகிஸ்தானம் மூன்று கோடிக்கு அதிகமாயும் முஸ்லிம் எண்ணிக்கை கொண்டு மிளிர்கின்றன. இரண்டையும் ஒன்று சேர்த்தால் மொத்தம் ஐந்து கோடிக்கு மிகுதியாகின்றது. மேலும் வடக்கு மலைத்தொடர் மூலம் கிட்டும் மின்சார சக்தி (Hydro-Electric power) உலோகப்

பொருள் (Mineral wealth) பூமிவளம் (Soil fertility)- இவைகள் தனித்தனியாயும், சேர்ந்தும் பாகிஸ்தானப் பிரதேசத்தை உலகிலேயே அதிக வலுவான முஸ்லிம் நாடாக்குகின்றன. அத்தோடில்லாது, 1,70,00,000 ஒரு கோடி எழுபது லக்ஷம் மக்களைக் கொண்ட துருக்கியையும் 1,50,00,000 ஒரு கோடி ஐம்பது லக்ஷம் குடிகளைக் கொண்ட ஈரானையும் காண அது சக்தி வாய்ந்ததாய்க் காணப்படுகின்றது.

ஜம்மு, காஷ்மீர், பஹல்பூர், பலுச்சிஸ்தானம் போன்ற அதிக முஸ்லிம் எண்ணிக்கையுள்ள சமஸ்தானங்களைப் பாகிஸ்தான் நாட்டிலிருந்து பிரிக்க இயலாது. காரணம், வடமேற்குப் பாகிஸ்தானத்துப் பொருளாதார பலம் காஷ்மீர் போன்ற சமஸ்தானத்துக் காடு, உலோகம், நீர்ச் சக்தி, (Water Power) அங்கு வாழும் மக்களின் கலைத் திறன் இவைகளின் கூட்டுறவைக் கொண்டுதான் உத்தரவாதமளிக்கப்படும். பலம் வாய்ந்த தன்னலங் கொண்ட சிற்றரசர்களின் ஆட்சி குலைந்து, பொது மக்கள் ஆதரவுள்ள நிலை ஏற்படும்வரை, அங்கெல்லாம் பொருளாதார முன்னேற்றமேற்படச் சாத்தியமில்லை. மத்திய பஞ்சாபிலுள்ள ஐந்து ஜில்லாக்களாகிய அம்ரிட்ஸார், பெரோஜாபூர், ஹோஷியார்பூர், லூதியானா, ஜலந்தர்- இவைகளை முஸ்லிம்களும் சீக்கியர்களும் ஏறக்குறைய நிரப்புகின்றனர். முஸ்லிம்கள் கொஞ்சம் மெஜாரிட்டியாய் இருந்தாலும் கூட, அங்கு ஒரு சமுதாயமும் பூர்ண மெஜாரிட்டியிலில்லை. இப்பாகங்கள் முஸ்லிம்-சீக்கியர் ஒருமைப்பாட்டினால் பாகிஸ்தானுடன் சேர்க்கப்படின் சீக்கியர்கள் தங்களின் நிரந்தரத் தேசத்திற்காகத் துண்டுபடாத தாயகத்தை அடைவர். அல்லாமல் பாகிஸ்தானத்திற்குப் புறத்தில் வாழ விரும்பின் அது சாத்தியமில்லை.

பாகிஸ்தானின் அவசியமும், பெரும்பான்மை முஸ்லிம்களும்

முஸ்லிம்கள் முன்னால் காணப்பட்டு வரும் மிக முக்கியமான அரசியல் பிரச்னை என்னவென்றால், காங்கிரஸ்காரர்கள் முஸ்லிம்களுடைய மதம், கலை, பாஷை முதலியவற்றிற்கெல்லாம் அளிக்கப்படும் முழுப் பாதுகாப்பு எனக் கூறிவரும் உரிமைகள் உண்மையிலேயே நன்றாகப் பாதுகாக்கப்படுமா? அல்லது முஸ்லிம்கள் பெரும்பான்மையாயுள்ள இந்திய மாகாணங்களைத் தனியாகப் பிரித்து அவைகளுக்குத் தனியாட்சி கொடுப்பதனால் அவ்வுரிமைகள் பாதுகாக்கப்படுமா? — என்பதாகவே இருந்து வருகிறது. மேலே கூறப்பட்டுள்ள வகையில் ஒப்புக்கொள்ளப்படுமாயின் இந்தியாவிலுள்ள பத்துக் கோடி முஸ்லிம்களும் என்றென்றைக்கும் ஒரு சிறு பான்மைத் தொகுதியினராகவே ஒடுக்கப்பட்டு போய், தங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் பெரும் பான்மைச் சமூகத்தார்களின் நல்லெண்ணத்திற்காகவும் சார்ந்து நிற்கவேண்டியவர்களாக ஏற்படும்படி இருக்கும்.

இந்தியாவிலுள்ள முஸ்லிம் எண்ணிக்கை உண்மையிலேயே எல்லா மாகாணங்களிலும் சிதறண்டுபோய், எந்த ஓர் இடத்திலும் அடர்த்தியாய் ஒரு சுயேச்சையுடன் கூடிய தனியான சக்தியுள்ள அரசாங்கத்தை நடத்தக் கூடிய பலம் பொருந்தியவர்களா யில்லாமல் போயிருப்பார்களேயானால் அந்த முதல் முடிவைக் குறித்து ஒருவரும் ஆட்சேபிக்க முன்வரார். ஆனால் உண்மை யென்னவென்றால் இந்திய முஸ்லிம்கள் ஜனத் தொகையில் மூன்றில் இரண்டு பாகத்தினர், தங்களுடைய பெரும் பான்மை மாகாணங்களில் இருந்து வருகிறார்கள்; மற்ற மூன்றில் ஒரு பகுதியினரே சிறுபான்மை மாகாணங்களில் பல தொகுதியினராக வசித்து வருகிறார்கள். அடுத்தடுத்துள்ள பஞ்சாப், காஷ்மீரம், எல்லைப்புற மாகாணம்,

பெலுச்சிஸ்தான் ஆகிய ஐந்து மாகாணங்களில் வாழ்ந்து வரும் நாலு கோடியே இருபது லெட்சம் (4,20,00000) முஸ்லிம் ஜன எண்ணிக்கையில் வடமேற்குப் பகுதியில் மட்டும் முஸ்லிம்களின் ஜனத்தொகை இரண்டு கோடியே எண்பது லக்ஷம் (2,80,00000) இருக்கிறார்கள். பஞ்சாப் மாகாணத்தின் கீழ் எல்லையைச் சிறிது முன்பின்னாகச் சரிப்படுத்தி அமைத்து விட்டால்; முஸ்லிம்களின் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமுடையதாய்ச் செய்து விடலாம். பஞ்சாப்பிலிருந்து அம்பாலா பகுதியையும் கிழக்குப் பாகத்திலுள்ள ஹிந்து சமஸ்தானங்களையும், சீக்கிய சமஸ்தானங்களையும் நீக்கி விட்டுப் பார்ப்போமானால், இந்த மாகாணத்தில் இப்பொழுதுள்ள இரண்டு கோடியே எண்பத்தைந்து லெட்சம் (2,85,00,000) ஜன சங்கியை இரண்டு கோடியே பத்து லெட்சமாகக் (2,10,00,000) குறைந்து போகும். ஆனால் முஸ்லிம்களின் எண்ணிக்கையோ வென்றால் இதுபோதுள்ள 55% ஐம்பத்தைந்து சதவீதத்திலிருந்து எழுபது சதவீதமாக (70%) உயர்ந்து போய்விடும். வடமேற்குப் பகுதியிலுள்ள முஸ்லிம்கள் அனைவரும் ஓரே தொகுதியாகக் கணக்கெடுக்கப் படுவாராயின் அப்பொழுது முஸ்லிம் விகிதாச்சாரம் இன்னும் அதிகமாய் மிளிர்ந்து கொண்டிருக்கும். மேலே கூறிய பிரகாரம் பஞ்சாப்பின் கிழக்கு எல்லையைத் திருத்தி அமைத்து விட்டால், வடமேற்குப் பகுதியில் மூன்று கோடியே ஐம்பது லெட்சம் (3,50,00,000) ஜன சங்கியை நிறைந்துவிடும்; அவர்களுக்குள் முஸ்லிம்கள் மாத்திரம் இரண்டு கோடியே எழுபது லெட்சம் (2,70,00,000) ஜன சங்கியையினராகவும். முஸ்லிமல்லாதவர்கள் எண்பது லட்சத் (80,00,000) தினர்களாகவுமே இருப்பார்கள். அப்பொழுதிருக்கும் எழுபத்தேழு (77%) சத விகிதாச் சாரமுள்ள முஸ்லிம் ஜனசங்கியை, ஒரு ஸ்திரந்தரமான பலம் பொருந்திய தனியரசை நிலை நிறுத்தப் போதிய வலிமை மிகுந்ததாகிவிடும்; இத்தன்மை வாய்ந்த முடிவு ஒரு மாகாணத்து மக்களை இன்னொரு மாகாணத்

திற்குக் குடிபோகச் செய்யவேண்டிய அவசியமில்லாமலே கிடைத்து விடும்படி செய்யக் கூடியதாய் இருக்கிறது.

வங்கமும் அஸ்ஸாமும் வங்கத்தில் வாழும் ஐந்து கோடி (5,00,00,000) மொத்த ஜனசங்கியில் இரண்டு கோடியே எழுபத்தைந்து லக்ஷம் (2,75,00,000) முஸ்லிம்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்; அதாவது அவர்கள் ஐம்பத்தைந்து சதவீத (55%) முள்ள பெரும் பான்மையினராக இருக்கிறார்கள். ஜாவா தீவைத் தவிர, அம் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கையைப் போன்று உள்ள பிரதேசம் இந்த உலகத்தில் வேறு எந்தத் தனித்த முஸ்லிம் நாடுகளிலும் கிடையாது. துருக்கி, பாரசீகம், எகிப்து போன்ற தேசங்களைக் கூட, தனித் தனியாக எடுத்துப் பார்த்தாலும் அங்குள்ள முஸ்லிம் ஜன சங்கியைக் காட்டிலும் வங்காளத்தின் முஸ்லிம் மக்களுடைய எண்ணிக்கை இரண்டு பங்காக இருக்கிறது.

பஞ்சாபைப் போலவே தான் வங்காளத்தின் எல்லைகளும் சிறிது திருத்தி யமைத்துவிட்டால், அங்குள்ள முஸ்லிம் ஜன சங்கியை எண்பது சத (80%) வீதம் அல்லது அதற்குமேலும் அதிகமாகி விடக் கூடும். இப்பொழுது கீழ் வங்காளத்திலும், அஸ்ஸாமிலுமுள்ள, கோல்பாரா, சில்ஹெட் ஜில்லாக்களில் வாழ்ந்துவரும் முஸ்லிம்கள் எழுபத்தைந்து சத (75%) வீதம் அதிகமாய் இருக்கின்றனர். கீழ் வங்காளத்தை யொட்டியுள்ள மேற்கு வங்காள ஜில்லாக்கள் சிலவற்றில் முஸ்லிம்கள் மிகவும் பெரும்பான்மையோராகவே இருந்து வருகிறார்கள். இந்த முஸ்லிம் ஜன சங்கியை கீழ் வங்காளமும் அஸ்ஸாமும் என்று சொல்லப்படக் கூடிய ஒரு புதிய மாகாணத்தின் கீழே கொண்டு வரப்படுவார்களாகில் அப்பொழுது உண்டாகும் நாலுகோடி (4,00,00,000) முழுதும் ஜனசங்கியையில் முஸ்லிம்கள் மாத்திரம் எண்பது சத (80%) வீதத்திற்கு நிரந்தரமான பெரும் பான்மையினராக உயர்ந்து விடுவார்கள்.

முஸ்லிம்களின் லக்ஷியம் உண்மையான சுதந்திரப் பிரதேசத்தை உண்டுபண்ணுவதே

முழு சுதந்திரம் பெறுவதே இந்தியாவின் இறுதி லட்சியமாக இருக்குமானால், பிரிட்டிஷ்காரர்களின் தொடர்பை விட்டுப்பிரிந்து கொள்வதென்பது ஏற்பட்டு விடுவதற்குள்ள சந்தர்ப்பம் உண்டாகுமென்று கருதப் படுமானால், இந்தியாவின் இறுதி அரசியல் அதிகாரம் பகிர்ந்து கொடுக்கப்படுவதன் சரிசமான முழு அதிகாரத்தையும் கேட்பதற்குரிய எல்லாவித உரிமைகளையும் நம் முஸ்லிம்கள் பெற்றிருக்கிறார்கள். எதிர்கால இந்தியா அரசியலில் ஒரு சிறு பான்மைத் தொகுதியினராக இருப்பதனால் தங்களுடைய உரிமைகள் ஒழுங்கான முறையில் பாதுகாக்கப்படுமா? அல்லது வட மேற்கிலும் வடகிழக்கிலுமுள்ள இந்த இரண்டு பகுதி களிலும் முஸ்லிம்கள் ஓரே தொடர்ச்சியாக அடர்ந்துள்ள பூகோள அமைப்புப்படி சரியான எல்லைகளாக சூழப்பட் டுள்ள பூபாகங்களைப் பெற்றுக்கொண்டு, தனிச் சுதந்திர முள்ள தன்னாட்சி முறைக்குரிய பிரதேசங்களைப் பெற்றுக் கொள்வதால் அந்த உரிமைகள் நன்றாகப் பாதுகாக்கப் படுமா? என்று தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு அந்த முஸ்லிம்களையே சார்ந்ததாய் இருக்கின்றது. ஓரே ஒற்றுமையாயுள்ள இந்திய சமுதாயத்தினர் என்று சொல்லும் மோசம் செய்யும் ஆசை வார்த்தை உண்மையாக அவர்களுடைய (முஸ்லிம்கள்) உரிமைகளை பாதுகாக்கக்கூடியதா யிருந்திருக்குமேயானால் அவர்களது மனதில் ஒருவித நம்பிக்கையைக் கொடுத்திருக்கும். எதிர் காலத்தில் இந்தியாவின் அரசியலமைப்பு ஐக்கிய இந்தியாவே என்ற கொள்கை ஹிந்துக்களின் மனதில் நிறைந்திருப்பதனால் எந்தவிதமான வசீகரமுடைய இதர திட்டங்களும் அவர்களை அவர்களுக்குரிய பாகிஸ்தான் லட்சியத்தை விட்டும் அப்புறம் நகரும்படி செய்துவிட

முடியாது. அவர்களது உறுதியும் லட்சியமும் பாகிஸ்தானேயாகும்.

இந்தியாவின் காங்கிரஸ் அரசியல் வாதிகளுக்கு உண்மையில் நாடு விடுதலையடைய வேண்டுமென்ற எண்ணம் ஒரு சிறிதும் இருப்பதாக நாம் கண்டு கொள்ள முடியவில்லை. ஏனெனில் இந்திய முஸ்லிம்களின் இணையற்ற தலைவர் காயிதே ஆஜம் இந்திய சமுதாயத்தினர்களின் சமரசத்திற்குப் பல வகையில் முயன்று பார்த்தும் ஹிந்துத் தலைவர்கள் ஒரு சிறிதும் முஸ்லிம்களுக்கு விட்டுக் கொடுப்பதாய்க் காணப்படவில்லை. அவர்கள் காணும் கனவெல்லாம் முஸ்லிம்களை அடக்கியாளக் கூடிய ஐக்கிய இந்தியா அரசியல் திட்டந்தான் வேண்டுமென்று விழைகின்றார்கள். ஆனால் இவர்கள் கூறும் வாய் வேதாந்தம் என்னவென்று பார்ப்போமானால் தங்கள் நாட்டில் ஒரு பெரும் பகுதியுடைய மக்கள் தனித்துத் தங்கள் நலன்களைத் தாங்களே கவனித்துக்கொண்டு பிரிந்து வாழ்கிறோம் என்று பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று தீர்ப்புக் கூறியும்கூட இதையெல்லாம் கவனியாது இவர்கள் அன்னிய நாட்டைப்பற்றி ஜனநாயகத் தீர்ப்புச் சொல்ல அழையாமலே ஆஜராகின்றனர். உதாரணமாக பண்டித ஜவாஹர்லால்நேரு துருக்கியில் ஒரு சில ஆயிரம் ஜனத் தொகையைக் கொண்ட குருதியர் இருக்கின்றனர்களே அவர்களைத் தனித்துப் பிரிந்து சுயேச்சையுடன் வாழப் பிரியப்படுவதாகவும் அவர்களை அவசியமாகப் பிரித்துத் தனியாட்சியினராக ஆக்கிவிட வேண்டுமென்றும் அவர்களைத் துருக்கியின் ஆட்சியில் வைத்திருப்பது அநீதமென்றும் அவர்களைப் பிரித்துத் தனியாட்சிக் கொடுக்க வேண்டியது துருக்கி சர்க்காரின் கடமையென்றும் அவர்களுக்காக வக்காலத்து வாங்கிப் பேசுகிறார். இதை அவருடைய சுயசரிதையில் தெளிவாக எழுதியுள்ளார். இவர்களுக்காகப் பரிந்து பேசும் பண்டிதர், இந்த நாட்டில் நான்கில் ஒரு பகுதியைக் கொண்ட முஸ்லிம்கள்

இன்றைய ஜனநாயக முறையில் தங்கள் வாக்குகளைத் தேர்தல் மூலம் தந்து, இன அமைப்பின்படி தாங்கள் பிரிந்துபோக இஷ்டப்படுகிறோம் என்று தீர்ப்புக் கூறியுங் கூட, இதை ஏற்றுக்கொள்ளாமல் விதண்டாவாதம் கூறுவதன் நோக்கம் என்ன வென்று நமக்குப் புரியவில்லை. இவரை ஒரு பெரிய ஆராய்ச்சியாளரென்று எப்படிக் கூறுகிறார்களென்பது நமக்குச் சந்தேகமாயிருக்கிறது. இவைகளையெல்லாம் பார்க்கும்போது சரியான முறையில் இந்தியப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்வது முடியாதென்றும் நேர்மையான போராட்டத்தின் மூலமே இந்தியப் பிரச்னையைத் தீர்த்துக்கெள்ள வேண்டு மென்பதும் நன்றாகப் புலனாகின்றது.

மேற்கண்டபடி முஸ்லிம்களை யடக்கி யாளவேண்டு மென்ற எண்ணமுடைய ஹிந்துத் தலைவர்களும் காங்கிரஸ் வாதிகளும், சீக்கியரைத் தூண்டிவிட்டுப் பாகிஸ்தானுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும்படிச் செய்கிறார்கள். இவர்களுக்கு இவர்களுடைய தாயகங்களில் சரியான வகையில் பாதுகாப்பு அளிக்கப்படுமென்றும் பாகிஸ்தான் திட்டத்தில் போதிய உரிமைகள் வழங்கப் படுமென்றும் நமது காயிதே ஆஜமவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். இவர்களின் சம்பந்தமாக 1940-வது வருஷம் ஏப்ரல்மாதம் 26 தேதி ஈஸ்டர்ன் டைம்ஸ் பத்திரிகையில் (Eastern Times) M. R. T. அவர்கள் எழுதியுள்ள — அதன் சாரம்சத்தைச் சுருக்கமாய்க் கீழ்க்காணும்படி தருகிறேன்:—

இந்தியாவில் வசித்து வரும் முஸ்லிம்களுக்கு உள்ளதைப் போன்றதானே சீக்கியர் விஷயமும் என்று அவர்கள் (சீக்கியர்) கூறத்துணிவது இந்தியப் பிரச்னையை சாதாரணமாய்க் குழப்பி விடக் கூடியதாகவே இருக்கிறது. ஹிந்து இந்தியாவில் வாழும் மூன்று கோடி (3,00,00,000) முஸ்லிம்கள் ஹிந்து இந்தியாவின் ஆட்சியின் கீழ் உள் அடங்கி வாழ்வதற்கு இணங்கி யிருக்கும்போது முப்பது

லக்ஷம் (30,00,000) ஜனத் தொகையைக் கொண்ட சீக்கியர்கள் வடமேற்குப் பாகத்திலுள்ள முஸ்லிம் பிரதேசத்தில் தங்களுக்குக் கிடைக்கும் அந்தஸ்தைக் கொண்டு ஏன் திருப்தியடையக்கூடாது என்பதற்கு தக்க காரணம் ஒன்றும் புலனாகவில்லை. தற்கால நிலைமையைக் கொண்டு பார்க்கும்போது, தனி இன அந்தஸ்தை பெற்றுக் கொள்வதற்கு லாயக்கற்ற முப்பது லக்ஷம் (30,00,000) சீக்கியர்களின் ஆட்சேபணைக்காக முஸ்லிம் இந்தியாவை பூகோள அமைப்பின்படியும் பாகிஸ்தான் திட்டப்படியும் சரியான முறையில் எல்லை கோலப் பட்டிருக்கிற பகுதிகளிலுள்ள பெரும்பான்மையாக வாழும் ஆறு கோடி (6,00,00,000) முஸ்லிம்களின் சுதந்திர உரிமையை மற்றப்பிரதேச முஸ்லிம்களும் சேர்ந்து பத்து கோடி (10,00,00,000) முஸ்லிம்களும் அர்ப்பணம் செய்து விடுவதென்பது ஒருக்காலும் முடியாத காரியமாகும். இப்போது இந்தியாவிலிருந்து வரும் பத்து கோடி முஸ்லிம்களின் கண் முன்னே காணப்பட்டுவரும் பிரச்னை இவர்களுக் கிடையில் உள்ள சிறுபான்மையின் எண்ணிக்கையை எவ்வளவு மட்டும் நியாயமாய்க் குறைக்க முடியுமோ அவ்வளவு மட்டும் நியாயமாய்க் குறைப்பதாகவே இருந்து வருகிறது. நாம் நம்முடைய பத்து கோடி முஸ்லிம்களுக்கும் விடுதலை கேட்கவில்லை. ஆனால் நம்முடைய ஜன சங்கியையில் மூன்றில் இரண்டு பகுதியினருக்கே சுயேச்சையான சுதந்திரம் வேண்டுமென்று கேட்கிறோம். சீக்கியர் கோருவது போல் பிரிவினை அங்கீகரிக்கப்படுமானால், அந்தச் சீக்கியரைக் காட்டிலும் அதிகமான முஸ்லிம்கள் வசித்து வரும் இந்தியாவின் மற்றப் பகுதிகளிலும் முஸ்லிம்கள் தனிச் சுதந்திரமாக வாழ தனித்த பிரதேசங்களைக் கோர வேண்டியதேற்படும்.

முஸ்லிம்கள் ஆட்சியில் இந்தியா

சென்ற கால சரித்திரம், இந்தியா என்னும் இந்த உபகண்டத்தில் வசித்துவரும் மக்களுக்கெல்லாம் ஒற்றுமை

வென்னும் எண்ணத்தை முதன் முதலில் உண்டு பண்ணி வைத்தவர்கள் முஸ்லிம்களே யென்று நன்கு நிரூபித்துக் காட்டுகின்றது; ஆனால்,முஸ்லிம் ஜன சங்கியை முழுதும் ஹிந்துக்களுக்குள்ளே இரண்டறக் கலந்து விடவேண்டு மென்ற நோக்கத்தோடு அந்த எண்ணம் உற்பத்தியாக்கப் படவில்லை. அதற்கு மாறானதாகவே முஸ்லிம் மன்னர் களின் சாம்ராஜ்யக் கொள்கைக்கு அந்த எண்ணம் பலன் தரக்கூடியதா யிருந்து வந்தது. அது பொழுதும் ஹிந்துக் களும் முஸ்லிம்களும் ஒரே ஐக்கியமுள்ள சமுதாயத் தினராய் ஒருபோதும் ஒன்றித்து இருந்ததில்லை. அந்த இரண்டு சமூகத்தினரும் தங்கள் தங்கள் நிலைமைகளை யொத்துப் பொதுவான அரசாங்கத்தின் கீழ் அடக்கி வைக்கப்பட்டவர்கள் போலவே இரண்டு வகையான வெவ் வேறு மதங்களின் வெவ்வேறு கலை, நாகரீகப் பண் பாடுடையவர்களாகவே வாழ்ந்து வந்தார்கள். அக்கால முஸ்லிம் மன்னர்கள் சந்தேகமில்லாமலே தங்கள் ஹிந்துக் குடிமக்களிடத்தில் தாராளமான மனப் பான்மைக்குரிய கொள்கைகளையே பின்பற்றி வரலாயினர். அவர்களுக் குரிய மத விஷயத்திலும், தெய்வ ஆராதனை விஷயத் திலும் அவர்களுக்கு வேண்டிய உரிமைகளை அளித்திருந் தார்கள். அதைத் தவிர ஹிந்துக்களுக்கும் முஸ்லிம் களுக்கும் ஒரே வகையான அபிமானத்தையும் ஆதர வையும் அளித்து வந்தார்கள். அக்பர் சக்கரவர்த்தியின் காலத்தில் முதன் முதலாக ஒரு வகையான புதிய மார்க்கத்தையும் உற்பத்தி செய்து அந்த மதத்தின் பேராலேயும் ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் பிணைத்து வைக்கும் ஒருவித முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் அந்த முயற்சி எல்லாத் திக்குகளிலும் எதிர்க்கப்பட்டு வந்ததால், பிறகு அது ஒரு பிரயோ ஜனமுமில்லா தொழிந்தது. அதற்குப்பிறகு ஹிந்துக் களும் முஸ்லிம்களும் தங்கள் சொந்த முயற்சிகளால் உற்பத்தி செய்யப் பட்டதென்று சொல்லிக் கொள்ளக் கூடிய முறையில் எந்த அரசியல் அமைப்பின் கீழும்

ஒற்றுமையாக வாழ்வதற்குரிய தருணத்தை எப்பொழுதுமே பெற்றுக் கொண்டார்களில்லை. அதற்கு மாறாய் முகலாய சாம்ராஜ்யம் சிதறுண்ட பின்பு, சீக்கியரும் ராஜபுத்திரரும் மகாராஷ்டிரரும் ஒன்று போலச் சேர்ந்து முஸ்லிம் சமஸ்தானங்களாகிய ஹைதராபாத், அயோத்தி, வங்காளம் ஆகிய பிரதேசங்கள் மீது அடிக்கடி அக்கிரமமாய் படையெடுப்புகள் எடுத்துக் கொண்டதால் ஏற்பட்ட பலனும் அதற்கு முன்பே முஸ்லிம்களிடத்தில் கொண்டுள்ள துவேஷத்தாலும் அதற்குமுன்பே முஸ்லிம்களை விட்டு ஹிந்துக்கள் பிரித்திருந்த பிளவானது இன்னும் அதிகமாய்ப் பெரிதாகத் தொடங்கி விட்டது. அதிலிருந்து முஸ்லிம் மதத்தின் மீதும், முஸ்லிம் ஜாதியார் மீதும் ஏற்பட்டிருந்த காரணத்தினலேதான் புதிய ஹிந்து இயக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அப் புதிய இயக்கங்கள் மூலம் முஸ்லிம்களை அடியுடன் அடக்கி யொடுக்கிவிட வேண்டுமென்பதே அவர்களின் கருத்தும் குறிக்கோளுமாக இருந்து வந்ததென்பதற்குப் போதிய சாட்சியங்கள் பிரத்தியட்சமாய் காணக் கிடைக்கின்றன. பஞ்சாப்பில் சீக்கியரின் கீழும் மத்திய இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் மகாராஷ்டிரரின் கீழ் முஸ்லிம்கள் எத்தகைய கொடிய கொடுங்கோன்மையின் அடியில் தாழ்ந்த நிலையில் அழுத்தி வைத்திருந்தார்க ளென்பதை இத் தேச சரித்திரம் இன்னும் நமக்கு நன்றாக நினைப்பூட்டிக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமையை மறந்து முஸ்லிம்கள் ஹிந்துக்களின் ஐக்கிய இந்திய கோட்பாட்டை, கனவிலும் விரும்ப மாட்டார்கள். அவர்கள் விரும்புவது மனிதத் தன்மையோடு மக்களை நடத்துவிக்கும் படியான சுய நிர்ணய சுதந்திர உரிமைகளைக் கொண்ட பாகிஸ்தான் திட்டம் ஒன்றே.

பாகிஸ்தானைப்பற்றி வெளி நாட்டாரின் கேள்விக்கு காயிதே ஆஜத்தின் பதில்

பாகிஸ்தானைப்பற்றி வெளிநாட்டார் சில தப்பபிப்பிராயம் கொள்ளுகிறார்கள். அதாவது பாகிஸ்தான் எப்படிப்பட்ட உரிமைகளுடனிருக்கும், வட மேற்கு, வட கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களுக்கு இடையே போக்கு வரத்து எப்படி நடைபெறும், அஸ்ஸாமைப் பாகிஸ்தானில் சேர்ப்பதேன்? வெளிநாட்டுப் படை எடுப்பு ஏற்பட்டால் என்ன செய்வது? பாகிஸ்தானின் பொருளாதார நிலைமை சிறு பான்மை மாகாண முஸ்லிம்கள் நிலை என்ன என்ற கேள்விகளை திரும்பத் திரும்ப கேட்கிறார்கள். அதற்கு நம் தலைவர்களும் முஸ்லிம் பத்திரிகைகளும் அவ்வப்போது சரியான பதில் கொடுத்துவந்திருக்கின்றன. நாமும் சில பதில்கள் இந் நூலின் பல பகுதிகளில் பதில் கூறியுள்ளோம் என்றாலும் அதற்குச் சுருக்கமான சில பதில்களை நமது காயிதே ஆஜம் பிரிட்டிஷ் ஒலி பரப்பும் நிலையத்தின் நிருபர் மிஸ்டர் டொனல்டு எட்வர்ட்ஸ் என்பவருக்குப் பேட்டியளித்துக் கூறியபோது சொல்லிய பதில்களின் மொழி பெயர்ப்பைக் கீழ்க் காணுமாறு தருகிறேன்:—

பாகிஸ்தான் என்று சொல்லப்படும் முஸ்லிம் சமுகத்தின் ஆட்சி முறையானது, பூழு ஆதிக்கத்தோடு கூடிய தனிச் சுதந்திர பிரதேச ஆட்சியாகவே இருக்க வேண்டும். வெளிநாட்டு விஷயங்கள் தற்காப்பு போன்ற விஷயங்கள் அனைத்திலும் இந்த தனிச்சுதந்திர ஆட்சி முறைக்குத்தான் பூரண உரிமை இருத்தல்வேண்டும். இங்ஙனமின்றி பிடரேஷன் ஆட்சியாக அமைக்கப் பட்டு விட்டால் பிடரேஷனின் ஸ்தானம் வகுக்கும் நாடுகள் மத்தியில் ஏற்படும் ஆட்சி குழுவினருக்கு அதிகாரத்தைச் சிறுகச்சிறுக அதிகமாக்கிக் கொடுத்துக் கொண்டு போக வேண்டியதாகிவிடும். அமெரிக்கா ஐக்கியநாடு, கனடா,

ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, போன்றுள்ள பிடரேஷன் நாடுகளில் இந்த முறை சரியானதாயிருக்கலாம். ஆனால், இந்திய பிடரேஷன் ஆட்சி அமைப்பில் மத்திய அதிகாரக்கும்பல் ஹிந்துக்கள் மயமானதாகவே இருக்கும். இதுதவிர்க்க முடியாதபடி ஏற்பட்டு விடும். சமாதான முறையில் ஓர் ஒழுங்கான சமரசத்திற்கு வருமாறு நான் ஹிந்துக்களிடம் மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் நட்புக்குரிய முறையில் சமரசத்திற்கு முயன்றுதான் ஆகவேண்டும். அது பலாத்காரத்தைப் பற்றிய பிரச்னையாக இருந்தால் அப்போது யார் வெற்றி பெறுகின்றாரோ அவர்கள் கூறுகிறபடி நடப்பது என்று வைத்துக்கொள்ளலாம். ஆனால், நாங்கள் சமாதான முறையிலேயே அமைதியை அடிப்படையாகக் கொண்டு சமரசப் பேச்சு நடத்துவதற்கு விரும்புகிறோம். அசாத்தியமான தீர்த்துக் கொள்ளமுடியாத கஷ்டங்களும் தொந்தரவுகளும் தோன்றலாம். ஆனால் இறைவன் அருளால் இந்தக் கஷ்டங்களையும், தொல்லைகளையும் சமாளிக்க முடியும் என்று நான் நம்புகிறேன். ஹிந்துச் சமுதாயத்தினரும் ஒன்றாகக்கூடி, ஒற்றுமையுடன் வேலை செய்வோமானால் நாம்இந்தத் தொல்லைகளையெல்லாம் சரிசெய்து விடலாம். வடமேற்குப் பாகிஸ்தான் வடகிழக்குப் பாகிஸ்தான் போக்குவரவு பற்றிய கேள்விக்குக் காயிதே ஆஜமின்பதில்.

நீங்கள் பிரிட்டனிலிருந்து புறப்பட்டு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்த வேறு நாடுகளுக்குப் போவதென்றால், அந்நிய நாட்டுப் பிரதேசங்களை நீங்கள் கடந்து சென்றேயாக வேண்டுமல்லவா? சான்றாக சூயஸ் கால்வாயையேனும் நீங்கள் கடந்து சென்றுதானே ஆக வேண்டும்? இந்த விஷயங்களெல்லாம் சமாதான முறையில் செய்துகொள்ள வேண்டிய ஏற்பாடுகளாகும். வடமேற்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களிலிருந்து வடகிழக்கிலுள்ள முஸ்லிம்பிரதேசங்களுக்குப்போகவேண்டுமானால், ஹிந்துஸ்தான் பிரதேச மெனப்படும் இந்த கார்டர் (Carder) வழியாகத்தான் நாம் இன்று போய் வந்து

கொண்டிருக்கிறோம். இதில் இன்று எத்தகைய கஷ்டங்களும் துன்பங்களும் நேரிடுவதில்லை. இந்த வகையிலேயே தொடர்ந்து அனுசரிக்கப்பட்டு வருவதில் தவறென்ன? ஆனால் பாகிஸ்தான் பிரதேசத்திற்கும் ஹிந்துஸ்தான் பிரதேசத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட வேண்டியிருக்கும் ஒப்பந்தத்தில் இது ஒரு முக்கிய அம்சமாக இருக்கும். சமாதான முறையில் சமரசம் செய்து கொள்வதற்காக ஹிந்துக்கள் இணங்கி வருவார்களா என்பதுதான் இப்போதுள்ள பிரச்னை. நாம் நேய முறையில் சமரசம் செய்து கொள்வதற்காகச் சமரசப் பேச்சில் இறங்கினோமானால் எத்தகைய சங்கடங்களையும் சமாளித்து விடலாம், கஷ்டங்கள் ஏதும் ஏற்படமாட்டாது. கடந்த பலவருஷங்களாக ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒன்றுபடுத்த நான் அதிகப் பிரயாசை எடுத்துப் பார்த்தேன். ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் 1916-வது வருஷம் ஏற்பட்ட லக்ஷ்மணபுரி ஒப்பந்த விஷயத்தில் நான் மிகவும் முக்கியமான பங்கு கொண்டு உழைத்தேன். ஆனால், அப்போதே காங்கிரஸ் கட்சியானது வர வர ஹிந்து இயக்கமாகவே மாறிக்கொண்டு வந்தது. அதனால்தான் காங்கிரஸ் இயக்கத்தை விட்டு, முஸ்லிம் லீக் தனியான ஸ்தாபனமாய்ப் பிரிந்து கொள்ள வேண்டியது அத்யாவச்யமாகி விட்டது. அதனால்தான் முஸ்லிம் மாகாணங்கள் இந்திய பிடரேஷன் ஆட்சி முறையில் சேரமுடியாதென்று மறுக்கின்றது. இந்திய பிடரேஷன் குழுவினர்கள் முஸ்லிம்களுக்கு எவ்வளவு தான் சுதந்திரங்கள் அளிப்பதாகக் கூறினாலும் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று முஸ்லிம்கள் மறுப்பதற்குக் காரணம் காங்கிரஸ் ஸ்தாபனம் ஹிந்துக்களால் ஆக்ரமிக்கப்பட்டு, அசல் ஹிந்து ஸ்தாபனமாக்கப்பட்டு விட்டது போலவே, இந்திய பிடரேஷனும் காலம் செல்லச் செல்ல ஹிந்துக்கள் மயமாகிவிடுமென்று முஸ்லிம்கள் நம்புகின்றனர்.

சிறு பான்மை மாகாண முஸ்லிம்கள் நிலையைப் பற்றிய கேள்விக்குக்காயிதே ஆஜம் கூறும் பதில்:

இந்தப் பிரதேசங்களில், உதாரணமாகச் சென்னை மாகாணத்தை எடுத்துக் கொண்டால் இங்கெல்லாம் ஹிந்து ராஜ்யங்கள்தான் ஏற்படும். இத்தகைய மாகாணங்களிலுள்ள சிறு பான்மை முஸ்லிம்களுக்கு மூன்று வழிகள் உண்டு. அவைகளில் ஒன்று தாங்கள் இருக்கும் பிரதேசத்தின் குடிகளாகவே அந்தந்தப்பிரதேச குடி மக்களுக்குள்ள உரிமைகளுடன் போதிய எல்லா வகைப் பாதுகாப்புகளுடன் இருந்து வரலாம். இரண்டாவது, தாங்களிருக்கும் பிரதேசத்திலேயே வெளி நாட்டுக் குடிமக்களுக்குள்ள எல்லா வகையான நலன்களுடன் கூடிய உரிமைகளைப பெற்று வாழலாம். மூன்றாவது, இப்படியான முறைகள் சரியல்லவென்று அவர்கள் கருதினால் பாகிஸ்தான் பிரதேசத்திற்கே வந்து விடலாம். நான் அவர்களை பாகிஸ்தானில் மிகக் களிப்புடன் வரவேற்பேன். பாகிஸ்தானில் ஏராளமான வசதியுடைய இடமிருக்கிறது. ஆனால் இந்த நடைமுறைகளில் எது சிறந்தவை எந்த வகையில் தீர்மானித்து நடந்து கொள்வதென்பதை அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப் படும்போது யோசித்து முடிவு செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

அஸ்ஸாமை பாகிஸ்தானில் இணைப்பது தவிர்த்து வேறு வழியில்லை. அதை வேறு எந்த மாகாணத்திலும் இணைத்துக் கொள்வதற்கு முடியாது. இந்த உலகத்தில் இவ்வாறு பல வகைப்பட்ட சமுதாயங்களுடைய எந்த நாட்டிற்காகவும் நீங்கள் அரசியல் திட்டம் ஏதாவது வகுப்பதென்றால், அந்தத் திட்டம் ஆரம்பத்திலேயே சரியாக அமைந்துவிட முடியாது. நாளாவட்டத்தில் அதிலுள்ள எல்லா பிரிவுகளும் சரியாகிவிடும்.

அன்னிய நாட்டாரின் படையெடுப்பு ஏற்பட்டால் அப்போது தற்காப்புக்கு என்ன செய்வதென்றால்

இப்போதுள்ள அன்னிய சுதந்திர நாடுகள் வெளி நாட்டாரின் ஆக்ரமிப்பு நேரிடும்போது எவ்வாறு நடந்து கொள்கின்றனரோ அவ்வாறே நடந்து கொள்ளும். பத்து கோடி மக்களை ஜனத் தொகையாகக் கொண்ட ஒருநாடு, தன்னைத் தான் தற்காத்துக் கொள்ளமுடியவில்லை யென்றால், அத்தகைய நாட்டை பிறரெவரும் காப்பாற்றி விடமுடியாது. ஒரு நாடு தன்னந்தனியே தன் கால்களிலேதான் நின்றுகொண்டிருக்க முடியாதென்பது இந்தக் காலத்தில் இயற்கையாக இருக்கிறது. எனவே பொதுவான அக்கறைகள் கொண்டுள்ள பிரதேசங்களுடன் நேச உடன்படிக்கையும் உறவும் கொள்ள வேண்டியது சகஜமானதொரு செயலாகும். பாகிஸ்தானும் அப்படித்தான் நடந்துகொள்ளும்.

பாகிஸ்தானில் பொருளாதார நிலைமையைப் பற்றி ஐயப்பட வேண்டியதில்லை. பொருளாதாரத் துறையில் பாகிஸ்தான் நாடு மிகவும் வல்லமை பொருந்தியதாகத் தானிருக்கும். இந்தவிஷயத்தைப்பற்றி காங்கிரஸ் கட்சி நிபுணர்களே பரிசீலனையும் ஆராய்ச்சியும் செய்து பார்த்து விட்டுத் திடுக்கிட்டுப் போய்விட்டனர். பாகிஸ்தான் நாடு பொருளாதாரத் துறையில் வலிமை வாய்ந்த நாடாக இருக்க முடியாதென்ற பிரச்னையைப் பற்றி நாம் போதுமான அளவு விபரங்களை வெளிப்படுத்த வில்லை. பாகிஸ்தான் நாடு அதி அற்புதமான முறையில் பொருளாதாரத் துறையில் வலிமையும் உயர்வும் பெற்ற நாடாக இருப்பதற்குரிய வசதிகள் பல வாய்க்கப் பெற்றுள்ளதாக இருக்கின்றது.

எல்லைப்புற முஸ்லிம்கள்

எல்லைப்புறத்தில் முஸ்லிம்லீக் எல்லா ஸ்தானங்களையும் கைப்பற்ற முடியாமல் பாகிஸ்தானங்களை மட்டும் கைப்பற்றியதன் விபரத்தைக் காயிதே ஆஜம் கூறுவதாவது:— அங்கே தேர்தல் சுதந்திரமான முறையில்

அப்போதிருந்த கூலிசர்க்கார் தன் அதிகாரத்தை இது விஷயத்தில் அக்கிரமமான முறையில் துஷ்பிரயோகம் செய்துவிட்டது. அங்கு வாக்காளராக உள்ளவர்கள் பலர் எழுதத் தெரியாதவர்கள்; இன்னும் சில கேவலமான வகைகளிலெல்லாம் அங்கு தேர்தலில் நடத்தப்பட்டிருக்கின்றனர். அவற்றைப்பற்றி யெல்லாம் நான் நன்றாக விசாரணை செய்து வைத்திருக்கிறேன். அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு போயிருக்கிறது. எல்லைப்புற மாகாணத்தில் தேர்தல்போர் முஸ்லிம்களிடையே மட்டும் தான். அவர்கள் கிளப்பிய ஒலிமுழக்கங்கள், வாக்கியங்கள் ஏந்திப் பிடித்த கொடிகள், வாக்கியங்கள் பொறித்த விளம்பர போர்டுகள் முதலியவைகளை, (ஓர்ந்தவர்கள்) காங்கிரஸுடன் அவர்களுக்குக் கொஞ்சங்கூடச் சம்பந்தமில்லை என்பது நன்றாக விளங்கும். எல்லைப்புறப் பட்டாணியர்களின் விடுதலைக்காகவே அவர்கள் போராடுகிறார்களென்பது அவர்கள் போக்கிலிருந்து மிகத் தெளிவாக அறிந்துகொள்ளலாம். காங்கிரஸிலும் முஸ்லிம்கள் இருக்கிறார்களே யென்ற கேள்விக்குப் பதிலாவது:— ஒவ்வொரு சமூகத்திலும் சமூகத்தைக் காட்டிக்கொடுக்கும் கோடறிக்காம்புகள் இருக்கத்தான் செய்வார்கள். எல்லாநாட்டிலும் இப்படிப்பட்ட சமூகத் துரோகிகள் இருந்துதான் வந்திருக்கின்றனர். உங்களிடையேதான் பாருங்கள்; ஒரு 'ஹாஹா' தோன்றிவிடவில்லையா? அப்படித்தான். துரோகிகள் எங்குதானில்லை.

தேர்தலில் சவால்!

மேற்கண்ட காயிதே ஆஜமின் பதிலிலிருந்து வெளிநாட்டார் பாகிஸ்தான் விஷயத்தில் தப்பபிப்பிராயங்

கொண்டிருப்பது நீங்கிப்போகுமென நம்ப இடமிருக்கிறது. சமத்துவ மனப்பான்மை உடையோருக்கு மேற்கண்ட பதிலே போதுமானது. ஒரு பக்ஷமான வாதம் செய்யும் எவருக்கும் போதுமான பதில் சொல்லிவிட முடியாது. தேர்தலுக்கு முன்பெல்லாம் காங்கிரஸ் வாதிகள் இந்திய முஸ்லிம்களில் பெரும்பாலோர் பாகிஸ்தானை ஆதரிக்கவில்லை யென்று சொல்லிவந்தார்கள். அப்போது நாம் முக்கியப் பிரச்னையாகிய பாகிஸ்தானே நமது முடிவான அரசியல் லக்ஷியமென்றும் முஸ்லிம் லீக் ஒன்றே இந்திய முஸ்லிம்களின் தனிப்பெரும் ஸ்தாபனமென்றும் அதை இந்திய ஹிந்து பெரும்பான்மையோர் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தினோம். அதை மறுத்த காங்கிரஸ்காரர்களோடு 'சாலஞ்ச்' விடுத்தோம். பிறகு தேர்தல் பிரசாரத்தின்போது பண்டித நேரு போன்றவர்கள் இந்தத் தேர்தல் மூலமே காங்கிரஸ் லீக் சர்ச்சை தீரவேண்டுமென்றும் இதில்தான் முஸ்லிம் லீகின் வண்டவாளம் விளங்கப் போகிறதென்றும் எதிர்ப் பிரசாரம் செய்துகொண்டலைந்தார். அப்போது நமது காயிதே ஆஜம் இந்தத் தேர்தலில் முஸ்லிம் லீக் சரியான படி வெற்றியடைந்தால் நிபந்தனையின்றி முஸ்லிம்களின் பாகிஸ்தான் திட்டத்தை ஒப்புக்கொள்ளும்படி சவால் விடுத்தார்கள். தேர்தலும் நடந்தது. காங்கிரஸ் வாதிகள் வெட்கமடையக் கூடிய வகையிலும் உலகத்திலேயே எந்நாட்டிலும் எந்தக்கட்சியும் அடைந்திருக்கமுடியாத அவ்வளவு பெரிய மஹத்தான வெற்றியை உலக சரித்திரம் போற்றக்கூடிய வெற்றியை பெரும்பான்மையாக நூற்றுக்கு நூறும் நூற்றுக்குத் தொண்ணூறுமான எண்ணிக்கைகளையுடைய மாபெரும்வெற்றியை கொண்டோம்.

இந்த வெற்றி உண்மையான பாகிஸ்தானின் வெற்றியே யாகும். இவ்வெற்றியை மூலகாரணமாகக் கொண்டு நிச்சயம் பாகிஸ்தானை அடைந்து தீருவோம்.

காங்கிரஸ்காரர்கள் உண்மைச் சுதந்திர வாதிகளா?

காங்கிரஸ்காரர்கள் நேர்மையுடைய அரசியல் வாதிகளாயிருந்திருப்பார்களானால், நமது சவாலை யேற்றுப் பாகிஸ்தான் திட்டத்தின் கீழ் ஒரு சரியான ஒப்பந்தத்திற்குவந்து இந்திய நாட்டின் அடிமைத்தளையை அறுத்து சுதந்திர அரசியலை நிர்மாணிக்க முனைந்திருப்பார்கள். ஆனால், அவர்கள் நோக்கம் இந்நாட்டு மக்கள் ஒற்றுமை மனப்பான்மையில் எல்லோரும் ஏகோபித்த வகையில் நாடு சுதந்திரமடைய வேண்டுமென்பதல்ல. எல்லோருக்கும் தாங்களே எஜமானர்களாயிருக்க வேண்டுமென்பதுதான். நாடு விடுதலை யடைய வேண்டுமென்ற எண்ணமிருக்கு மானால் இதுவரையில் நடந்த சமரச சந்தர்ப்பங்களை வீணாக்கி இருக்க நியாயமில்லை. அவர்களின் கருத்து இனி ஒரு காலமும் நிறைவேறப் போவதில்லை. இந்தியா சுதந்திரமடைய வேண்டுமென்றால் முஸ்லிம்களின் பாகிஸ்தான் திட்டத்தை ஹிந்து காங்கிரஸ் ஒத்துக் கொள்ளவேண்டும். இதுதான் இந்தியா துரிதமாய் விடுதலையடையக் கூடிய சுய நிர்ணய சுதந்திர திட்டமாகிய பாகிஸ்தான் என்பதை உலகோர் உணரட்டும்.

சென்னை மாகாண முஸ்லிம் லீக் காரியதரிசியும், அரசியல் நிர்ணய சபை அங்கத்தினரும், மதராஸ் லெஜிஸ் லேட்டிவ் கௌன்ஸில் அங்கத்தினருமான ஜனாப் K. T. M. அஹம்மது இப்ராஹீம் சாஹிப் B.A.B.L. அட்வகேட், M.L.C. அவர்கள் பாகிஸ்தானைப் பற்றி எழுதியுள்ள கட்டுரையின் சாராம்சத்தை அடியில் கண்டபடி தருகிறேன். (ஆ—ர்.)

ஜன சங்கியை

பாகிஸ்தானத்தில் அடங்கிய மாகாணங்கள்	நில விஸ்திரணம் சதுர மைலில்	மொத்த ஜன சங்கியை	முஸ்லிம்களின் எண்ணிக்கை	சீக்கியர்கள்	மற்றவர்கள்
பலுச்சிஸ்தானம்	54,456	5,01,631	4,38,930	11,918	50,783
சிந்து	48,136	45,35,008	32,08,325	—	13,26,683
வடமேற்கு எல்லைப்புறம்	14,263	30,84,334	28,10,865	62,411	2,11,058
பஞ்சாப்	92,865	2,8418,819	1,62,17,742	37.57,401	84,43,676
வங்காளம்	76,843	6,03,06,525	3,30,05,434		2,73,01.091
அஸ்ஸாம்	53,015	1,02,04,733	34,42,479		67,62,254
		10,70,51,050	5,91,23,775	38,31,730	4,40,95,545

N. B:—மேற்கண்ட புள்ளி விபரங்கள் சற்றேறக் குறைய 1941-ம் வருஷத்திய ஸென்ஸஸையும் அட்லாஸையும் ஒட்டி எழுதப்பட்டவை.

பாகிஸ்தானத்து மாகாணங்களின்

வருஷ வருமானம்

வடமேற்கு எல்லைப்புறம்	1,90,11,842
பஞ்சாப்	12,53,87'730
சிந்து	9,56,76,269
பலுச்சிஸ்தான்	* * * *
வங்காளம்	36,55,62,485
அஸ்ஸாம்	21,00,000
	60,77,38,326

உலகத்தை ஆட்டுவிக்கும் பற்பல பிரச்னைகளையும் தீர்த்து வைப்பதற்காக இன்று கையாளப்படும் ஒவ்வொரு முறையும் இஸ்லாமியத் தத்துவங்களையும் கொள்கை களையும் அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கிற தென்பதை, விஷயம் தெரிந்த எவரும் மறுக்க முடியாது. இந்த நிலைமையில் முஸ்லிம்களாகிய நமது பொறுப்பு மிகவும் மகத்தானது. நம் ஒப்பற்ற மார்க்கத்தின் உன்னத போதனைகளை நம் நடத்தையின் மூலமாக, நம் தினசரி வாழ்க்கையின் மூலமாக இந் நெருக்கடியான சந்தர்ப் பத்தில் உலகத்தோருக்கு எடுத்தோதுவது நமது பிரதான கடமையாயிருக்கிறது. அக் கடமையைச் சரியான விதத்தில் செய்து முடிப்பதற்கு முஸ்லிம்களுள் ஒற்றுமை அத்தியாவசியம். அதிருஷ்டவசமாக இஸ்லாத்தின் அரும்பெரும் வீரசிங்கங்களாயும் உன்னதத் தலைவர் களாயும் விளங்கி உலகப்பிரசித்தி பெற்ற அலிசகோதரர் களின் அபார முயற்சியின் காரணமாக இந்திய முஸ்லிம் களாகிய நாம் புத்துணர்ச்சி பெற்று இன்று நமது ஏக தலைவராகிய காயிதே ஆஜம் முஹம்மது அலிஜின்னா அவர்களின் ஒப்பற்ற தலைமையில் அகிலஇந்திய முஸ்லிம் லீக்கின் கொடியின் கீழ் ஒன்று பட்டு நிற்கிறோம். உலகில் தனது பழைய ஸ்தானத்தை இந்திய முஸ்லிம்கள் மூலமே இஸ்லாம் பெறுமெனப் பல அறிஞர்கள் கூறி வருவதை மெய்ப்பிப்பதற்கு ஓர் நற்குறியாகவே இதைக் கொள்கிறேன். இந்த ஒற்றுமையின் பயனாகவே, ஒரு பூமண்டலத்தின் முக்கிய அம்சங்களைக்கொண்ட இந்தியா வின் ராஜீய விமோசனத்துக்கு ஒரே வழியென நமது நீண்ட அனுபவம் காட்டிய பாகிஸ்தான் திட்டம், இந்திய முஸ்லிம்களின் இறுதி அரசியல் லக்ஷியமாக அமைந்துள் ளது. 1940-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் லாகூரில் நடை பெற்ற அகில இந்திய முஸ்லிம் லீக் மகாநாட்டில் இது சம்பந்தமான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. அதன்பின் பாகிஸ்தான் பெறுவதே இந்திய முஸ்லிம்களின் அரசியல் லக்ஷியம் என்ற 1941-ம்

வருஷம் ஏப்ரல் மாதத்தில் நம் மாகாணத் தலைநகராகிய சென்னையில் நடைபெற்ற அகில இந்திய முஸ்லிம் லீக் மகாநாட்டில் ஏகோபித்து முடிவு செய்யப்பட்டது. ஆகவே, பாகிஸ்தான் திட்டத்தை இந்திய முஸ்லிம்களின் அரசியல் லக்ஷியமாக்கிய பெருமை நம் மாகாணத்துக்கே உரியது. இவ்வாறு சென்ற 7-வருஷங்களாகப் பாகிஸ்தான் திட்டம் தெளிவான ரூபத்தில் நம் தேசத்தின் முன் இருந்து வருகிறது. தேச விடுதலையில் தாங்கள் மட்டுமே அக்கறை கொண்டிருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் தலைவர்கள் சிலர் அறிந்துகொள்ளப் பிரியப் படாததும் சிலர் தெரிந்து கொண்டு மாறாகத் திரித்துக் கூறுவதும் ஆச்சரியமாயிருக்கிறது. பத்துக்கோடி இந்திய முஸ்லிம்களின் சார்பாக வகுக்கப் பட்டிருக்கும் இத் திட்டத்தின் நோக்கம் என்ன? அவசியம் என்ன வென்பதைத் தெரிந்துகொள்ளச் சிறிதும் முயற்சிக்காமல் ஹிந்துப் பொது மக்களின் மனத்தில் துவேஷத்தையும் குரோதத்தையும் உண்டுபண்ணக்கூடிய சில சுலோகங்களை மட்டும் சிருஷ்டித்துக்கொண்டு அதற்கு விரோதமாக இவர்கள் பெரும் பிரசாரம் செய்து வருகின்றனர். இந்த விஷயத்தில் காங்கிரஸ் வாதிகளும், ஹிந்து மகா சபையினரும் மித வாதிகளும் ஒன்று பட்டிருக்கின்றனர் என்பது வெளிப்படை. காங்கிரஸ் சபையானது ஹிந்துக் களின் சபையேயன்றி இந்தியாவில் வசிக்கும் சகல வகுப்பினர்களுடையவும் மதத்தினர்களுடையவும் சபை யன்று என முஸ்லிம்கள் ஆதிமுதல் வற்புறுத்தி வருவதை இதுவும் உறுதிப்படுத்துகிறது. "நம் தேசத்தின் விடுதலைக் காக எங்களுடன் சேர்ந்து உழையுங்கள். விடுதலை யடைந்த பிறகு தேசத்தின் அரசியல் திட்டத்தை நிர்ணயித்துக் கொள்ளலாம். அதுவரையில் பாகிஸ்தான் என்பது என்னவென்றுகூட அறிந்து கொள்ள மாட்டோம்" என்று சொல்லுகின்றனர் காங்கிரஸ் வாதி களில் பலர். அதற்கு, "எங்களுடைய திட்டத்தை விளங்கிக் கொள்ளக்கூட இப்பொழுது இஷ்டப்படாத

வர்கள் பின்னல் எங்களிடம் நியாயமாக நடந்து கொள்வார்களென நாங்கள் எவ்வாறு நம்பமுடியும்? தேச விடுதலை கிடைத்த பிறகு, ஜனநாயக முறைப்படி பெரும்பான்மையினரின் முடிவுக்கே நீங்கள் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். உங்களுடைய திட்டத்தைக் கவனிக்க முடியாது என்று முஸ்லிம்களிடம் நீங்கள் சொல்லி விட்டால் நாங்கள் எவ்வித உரிமையுமின்றி உங்களுடைய தயவை எதிர்பார்த்தவர்களாய், "மயிலே! மயிலே!! இறகு போடு!!!" என்றுதானே கேட்டுக்கொண்டிருக்கவேண்டும். ஆதலால் இப்பொழுதே எங்களுடைய உண்மைகளைப் பற்றிப் பேசி முடித்துக் கொள்வோம். இந்தியாவின் விடுதலையில் முஸ்லிம்களுக்குள்ள ஆர்வமும், தாகமும் மற்ற மதத்தினருக்கும் வகுப்பினருக்கும் இருப்பதை விடச் சிறிதும் குறைந்ததில்லை. 1920-1-ம் வருஷங்களில் நாங்கள் உங்களுடன் தோளோடு தோள் இணைத்து தேச விடுதலைக்காகப் பாடுபடவில்லையா? சிறைகளை நிரப்ப வில்லையா? சொல்லொணுக் கஷ்டங்களை அனுபவிக்க வில்லையா? காங்கிரஸின் தற்போதைய அந்தஸ்தும் காந்திஜியின் மதிப்பும் பெரும்பாலும் தேச விடுதலைக் காக அக்காலத்தில் முஸ்லிம்கள் செய்த தியாகத்தின் பலனல்லவா? ஆதலால் எங்களுடைய உரிமைகளைப் பற்றி இப்பொழுதே பேசி முடித்துக் கொள்வோம். முடிவு செய்து விட்டால் தேச விடுதலைக்காக முழு மனதோடு உங்களுடன் நின்று நாங்கள் உழைக்கிறோம் என்று முஸ்லிம்கள் பதிலளிக்கின்றனர். முஸ்லிம்களின் இந்த வாதத்தில் என்ன தவறு இருக்கிறதென்று விளங்கவில்லை. ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட்டா லன்றி சுயராஜ்யம் பெறமுடியாதென ஆர்வத்துடன் இது வரை ஓயாது வற்புறுத்தி வந்த காந்திஜி, அதற்கு நேர் மாறுகத் தேசத்தை ஆளும் பொறுப்பைக் காங்கிரஸ் வாதி களிடம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஒப்படைத்துவிட் டால் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை தானுகவே உண்டாகி விடுமென்று இப்பொழுது அழுத்தமாக வாதிப்பதும்

தேசம் விடுதலையடைந்த பிறகுதான் முஸ்லிம்களின் பாகிஸ்தான் திட்டத்தைக் கவனிக்க முடியுமென்றும் இந்திய முஸ்லிம்கள் எவ்வித நிபந்தனையுமின்றி முஸ்லிம் லீக்தான் இந்திய முஸ்லிம்களின் பிரதிநிதி என்பதை வற்புறுத்தாமல் தேசவிடுதலைக்காகப் போராட வேண்டு மென்றும் பண்டித ஜவஹர்லால்நேரு கட்டளைப் பிறப்பித்துள்ளதும் முஸ்லிம்களினுடைய வாதத்தின் நேர்மையை ருஜூப்படுத்துகிறது.

பாகிஸ்தானின் திட்டந்தான் என்ன என்று இனிக் கவனிப்போம். நம் இந்திய தேச முழுவதையும் ஒரே அரசியல் அம்சமாகக் கொண்டு இங்கிலாந்தில் நடை பெற்றுவரும் ஜனநாயக முறையைப் பின்பற்றி நம் தேசத்திற்கும் அரசியல் திட்டம் வகுப்பதாயின் முஸ்லிம் களின் எண்ணிக்கையில் பத்துக்கோடி பேர்களாய் இருப்பினும் அவர்கள் என்றென்றைக்கும் சிறுபான்மை யோராகவே இருப்பார்கள். தேச பரிபாலனத்தின் ஒவ்வொரு காரியத்திலும் அவர்கள் பெரும் பான்மையோராகிய ஹிந்துக்களின் தயவை எதிர்பார்த்த வர்களாய் இருக்கவேண்டும். ஏனெனில் தற்பொழுதுள்ள தனி வாக்காளர் தொகுதிகளை எடுத்துவிடாமல் அப்படியே வைத்திருந்தாலுங்கூட மத்திய சட்டசபைகளில் முஸ்லிம்கள் 100க்கு 25பேர்கள் வீதம்தான் இருப்பார்கள். ஆனால் தனி வாக்காளர் தொகுதி ரத்து செய்யப்பட்டுப் பொது வாக்காளர் தொகுதிகள் ஏற்பட்டுவிட்டால் இந்த வீதாச்சாரப்படி கூட முஸ்லிம்கள் மத்திய சட்டசபை களுக்குத் தெரிந்தெடுக்கப் படுவார்களென்பதற்கில்லை. தவிர அவ்வாறு சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் முஸ்லிம்கள் கூட பெரும்பாலும் ஹிந்துக்களுக்குக் கட்டுப் பட்டவர்களாக இருப்பார்களேயன்றி முஸ்லிம்களின் உண்மைப் பிரதிநிதிகளாயிருக்க முடியாது. இவ்விதமாகச் சட்டசபைகள் மூலம் பார்லிமெண்டரி முறையில் மத்திய மந்திரிசபை அமைக்கும்போது அச்சட்டசபைகளில் பெரும்பான்மையினராக யிருக்கும் ஹிந்துக்கள் பிரியப்

பட்டால் தங்களுக்கு இஷ்டப்பட்ட முஸ்லிம்களை மந்திரிகளாகச் சேர்த்துக் கொள்ளலாம். இஷ்டமில்லாவிட்டால் எந்த முஸ்லிமையும் மந்திரியாகச் சேர்க்காமல் விட்டு விடலாம். சேர்த்தாலும் அவர்களுக்குப் போதிய செல்வாக்கு இராது. ஆகவே இவ்வித அரசாங்க முறையில் பத்துக்கோடி முஸ்லிம்களும் தங்களுடைய கலை, நாகரிகம், பாஷை, ராஜீயமுன்னேற்றம் முதலிய சகல விஷயங்களிலும் ஹிந்துக்களின் தயவு தாக்ஷண்யத்தையே எதிர்பார்த்து நிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். இதனாற்றான் ஜனநாயகமுறையைப்பற்றி விவாதிக்கும் பொழுது "யுத்தத்தில் முறியடிக்கப்பட்டு (சரணாகதியடைந்த) ஒரு பகைவனின் நிலைமையிலேயே சிறுபான்மையினரின் கக்ஷி இருக்கிறது. சிறுபான்மைக் கக்ஷி அறிஞர்களைக் கொண்டதாகவும் பெரும்பான்மைக் கக்ஷி, கல்வியறிவில்லாத அறிவிலிகளைக் கொண்டதாகவும் இருப்பினும் அவ்விதப் பெரும்பான்மைக் கக்ஷிக்கு மாறாகச் சிறுபான்மைக் கக்ஷிக்கு யாதொரு உரிமைகளும் கிடையா"வென ஓர் ஆங்கில அறிஞர் கூறுகிறார். இந்தியாவைத் தாய் நாடாகக்கொண்டுள்ள பத்துக்கோடி முஸ்லிம்களும் இவ்வித நிலைமையிலிருப்பதற்குச் சுயமதிப்புள்ள எவர்தான் சம்மதிப்பார்? தவிர, இந்தியா முழுவதுக்கும் இப்படிப்பட்ட ஒரே பார்லிமெண்டரி கவர்ன்மெண்டு ஏற்பட்டால், இந்தியாவிலுள்ள பற்பல மாகாணங்களுக்கும் பூரண உள்நாட்டுச் சுதந்திரம் கொடுக்கப்பட்டாலும் மாகாண விவகாரங்களில் மத்திய கவர்ன்மெண்டு தலையிடுவதற்கான சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படக்கூடும். அதன் காரணமாக முஸ்லிம்கள் பெரும்பான்மையினராயிருக்கும் பஞ்சாப், வங்காளம் போன்ற மாகாணங்களில் பெயரளவில் உள்நாட்டுச் சுதந்திரம் இருக்குமேயன்றி உண்மையில் மத்திய கவர்ன்மெண்டின் மூலம் ஹிந்து ஆட்சியே நடைபெறுமென்பது நிச்சயம். இத்தியாதி காரணங்களினாற்றான் ஒவ்வொரு மாகாணத்தையும் பூரண சுயேச்சை பெற்ற இராஜ்ஜியமாக அமைத்து

விடவேண்டும் என்றும் அந்தந்த இராஜ்ஜியத்திலுள்ள சிறுபான்மையினரின் கலா நாகரிக, பொருளாதார, ராஜீய உரிமைகளையும் மத உரிமைகளையும் பாதுகாப்பதற்கு அவசியமான ப்ராதுகாப்புகளை அரசியல் அமைப்பிலேயே ஏற்படுத்திவிட வேண்டுமென்றும், இந்த நோக்கத்துடன் தற்போதைய மாகாணங்களின் எல்லைகளை அவசியமாயின் திருத்தியமைத்துக் கொள்ளவேண்டும் என்றும் பாகிஸ்தான் திட்டம் கூறுகிறது.

இந்தத் திட்டத்தின் எந்த அம்சமாவது உலகத்தினரால் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியல் கொள்கைகளுக்காவது அனுபவத்துக்காவது மாறாயிருப்பதாகத் தெரியவில்லை. முஸ்லிம்களின் இரத்தத்தில் நூற்றாண்டுகளாக ஊறியிருக்கும் சுதந்திர ஆர்வமே இத்திட்டத்தை வகுத்திருக்கிறது. தங்கள் தேசம் பூரண சுதந்திரம் பெறவேண்டுமென்பதே அவர்களின் ராஜீய நோக்கம். அதே சமயத்தில் தங்கள் தேசம் அவ்விதம் சுதந்திரம் பெற்றபிறகு அதில் வசிக்கும் ஒவ்வொரு வகுப்பினரும் அந்தப் பூரண சுதந்திரத்தின் பலனை அனுபவிக்க வேண்டுமென்றும், சுதந்திர இந்தியாவில் ஒரு வகுப்பினர் மற்ற வகுப்பினர்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான நிலை ஏற்படக்கூடாதென்றும், முக்கியமாகப் பத்துக்கோடி முஸ்லிம்களுக்குத் தாங்கள் கஷ்ட நஷ்டப்பட்டுச் சம்பாதித்த சுதந்திரத்தை அனுபவிக்கும் பாத்தியதை நிரந்தரமாக இருந்து வரவேண்டும் என்றும் அவர்கள் விரும்புகின்றனர். மேலும், எல்லா மாகாணங்களுக்கும் ஒரேவிதமான அரசியலமைப்பு வேண்டுமென்பதே மேற்படி திட்டத்தின் அடிப்படையான தத்துவம். முஸ்லிம்கள் பெரும்பான்மையினராயிருக்கும் மாகாணங்களுக்கு ஒருவிதமான அரசியல் அமைப்பும், ஹிந்துக்கள் பெரும்பான்மையினராகயிருக்கும் மாகாணங்களுக்கு வேறுவிதமான அரசியலமைப்பும் நிர்ணயிக்க வேண்டுமென்று குறிப்பிடவில்லை இதுபோலவே முஸ்லிம்கள் பெரும்பான்மையினராயிருக்கும் மாகாணங்

களிலுள்ள ஹிந்துக்களுக்கு எவ்விதப் பாதுகாப்புக்களும் உரிமைகளும் அளிக்கப்படுமோ அதே பாதுகாப்புக்களும் உரிமைகளுமே ஹிந்துக்கள் பெரும்பான்மையினரா யிருக்கும் மாகாணங்களிலுள்ள முஸ்லீம்களுக்கு அளிக்க வேண்டுமென்றும் மேற்படி திட்டத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தவிர, ஹிந்து மாகாணங்களி லுள்ள முஸ்லிம்கள் எல்லோரும் முஸ்லிம் பிரதேசங் களுக்குக்குடியேறிச் சென்றுவிட வேண்டுமென்ற ஏற்பாடு கிடையாது. ஆகவே இத்திட்டம் நியாயத்தையும் சத்தியத்தையுமே அடிப்படையாகக் கொண்டிருக்கிற தென்பது வெளிப்படை. இங்ஙனமான திட்டத்தைக் கண்டு காங்கிரஸ் வாதிகள் மிரண்டோடுவதற்கு எவ்வித நியாயமுமிருப்பதாகத் தெரியவில்லை. எக்காலத்தும் ஒரே நாடாக இருந்த இத்தேசத்தைத் துண்டுபடுத்தக்கூடா தென்பதே அவர்களின் முக்கிய ஆக்ஷேபம். நம் தேசம் பல்லாயிர வருஷங்களுக்கிடையில் எக்காலத்திலாவது ஒரே ஜனக்கட்டு உள்ள ஒரே இராஜ்ஜியமாக இருந்த தாகச் சரித்திரம் தெரிந்த எவருங் கூறமுடியாது. 56 தேசங்கள் கொண்ட நாடு இதுவெனத் தமிழ் நாட்டில் பரம்பரையாக வழங்கி வருவது முற்றும் சரி என்பதை எவர்தான் மறக்கமுடியும்? அசோகர், அலாவுத்தீன், அக்பர், அவுரங்கசீப் முதலிய மன்னர்கள் இப்பெரும் கண்டத்தை ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவர இராஜீய காரணத்தை உத்தேசித்து அவரவர் காலத்தில் முயற்சித்த போதிலும் அவர்களின் முயற்சியின் விளைவாக எக் காலத்திலாவது ஒரு தேசம், ஒரு ஜனக்கட்டு, ஒரு ஜாதி என்ற அபிப்பிராயம் நம் நாட்டில் ஏற்படவில்லை என்பது பிரத்தியக்ஷம். ஒரு சமயம் திரு சாவர்க்கரின் ஜனன தினக் கொண்டாட்டத்தின் பொழுது முஸ்லிம்கள்மீதும் முஸ் லிம் லீகின்மீதும் விஷத்தைக் கக்கிய காலஞ்சென்ற ரைட் ஆனரபிள் ஸ்ரீனிவாச சாஸ்திரியாரே இதை ஒரு விதமாக ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்தியாவின் சரித்திரத் திலேயே பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்தான் தேசம்

முழுவதும் ஓரே கவர்ன்மெண்டின் கீழ்க் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதிலிருந்து இத்தேசத்தவர்களெல்லோரும் ஓரே ஜனக் கட்டாயிருக்கின்றனர் என்றாவது இத்தேசம் ஓரே இனமாக இருக்கிறது என்றாவது ஒருக்காலும் சொல்ல முடியாது. ஆகவே, மேற்கண்ட ஆக்ஷேபத்துக்குச் சிறிதும் ஆதாரமில்லை. தவிர, பற்பல மாகாணங்களையும் பாஷா வாரியாகப் பிரிக்கவேண்டுமென்னும் கொள்கையை ஒப்புக்கொண்டிருக்கும் காங்கிரஸ் வாதிகள் மதத்தை ஆதாரமாகக்கொண்டு தேசத்தைப் பிரிப்பதை ஆக்ஷேபிப்பது நமக்குச் சிறிதும் விளங்கவில்லை. பாஷைகளின் காரணமாக மக்களின் வாழ்க்கையிலாவது மனப்பான்மையிலாவது விசேஷ மாறுதல்கள் ஏற்படுவதில்லை. ஆனால், மதமோ மக்களின் வாழ்க்கையை உருப்படுத்துகிறது; ஒரு மதத்தைப் பின் பற்றுபவர்களுக்கும் மற்றொரு மதத்தைப் பின் பற்றுபவர்களுக்கும் அடிப்படையான கொள்கைகளில் வித்தியாசங்கள் ஏற்பட்டு அவரவர்களின் நாகரிகமே வேறுபட்டு விடுகிறது. ஆகவே, பாஷையை அடிப்படையாகக் கொண்டு பிரிப்பது நியாயமாயின் மதத்தை அடிப்படையாகக்கொண்டு பிரிப்பது பன்மடங்கு அதிக நியாயம். பிரசாரத்தின் மூலம் சிறுபான்மையினர் தங்களைப் பெரும்பான்மையினராக மாற்றிக்கொள்ளலாமாதலால் சிறுபான்மையினர் பயப்படத் தேவையில்லை என்று சிலர் வாதிக்கின்றனர். இராஜீயக் கொள்கைகளை ஆதாரமாகக்கொண்ட கட்சிகள் சம்பந்தப்பட்ட மட்டில் தான் சிற்சில சமயங்களில் இது சாத்தியப்படுமேயன்றி, மேலே விளக்கியிருக்கிறபடி மக்களின் வாழ்க்கையையே உருப்படுத்தும் மதங்களின் காரணமாக ஏற்பட்டிருக்கும் கட்சிகளைப் பொறுத்தவரை மேற்படி முறை சிறிதும் அநுபவசாத்தியமன்று. காங்கிரஸ் மந்திரி கோபால்ரெட்டியார் ஒரு சமயம் இதைத் தெளிவாக ஒப்புக்கொண்டிருப்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தவிர, இந்தியாவும் ஐரோப்பாக் கண்டத்தைப் போன்ற ஒரு விசாலமான

பிரதேசமாகவே இருக்கிறது. அந்த ஐரோப்பா கண்டத்தி லுள்ளோர் ஓரே நாகரிகத்தைப் பின்பற்றுவோர் எனச் சொல்லிக் கொண்டாலும் அவர்களிடையே எத்தனைத் தனி இராஜ்ஜியங்கள் ஏற்பட்டிருக்கின்றன? பெல்ஜியம், ஸ்விட்ஸர்லாந்து, பால்டிக் பிரதேசங்கள், பால்கன் பிரதேசங்கள், ஆயர்லாந்து முதலிய சிறுசிறு பிரதேசங்க ளெல்லாம் தனித்தனி நாடுகளாக அமைக்கப்பட்டிருக் கின்றன. ஸ்பெயின் தேசத்துக்கும் பிரான்ஸு தேசத் துக்கும் மத்தியில் அண்டோரா (Andorra) என்னும் ஒரு பட்டணம் இருக்கிறது. அதன் ஜனத்தொகை சுமார் 5000 தான். அதுவும் ஒரு தனி இராஜ்ஜியமாக அமைக்கப்பட்டிருக்கிறது. உலகத்திலே இவ்வாறிருக்கும் பொழுது லக்ஷக்கணக்கான-ஏன் கோடிக்கணக்கான- ஜனங்கள் வசிக்கும் பிரதேசங்களைத் தனி இராஜ்ஜியங் களாக அமைப்பது எந்த அரசியல் கொள்கைக்கு மாற்ற மென நாம் வினவுகிறோம். தவிர, முஸ்லிம் இராஜ்ஜியங் களிலுள்ள ஹிந்துக்கள் எவ்விதம் நடத்தப்படுவார் களென்பதைப் பற்றி எவ்விதச் சந்தேகமும் கொள்ள வேண்டியதில்லை. அந்நிய மதத்தினரை எவ்விதம் நடத்த வேண்டும் என்பதைப்பற்றி நமது திருமறை தெளிவாகக் கூறியிருக்கிறது. அதற்கேற்ப நமது நபி பெருமானவர் களும் தங்கள் தினசரி வாழ்க்கை மூலம் முஸ்லிம்களுக்கு வழி காட்டியிருக்கிறார்கள். சீனாய் மலையிலுள்ள செண்ட் காதரீன் மடாதிபதிகளுக்கு நம் நபி பெருமானவர்கள் அளித்தச் சாசனப் பத்திரத்துக்கு நிகரானதொன்றை உலக சரித்திரம் காட்டமுடியுமா? "அநியாயஞ் செய்யும் தன் வம்சத்தாருக்கு ஆதரவளிப்பவன் நம்மைச் சேர்ந்தவ னல்ல; தனது அதிக்கிரமத்துக்கு ஆதரவளிக்கும்படி பிறரை அழைக்கிறவனும் நம்மைச் சேர்ந்தவனல்ல; தன் வம்சத்தார் செய்யும் கொடுஞ் செயலுக்கு ஒத்தாசை செய்து சாகிறவனும் நம்மைச் சேர்ந்தவனல்ல" என்று எம்பெருமானவர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் அரசர்

களும் இவ்வுன்னதக் கொள்கைகளையும் அழகிய முன் மாதிரியையும் பின்பற்றியே நடந்து வந்திருக்கின்றனர். அதனாற்றான் முஸ்லிம் அரசாங்கங்களில் பிற மதத்தினர் பூரண சுதந்திரத்துடனும் சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். சில ஐரோப்பியக் கிறிஸ்தவ அரசாங்கங் களின் கொடுமையை பொறுக்கமாட்டாமல் எண்ணிறந்த கிறிஸ்தவர்களும் யூதர்களும் முஸ்லிம் இராஜ்ஜியங்களில் அடைக்கலம் புகுந்து வந்தது சரித்திர உண்மை. பிற மதத் தினரை இஸ்லாத்தில் சேரும்படி முஸ்லிம் அரசர்கள் பல வந்தப்படுத்தியதாகச் சொல்லப்படும் பழிக்கு ஆதாரமில்லை என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நம் தென் இந்தியாவில் அரசு செலுத்திய கர்நாடக நவாப்புகள், ஹைதர் அலி, திப்பு சுல்தான் முதலிய முஸ்லிம் அரசர்கள் ஹிந்துக் கோயில்களுக்குச் செய்த உதவிகள் எண்ணற் றவை. இவ்வாறு அவர்கள் செய்துள்ள உதவியைப்பற்றி ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆராய்ச்சி செய்து அதன் பலனை ஒருங்கு திரட்டிப் புத்தக ரூபமாக வெளியிடுவ தாயின் அது ஒரு ருசிகரமான பெருங்காவியமாக இருக் கும். மேலும், முஸ்லிம் அரசாட்சிக் கால முடிவு வரை இப்பிரதேசங்களில் ஹிந்துக்களே வெகு பெரும்பான்மை யினராயிருந்து வந்ததும், அவர்களது மதஸ்தாபனங்கள் நிலைத்து வளர்ந்து வந்ததும் கட்டாய மதமாற்றம் என்ற பழியை முழுதும் பொய்யாக்குகின்றன. ஆகவே, பாகிஸ்தான் திட்டம் அமுலுக்கு வந்தால் பிற மதத் தினரை எவ்வாறு நடத்தவேண்டும் என்பதற்கு முஸ்லிம் இராஜ்ஜியங்கள் ஒப்பற்ற முன் மாதிரிகளாக விளங்கும். அத்திட்டத்தின்படி அமையும் இராஜ்ஜியங்களிலுள்ள ஹிந்துக்களுக்கு எவ்விதக் கஷ்டமும் ஏற்படாது என்பதற்குச் சரித்திரம் தக்க சான்றாயிருக்கிறது.

நான் மேலே விளக்கியிருக்கிறபடி முஸ்லிம்கள் சுதந்திரப் பிரியர், சுதந்திரமில்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையல்ல என நம்புபவர். அத்தோடு மற்றவர்களும் சுதந்திரமடைவதற்கு உதவ விரும்புகிறார்கள். நமது

மாபெருந் தலைவர் காயிதே ஆஜம் ஜின்னா அவர்கள் இதைத் திரும்பத் திரும்ப விளக்கியிருக்கின்றார். நமது லக்ஷியமும் திட்டமும் எல்லோருக்கும் சுதந்திரமும் நியாயமும் வழங்குவதாயிருக்கின்றன. இதை விளங்க மறுத்து யார் ஆக்ஷேபித்தாலும், விஷம் கக்கினாலும், பய முறுத்தினாலும் முஸ்லிம்கள் அவர்களது சுதந்திரத்தை விட்டுக்கொடுக்க முடியாது. அதை அடைந்தே தீரு வார்கள். இவ்வுண்மையை உலகம் இதுவரை தெரிந்து கொள்ளாதிருந்தால் இனியாவது தெரிந்துகொள்ளட்டும். இவ்வறிஞரின் கருத்து மிகவும் போற்றுதற்குரியனவாக இருக்கிறது. (ஆ—ர்.)

காந்திஜீ இந்திய முஸ்லிம்களின் தலைவரா?

நம்முடைய மனச்சாட்சிக் கொத்த, தம்முடைய கருத்திற்கிசைந்த, தம்முடைய மனதர்மத்திற்குச் சிறந்த தெனப்பட்ட ஒரு மதத்தை ஒருவர் தம் விருப்பப்படி பின்பற்றி ஒழுகி நடந்துகொள்வதற்கு முழு உரிமை இருக்கிறது என்பதை நாம் மறுக்கவில்லை. இதை எவரும் மறுக்கவும் முடியாது. ஆனால் இவ்வாறு ஒரு மதத்தைப் பின்பற்றும் ஒருவர் தம் மனதிற்கிசைந்த மதத்தைப் பின்பற்றி ஒழுகாதிருக்கும் பிறருக்கும் சேர்த்துத் தாமே அரசியல் தலைவர் என்று கூறிக்கொள்வதும், தம்முடைய அரசியல் தலைமையைத் தம் மதத்தைப் பின்பற்றாத பிறர் மீது சுமத்தி, அதை ஒப்புக்கொள்ளுமாறு வற்புறுத்து வதும் கூடாதென்றே நாம் கூறுகிறோம். அப்படிப்பட்ட அரசியல் தலைமையை ஏற்றுக்கொள்ள முடியாதென்றே நாம் கூறுகிறோம். நாம் மேலும், சதிகளை வஞ்சகத் திட்டங்களை மோசக் கருத்துகளை மறைப்பதற்குரிய போர்வையாக அந்த மதம் பயன்படுத்திக் கொள்ளப் படுகிறது என்பதைத் தெள்ளத் தெளிவாக விளக்கி விட்டிருக்கும் போது அத்தகைய மதத்தைச் சேர்ந்த ஒருவர், மற்ற அனைவருக்குங் கூடத்தாமே தான் அரசியல் தலைவரென்று கூறிக்கொண்டால், அதை ஏற்றுக்

கொள்வது எப்படி முடியும்? காந்திஜீக்கு இந்துக் களிடையே நல்ல செல்வாக்கிருக்கலாம். அது கூட அவருடைய அரசியல் கருத்துக்களுக்காக - அவர் கொண்டுள்ள அரசியல் கொள்கைகளுக்காக - இந்துக்களிடையே அவருக்கு அத்துணைப் பிரமாதச் செல்வாக்கு இருப்பதாகக் கூற முடியாது. அவர் உயர் ஜாதி இந்துமத தத்துவத்தை - ஜாதி இந்து மதக் கொள்கையை அனுசரித்துக்கொண்டு வருவதாலேயே அவர் மாட்டு, இந்துக்களிடையே நல்ல செல்வாக்கிருந்து வருகிறது.

இந்துக்களுக்கு அரசியல் கொள்கை உண்டா?

காந்திஜீயின் போக்கு இங்ஙனமிருக்க, இதே சமயத்தில் முஸ்லிம் தலைவர்களைப் பாருங்கள்! ஜனாப்ஜின்னா தமக்கு எந்த விதமான தெய்விகச் சக்தியும் இருப்பதாகக் கூறிக் கொள்ளவில்லை; அந்தராத்மாவுடன் பேசுவதாகக் கூறிக்கொள்வதில்லை; தேவாம்சம் கற்பித்துக் கொள்வதில்லை. ஒரு தேசிய அரசியல் தலைவராக இருந்து, அந்த முறையில் தான் ஜனாப் ஜின்னா முஸ்லிம் பொது மக்களை ஒன்று திரட்டி வருகிறார்; முஸ்லிம் அறிஞர்களைத் தம் கொள்கையின் பக்கம் ஈர்த்து வருகிறார். முஸ்லிம் பொது மக்களிடையே ஜனாப்ஜின்னாவுக்குப் பெரும் செல்வாக்கு இருக்கிறது. ஏன்? அந்தராத்மாவுடன் இவர் பேசுவதால் அல்ல; அரசியல் துறையில் இவர் கொண்டிருக்கும் நேர்மையான கொள்கைகளும் நாணயமான நடவடிக்கையுமே யாகும். ஜனாப் ஜின்னா தம்முடைய சொற்பொழிவுகளிலும் அறிக்கைகளிலும் மத விஷயங்களையும் மத அனுஷ்டானங்களையும் சேர்ப்பதே கிடையாது. அவைகளை அரசியல் கொள்கையினூடே அவர் எந்த வகையிலும் கலப்பது கிடையாது. ஆனால் காந்திஜீயோ, இந்துக்களை ஒன்று படுத்துவதற்கும், அவர்களிடையே புத்துணர்ச்சி உண்டாக்கி, புனர் நிர்மாணம் செய்வதற்கும் மதத்தைத்தான் பயன் படுத்திக்கொண்டார். அவருடைய அரசியல் வாழ்வும் கொள்கையும் பிரசாரமும் மத தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டதே

யாகும். இந்துக்களுக்குக் கடந்த 2000 ஆண்டு களாகவே தங்களுக்கெனச் சொந்தமான அரசியல் திட்டம் எதுவும் அரசியல் கொள்கை எதுவும் இருந்த தில்லை. எனவே தான் காந்திஜீ தம்மை மகாத்மாவாக்கிக் கொண்டு ஜாதி இந்துக்களை ஒன்று திரட்ட மதத்தைத் துணையாகக் கொண்டு, தம்மை மக்கள் தெய்வீக மனித ராகக் கருதுமாறு (ஏன் தெய்வமாகக் கூடத்தான். வட நாட்டில் ஓர் ஊரில் காந்தி சிலை செய்து கோயில் கட்டி பிற இந்து மத தெய்வங்களை வழிபடுவது போல, இந்துக் கள் காந்திஜீயையும் வழிபடத்தொடங்கி விட்டனர்.) ஆனால் முஸ்லிம்களோ தங்களுடைய மத விஷயங்களைக் கவனித்து வந்ததோடு நின்று விடாமல் ஆதி முதலே அரசியல் தத்துவத்தையும் சேர்த்துக் கவனித்து வந்தவர் களாக, அரசியல் தத்துவம் மனத்தில் ஆழப்பதிந்தவர் களாகவே இருந்து வருகின்றார்கள். முஸ்லிம்களுக்கு அரசியல் வேறு மதத் துறை வேறு என்று பிரிந்தில்லை. ஆதிமுதலே அரசியல் தத்துவம் முஸ்லிம்கள் மனத் திலேயே வேரூன்றிப் பதிந்து விட்டிருக்கிறது. எனவே தான் சமூகத்தை மிகவும் நெருக்கிக் கொண்டிருப்பதும் அவசரமானதுமாக இருக்கும் அரசியல் விவகாரங்களை முஸ்லிம்களிடையே பரப்பி அவர்கள் அரசியல் துறையில் உணர்ச்சி பெறுமாறு செய்வது ஜனாப்ஜின்னாவுக்கு மிகவும் எளிதான வேலையாக அமைந்தது. அரசியல் விஷயங்களில் உணர்ச்சியூட்டும் வேலையை ஜனாப்ஜின்னா தாம் வைத்துக் கொண்டு மத விஷயங்கள் பூராவையும் உலமாக்கள் வசம் ஒப்படைத்து விட்டார். இந்த வகையில் எல்லா முஸ்லிம்களையும் அவர் ஒரே பொது மேடையில் ஒன்றாகத் திரட்டிக் கட்டுப்பாடடையச் செய்து விட்டார்.

சமரசம் ஏற்படுமா?

இந்தியாவின் அரசியல் பிரச்னை தீர, பாகிஸ்தான் ஒன்று தான் பரிகாரம் என்பதை இங்கு சற்றும்

சந்தேகமற்ற முறையில் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப் பட்டிருக்கின்றன. இந்தியா முழுவதற்கும் தாங்களே பிரதிநிதி என்று காங்கிரஸ் சபையும் காங்கிரஸ் தலைவர்களும் கூறிக்கொண்டிருக்கிற வரையில்—முஸ்லிம்களிடையே பிளவை உண்டாக்கவும், இலஞ்சம் அளித்தல், பதவிகள் அளிக்கும் ஆசை காட்டுதல் முதலியவற்றின் மூலம் ஒழுக்கம் கௌரவம் இல்லாத முஸ்லிம்களுக்கு ஊக்கமளித்து அவர்களை உற்சாகப்படுத்தவும் காங்கிரஸ் தனது பணத்தை வீணே செலவிடும் வரையில்—முஸ்லிம் லீக் இந்திய முஸ்லிம்களின் தனிப்பிரதிநிதிச் சபை என்ற உண்மையை அவர்கள் ஒப்புக்கொள்ளாதிருக்கும் வரையில்—இந்தத் தீய வழியில் அவர்கள் உழன்று கொண்டிருக்கும் வரையில்—சமரசமோ, பரிகாரமோ சுதந்தரமோ ஏற்படப்போவதில்லை.

முஸ்லிம்களின் தர்மகர்த்தா முஸ்லிம் சமுதாயமே.

காந்திஜீ, அகில லோகத்திற்கும் ஆலோசனை கூறுபவரைப் போன்ற இப்போதெல்லாம் பேசிக்கொண்டு வருகிறார். இந்தியா முழுவதற்கும், காங்கிரஸ்தான் பிரதிநிதி என்றும், காங்கிரஸ்தான் இந்திய மக்களின் தர்மகர்த்தா என்றும் காந்திஜீ கூறுகிறார். பீதியை உண்டாக்கக் கூடிய ஓர் நிலைமை ஏற்படவேண்டுமென்று தான் அவர் கோருகிறார். இங்கே 150 ஆண்டுகளாக இருந்து வரும் ஒரு தர்ம கர்த்தாவின் மூலம் நாம் போதுமான அனுபவத்தை அடைந்து விட்டிருக்கிறோம். மீண்டும் எங்களுக்குக் காங்கிரஸ் தர்மகர்த்தாவாக ஆக வேண்டியதில்லை. நாங்கள் இப்போது வளர்ந்து பருவ வயதை அடைந்து விட்டோம். இனி எங்களுக்குத் தர்மகர்த்தா தேவையில்லை. எனவே, இனிமேல் முஸ்லிம்களுக்குத் தர்மகர்த்தா முஸ்லிம் சமுதாயமேயாகும்.

காங்கிரஸ் ஆட்சியில் முஸ்லிம்களுக்குப் பெருந்தொல்லை.

பண்டிட் ஜவாஹர்லால் நெஹ்ரு பத்திரிகைக்காரர்கள் கூட்டத்தில் கூறி யிருப்பதை நாம் நம்ப முடியாது. இப்போதைய அரசியல் திட்டத்தின்படி காங்கிரஸ் மந்திரி சபைகள் ஆட்சி புரியும் மாகாணங்களி லெல்லாம், வாழ்க்கைத் துறை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நாளும் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப் படுவது மட்டுமின்றி நேர்மையும் நியாயமு மற்ற முறையில் நடத்தப் படுவதுடன், வெளிப்படையாகவே துன்புறுத்தப் பட்டும் வருகின்றனர். ஒவ்வொரு துறையிலும் தினசரி நாமடைந்து வரும் அனுபவம் இதுதான். காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாகாணங் களிலிருந் தெல்லாம் தினசரி பல புகார்கள் இது சம்பந் தமாக முறையீடுகள் வந்த வண்ணமாகவே இருக்கின்றன. பண்டிட் நெஹ்ரு கூறி யிருப்பவை களெல்லாம் வெறும் பிரசாரத்தை நோக்கமாகக் கொண்டவைதான். முக்கியமாக, காங்கிரஸ்காரர்கள் பெருந் தன்மையாக நடந்து கொள்ளுகின்றனர் என்று வெளி நாடுகளிலிருப் பவர்கள் கருத வேண்டுமென்பதற்காகச் செய்யப்படும் பிரசாரமே தவிர, இதற்கு வேறு பொருள் ஏதும் இல்லை. இப்போது கூடக் காங்கிரஸ்காரர்கள், முஸ்லிம்களை முன்னேறவிடாமல் தடை செய்வதில் தான் தீவிரமாக இறங்கி யிருக்கின்றனர். முஸ்லிம்களின் அரசியல் முன்னேற்றத்தைத் தடுப்பதில் தான் அவர்கள் அதிக கவனம் செலுத்துகின்றனர்; சிந்துவிலும் வங்காளத்திலு முள்ள முஸ்லிம் லீக் மந்திரி சபைகளைத் தகர்த்துக் குலைத்து விடப் பெரு முயற்சி செய்து வருகின்றனர்; பஞ்சாபிலும் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் தங்களுடைய சதி முயற்சிகளாலும் சூழ்ச்சிகளாலும் வஞ்சனைகளாலும் லீக் மந்திரி சபை அமைக்க முடியாதபடி காங்கிரஸ்காரர்கள் தடை செய்து வருகின்றனர்.

10 கோடி முஸ்லிம்களை நசுக்கிவிட முடியாது.

இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டு, கட்டுப்பாடும் வலிவு முடையவர்களாக விளங்கினார்களாயின், நம்முடைய எதிரிகள் செய்யும் கீழ்த்தரமான சதியாலோசனைகள் ஒன்றுகூட நிறைவேற முடியாமல் அனைத்தும் தோல்வியுற்று விடும். நம்முடைய கட்சி மிகவும் நியாயமானதும் நேர்மை யுடையபதுமாகும். ஆண்டவன் நம்முடன் இருக்கின்றான். இந்தியாவைச் சேர்ந்த 10 கோடி முஸ்லிம்களை நசுக்கிவிட முடியாது. ஓரே கொடியின் கீழ் நாம் ஒற்றுமைப்பட்டு வன்மை யுடையவர்களாகச் சேர்ந்து நின்றோமானால், நம்முடைய புனிதமான இலக்ஷியமாகிய பாகிஸ்தானை நமக்கு எத்தகைய கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்தாலும் சரி, இடுக்கண்கள்-இடையூறுகள் ஏற்பட்டாலும்சரி, நாம் எவ்வளவுதான் துன்பங்களை அனுபவிக்க வேண்டி வந்தாலும்சரி, நாம் நிச்சயமாக பாகிஸ்தானை அடைந்தே தீருவோம் என்பதில் எமக்குத்துளிக்கூடச் சந்தேகமே யில்லை. பாகிஸ்தானை நாம் அடையாவிடின் முஸ்லிம் இந்தியா அழிந்துதான் போகும்.

மாபெரும் அற்புதம்.

உலகில் எந்த அரசியல் கட்சியும் கண்டிராதபடி இந்தியமுஸ்லிம்களிடம் அற்புதமான கட்டுப்பாட்டையும் ஐக்கியத்தையும் கடந்த 9 ஆண்டுகளாக அகில இந்திய முஸ்லிம் லீக் நடத்தி வந்துள்ள தொண்டுகளையும் போராட்டங்களையும் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்! இந்திய முஸ்லிம்களை ஓரே கொடியின் கீழ் ஒன்று படுத்திக் கொண்டு வருவதற்காக அகில இந்திய முஸ்லிம் லீக் எவ்வளவு பாடுபட்டிருக்கிற தென்பதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்! இது ஒரு மாபெரும் அற்புதம் என்றே சிலர் கூறுகிறார்கள். ஓரளவுக்கு இது உண்மை யென்றே கூற வேண்டும். ஆனால் உண்மையான காரணம்

என்ன வென்றால், சகோதரத்துவம், சமத்துவம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமிய சகோதரத்துவமே இந்திய முஸ்லீம்களிடை இத்தகைய ஒற்றுமையை உண்டு பண்ணி வைத்து விட்டது. இது தான் உண்மையான காரணமாகும். இஸ்லாத்தின் கொள்கைகளுக் கேற்ப, சட்டதிட்டங்களுக் கேற்ப, சுதந்தரமான—கௌரவமான வாழ்க்கையை, நடத்த வேண்டுமென்றே நாம் விரும்புகின்றோம். அதற்காகவே, நாம் பாகிஸ்தான் கோருகின்றோம். இந்தியாவி லுள்ள இதர சமூதாயங்களின் நலன்களுக்கோ ஆக்கரை களுக்கோ, சௌகரியங்களுக்கோ இதனால் எத்தகைய கெடுதியோ தீமையோ ஏற்படுத்திவிட நாம் விரும்பவில்லை. இந்தியாவில் வசிக்கும் பிற சமுதாயத்தவர்களுடன் சுதந்தரமான வாழ்வு நடத்தட்டும். அந்தப் பிற சமுதாய மக்கள், தாங்கள் எங்கெங்கு மெஜாரிட்டியினராக இருக்கின்றனரோ அங்கெல்லாம் தங்களுக்குப் பிடித்த மான, தங்கள் சொந்தக் கொள்கைகளை அனுஷ்டித்துக் கொண்டு வருவதை நாம் ஆட்சேபிக்கவோ, தடை செய்யவோ தயாராக இல்லை. ஆனால் பிறரை அடக்கி யாளவோ, பிறரை அடிமைப்படுத்தி வைக்கவோ அவர்களுக்கு உரிமை கிடையாது. நாம் இந்துக் களுக்கு அடிமைகளாக இருந்து கொண்டிருப்பதை இன்னும் சகித்துக்கொண்டிருக்க முடியாது. இன்றைத் தினம் அரசியல் உலகத்தில் இந்துக்களுக்கும் முஸ்லிம் களுக்கு மிடையில் போராட்டம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இந்தப் போராட்டத்தைச்சரியான வகையில் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றால் இந்திய ஹிந்துக்களும் காங்கிரசும் சுமுகமாய்ப் பாகிஸ்தானை ஏற்றுக்கொள்ளவேண்டும். இதுதான் சுதந்திரத்திற்குச் சரியான வழியாகும்.

காலஞ்சென்ற மூஸ்தபா கமால் அத்தாதுர்க்கி சொல்வதுபோல், சொந்தத் தேச மக்கள் கட்டுப்பாடு, ஒற்றுமை இவைகளை அணிகலனுப்க் கொண்டு ஒன்று

பட்ட தேசமானது, பலத்தையும், நிர்மாண சக்தியையும் எதிர்த்துப் போர் செய்ய வல்ல நீண்ட பெரிய நிலப் பரப்பைக் கொண்டதும், விரோத மனப்பான்மையுள்ள மக்களைக் கொண்டதுமான நாட்டைக் காண மேலானது என்று கூறியுள்ளார்.

மேற்கண்டவையே, ஒத்தவகையிலும் உலகில் அரசியலின் மூலம் உண்மையான மனிதத் தன்மையை நிலை நிறுத்தவுமே இந்திய முஸ்லிம்கள் பாகிஸ்தான் கோருகின்றனர்.

நாம் முக்கியமாக ஆக்க வேலையில் ஈடுபடவேண்டும். ஆக்க வேலையின் மூலந்தான் நமது லட்சியம் கைகூடும். வெறும் வாய்ப் பிரசாரத்தைக் கொண்டு மாத்திரம் நாம் நம் சமுதாயத்தை உயர்த்திவிட முடியாது. நிகரற்ற வகையில் நாம் உலகில் உயர்ந்து வாழவும், வாழ்க்கை முறைகளைச் சீர்பட அமைத்துக் கொள்ளவும் நிர்மாணத் திட்டத்தைக் காணவேண்டும் அந் நிர்மாணத் திட்டத்தின் மூலந்தான் நாம் முன்னேற்றமடைய முடியும். ஆகையால் ஒவ்வொருவரும் இதற்காக உழைக்கவேண்டும். அப்படி உழைப்போமானால் பாகிஸ்தான் முஸ்லிம்களும் ஹிந்துஸ்தான் முஸ்லிம்களும் நன்மையடையலாம்.

உண்மையில் நிர்மாணத் திட்டத்தைச் செய்து முடிக்கவல்ல வேலை மக்கள் நல்லெண்ணத்தையும், ஆதரவையும் கொண்ட அரசாங்கத்தின் சக்தியைப் பொருத்துள்ளது. நம்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குவேண்டிய விவசாயம், தொழிற்சாலை இவைகளைத் திருத்தி, தற்காலத்துக்கேற்ப, இயந்திர மயமாக்க நம்முடைய முறையை மாற்றியமைக்கவேண்டும். பாசன வசதிக்கென ஆறுகள் பூராவும் பயன்படுத்த வேண்டும். எல்லா வகையான கைத்தொழில்களையும் முஸ்லிம்களிடத்தில் குறிப்பாக முஸ்லிம் பெண்களிடத்திலும் அதிகப்படுத்த வேண்டும். இன்னும் கணக்கற்ற நீர் வீழ்ச்சிகளைக் கொண்டு நமக்கு வேண்டிய மின்சார சக்தியை உண்டாக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

மேலும் காடுகளையும், அபரிமிதமான உலோகச் செல்வத்தையும், ஜனங்களின் நன்மைக்கென மாற்ற வேண்டும். மேற் சொன்ன முக்கிய அம்சங்களில் நம் நாடு இன்னும் சரியான முறையில் முன்னேக்கிச் செல்லாத காரணத்தினால் தான், நாம் இன்னும் ஏழ்மையிலும், பஞ்சத்திலும், வேலையில்லாத் திண்டாட்டத்திலும் அகப்பட்டு அல்லலுறுகின்றோம். நம்முடைய தேசத்தின் பண்டைக் கலாச்சாரம், சாஸ்திரம், நாகரிகம் போன்ற அரும் திறன்களை மேலும் உயர்த்தப் புத்துயிர் அளிக்க வேண்டியுளது. எனவே, நம்முடைய நாடு உலகிலுள்ள இதர முன்னேற்றத் தேசங்களுடன் தன் ஸ்தானத்தைப் பெறவும், நியாயம், சமாதானம், சகோதரத் தன்மை, சுதந்திர தாகம் கொண்ட மக்களுக்கும், தேசத்திற்கும், தன் அநுதாபத்தைக் காண்பிக்கவும் உள்ளநிலை அடையும் என்பது எமது நம்பிக்கை.

அணுவளவுகூட நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோம்.

பாகிஸ்தான் பெறும் விஷயத்தில் எவ்வளவுதான் தொல்லைகள் ஏற்பட்டாலும், இடுக்கண்கள் நேர்ந்தாலும் கஷ்டங்கள் நேர்ந்தாலும் அவற்றையெல்லாம் அனுபவிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். நமக்கெதிராக எவ்வளவு தான் தந்திரங்கள் கையாளப்பட்ட போதிலும் சரி, எவ்வளவுதான் நம்மைப் பயமுறுத்தினாலும் மிரட்டினாலும் சரி, எவ்வளவு தான் வற்புறுத்தினாலும் தொந்தரவு செய்தாலும் சரி, நம்முடைய பாகிஸ்தான் கோரிக்கையில் இருந்து ஒரு மயிரிழை கூட நாம் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. பாகிஸ்தானைப் பெற்றே தீருவதென்று நாம் செய்து கொண்டிருக்கும் உறுதியிலிருந்து ஒரு மயிரிழை கூட நாம் களைக்கவோ, பின்வாங்கவோ நழுவவோ போவதில்லை. இந்த மிரட்டல் பூச்சாண்டிகள் எல்லாம் நம் உறுதியைக் குலைத்துவிட முடியாது. என்ன

வந்தாலும் சரி நாம் பாகிஸ்தான் கோரிக்கையை நிறைவேற்றியே தீருவோம்.

நாட்டின் நிலையைச் சரியானபடி பிரிட்டிஷ் சர்க்கார் உணர்ந்து கொள்ளத் தவறி விடுமாயின், நாட்டின் நிலைமை எவ்வாறு இருக்கிறதென்பதைத் தீர ஆராய்ந்து பிரிட்டிஷ் சர்க்கார் தெரிந்து கொள்ளாமல் காங்கிரஸின் கைப்பதுமையாக இருந்து வேலை செய்து வருமாயின் இந்த விபரீதமான நிலைமை இதற்கு முன்னைய இந்திய சரித்திரத்தில் வேறு எப்போதுமே நடை பெற்றதாக ஆதாரம் எடுத்துக் காட்ட முடியாததாகவே ஏற்பட்டு விடும்.

முஸ்லிம்களுக்கோர் வேண்டுகோள்

நெருக்கடி மிக்க இச்சந்தர்ப்பத்தில், ஒவ்வொரு முஸல்மானும் எத்தகைய நிபந்தனையுமின்றி, எவ்வகையான காரணத்தைக் கொண்டும் ஒதுங்கியிராமல் முஸ்லிம் லீகை ஆதரித்து, அதன் கொடிக் கீழ்வந்து சேர்ந்து விடவேண்டும். முக்கியமாகக் கடந்த சில மாதங்களாக நடந்த சம்பவங்களைக் கண்ட பிறகு முஸ்லிம்கள் அனைவரும் முஸ்லிம் லீகைத் தழுவியே நிற்கவேண்டும். முஸ்லிம்களுக்குள்ளேயே சகோதரச் சண்டைகள் நிகழ்த்திக் கொண்டிருக்க வேண்டாம். ஒரே கொடியின் கீழ் ஒரே மேடையில் ஒரே கட்டுப்பாடான ஒன்றுபட்ட சமுதாயத்தினராக நிற்போமாக. ஒற்றுமை, நம்பிக்கை, ஒழுங்கு, நியதி, கட்டுப்பாடு ஆகியவற்றை நமது இலட்சியங்களாகக் கொண்டு எத்தகைய கொடிய நிலை ஏற்பட்ட போதிலும் அதைப் பரிபூரண ஒற்றுமையுடனும் உறுதியுடனும் கட்டுப் பாடடைந்த ஒரு பெரிய சமுதாய மக்களாக நின்று சமாளிக்கத் தயாராயிருப்பதற்குரிய உறுதி பூண்டு விட்டவர்களாக விளங்குவோமாக. ஆண்டவன் நம்முடன் இருக்கிறான். எனவே நாம் நிச்சயமாக வெற்றி பெற்றே தீருவோம்.

வாழ்க பாகிஸ்தான், ஓங்குக முஸ்லிம் லீக்.

சங்கீத உலகில் தமிழ் நாட்டில் சிறந்து விளங்கும் இசை ஒளி கும்பகோணம் A. D. சுல்தான் அவர்களை அறியாதவர்கள் யாருமில்லை என்றே சொல்ல வேண்டும். அன்னாரின் சங்கீதத்தை H. M. V. கிராமபோன் கம்பெனி ரிகார்டுகளில் கேட்கவேண்டியது அவசியமாகும். ஷெய்யார் நாகூர் ஸாஹுல்

ஹமீது ஆண்டகையின் மீதும், நபிகள் நாயகம் மீதும் கர்நாடக சங்கீத முறையிலேயே பாடியிருக்கும் பாடல்களை மாஸ்டர் வாய்ஸ் கம்பெனியார் அதிசீக்கிரத்தில் வெளியிடுவார்கள். அன்பர்கள் அனைவரும் வாங்கி ஆனந்திக்குமாறு கோரப்படுகிறது.

சிறந்த தலையங்கம், 'டான்' மொழி பெயர்ப்புகள்

வகைவகையான கட்டுரைகள் நிறைந்து

வெளிவரும்,

சன்மார்க்க சங்கு

(மாதமிருமுறை)

வருட சந்தா ரூ. 3—8—0.

சன்மார்க்க சங்கு, காரைக்கால்.

தெளிவான அரசியல் கருத்துக்கள்

அருமையான கட்டுரைகள்

உடனே சந்தாதாரராகச் சேருங்கள்.

பாகிஸ்தான்

(வாரப் பதிப்பு)

வருட சந்தா ரூ. 5—0—0.

பாகிஸ்தான் காரியாலயம்,

ஈரோடு.